767
1·21

SREEPALAN.

Published by:

Dharmaseelan Office
MADRAS.

Q3:22:g
N21
59517

ஸ்ரீ பாலன்.

தருமசீலன் ஆபீஸாரால்
பிரசுரிக்கப் பெற்றது.

தருமசீலன் அச்சுக்கூடம்.
சென்னை.
1921

All rights reserved. Price As. 10

Printed at the
Dharmaseelan Press, Madras.

முன்னுரை

ஸ்ரீபாலன் என்னும் இக் கதையானது ஜைனர்களுக்கு முக்கிய நூலாகிய மஹா புராணத்தில் உள்ளது. இதனை நோன்புக் கதை யென்றும் ஜைனர்கள் வழங்குவர். இதில் மஹா பதிவிரதையாகிய ஒரு பெண் சித்த சக்கர நோன்பை அனுஷ்டித்துத் தன் கணவனுடைய பெரு வியாதியைத் தீர்த்துத் தன் கற்பை உலகத்தில் நிலை நாட்டிய சிறந்த விருத்தாந்தமே பெரும் பான்மையும் அடங்கி யிருத்தலின் ஜைன ஸ்திரீகள் எல்லோரும் தங்கள் தங்கள் பதிகளுக்கு க்ஷேமம் உண்டாகுமாறு இதனைப் பக்தியுடன் வாசித்து வருவது வழக்கம். மற்ற ஆடவர்களும் பெண்களுங் கூட இதனை விருப்பத்தோடு படிப்பதுண்டு. இதனால் பெண்களுடைய கற்பின் மகிமையை அறிவதோடு சத்புருஷர்களின் லக்ஷணம், நட்பின் உயர்வு, சிநேகத் துரோகிகள் தீங்கடைதல், வஞ்சனைக் காரர்கள் சஞ்சலப் படல், பொறுத்தார் அரசாளுதல், பொங்கினோர் காடுறைதல், பெண் வீட்டில் சேர்ந்திருப்பதனால் உண்டாம் இழிவு, முயற்சி திருவினையாக்குதல், தீங்கு செய்வார்க்கு நன்றே புரியும் உத்தமர்க்குண்டாம் உயர்வு முதலிய பல அரிய நீதிகளை யெல்லாம் நன்குணரலாம். இத்தகைய சிறப்பு வாய்ந்த இக் கதையானது வடமொழியிலிருந்து வந்ததால் தமிழர்க்குப் பெரிதும் பயன் படாதிருந்து வந்தது. ஆதலின் இதனைத் தமிழில் எழுதி வெளிப்படுத்தினால் தமிழ் நாட்டார் பலர்க்கும் பயன்படு மென்று கருதி ஜைனர்களால் எழுதப் பட்டிருந்த மணிப்பிரவாள நடையின் ஆதாரவைக் கொ

ண்டு இந்நூல் இப்பொழுது எம்மால் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. இது மானிடர்க்கு நல்ல நீதிகளைப் போதிக்கும் நூல்களில் ஒன்றாயிருத்தலின், இதனைத் தமிழர் ஒவ்வொருவரும் விரும்புவார்களென்றே நாம்நம்புகிறோம். வித்தியார்த்திகளாகிய ஆண் மக்களுக்கும், பெண் மக்களுக்கும் அறிவை விருத்தி செய்வதற்கு இந் நூல் இன்றியமையாத தாகும்.

இங்ஙனம்:

சென்னை
25-1-1921

மானேஜர்,

தருமசீலன் ஆபீஸ்,

—:(o):—

ஸ்ரீ பாலன்.

—(o)—

அத்தியாயம்-1.

மதனசுந்தரியின் திருமணம்.

புண்ணிய பூமியாகிய இப்பரத கண்டத்திலே பூர்வத்தில் மிகவுஞ் சிறப்புற்றோங்கிய பல தேயங்களுள் அவந்தி தேசமானது அவற்றிற்குத் திலதம்போன்றுவிளங்கி வந்தது. இது, நீர்வளமும் நிலவளமும்பொருந்தி,விட்டில்,தன்னரசு, வேற்றரசு, யானை, மிகுமழை, மிகுகாற்று, கிள்ளை, நஷ்டம்,என்னும் எட்டுவித நாட்டுக் குற்றங்களினின்றும் நீங்கி, மிக்கஇராஜ விசுவாசமுள்ள உத்தம குடிஜனங்களையுடையதாய்லுப் புயர்வற்றுச் சிறந்த திரு நாடாகும். இந் நாட்டில் தருமமே மிகுந்திருப்பதால் மாதம் மும்மாரி வழுவாது பெய்யும்; விளை நிலங்களெல்லாம் விசேஷ பலன்களைக் கொடுக்கும்; பசுக்கள் மிகவும் செழிப்புற்று விருத்தியடையும்; குடி ஜனங்களெல்லோரும் பருவத்தே பயிர் செய்து நிலங்களில் வரும் விளைவை ஈட்டி ஆறிலொரு பங்கை அரசனுக்குச் செலுத்தி, ஐந்து பங்கைத் தத்தம் இல்லங்களிற் சேர்த்து, பிதுர்க்களையும், தெய்வங்களையும், விருந்தினர்களையும், சுற்றத்தார்களையும், தங்களையும், பேணி அறத்தை வளர்ப்பார்கள்; அதனால் அளகை நாட்டினும் அதிகரித்த செல்வமானது

இந்நாட்டில் நாடோறும் விருத்தி யடையும்; இந்நாட்டில் எல்லோரும் ஐசுவரியமுடையவர்களாகவே யிருப்பதால் எப்போதும் யாசகரைக் காண்பது அரிதாகும்; அதனால் அங்குள்ளவர்கள் உணவு சமைத்து உண்ணப் போகும் சமயத்தில், "யாசகர்க்கிட்டுண்ணும் பாக்கியத்தை நாம் பெற்றோமில்லையே" என்று கவலையடைந்து உண்ணுவார்கள்; அவர்களுக்கு இக்கவலையின்றி வேறுகவலை எப்பொழுதும் ஏற்படுவதில்லை. இன்னும் இந்நாட்டின் சிறப்புக்களோ எண்ணற்றனவாம். முடிவாகக் கூறுமிடத்து இதற்கு உம்பர் நாடும் உவமையாகாதென்றே உரைக்கலாம்.

இத்தகைய நாட்டிற்கு இராஜதானிப் பட்டினமாக விளங்குவது உஜ்ஜயினி நகரமாம். இந்நகரமானது உயர்ந்த பல தெய்வாலயங்களாலும், விண்ணுற வளர்ந்த கோபுரங்களாலும், பல எந்திரப் பொறிகளமைந்த கோட்டைகளாலும், ஆழ்ந்த அகழிகளாலும், உயர்ந்த இராஜ மாளிகைகளாலும், பிராம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் நான்கு வருணத்தாரும் வசிக்கின்ற அழகிய தெருக்களாலும், நாடு, நகர், கடல், மலை, ஆகிய நான்கு இடங்களிலு முண்டாகும் பொருள்களெல்லாம் குவிந்து கிடக்கின்ற கடைவீதிகளாலும், தேரோடும் வீதிகளாலும், யானைகளை நடைபழக்குகின்ற செண்டு வெளிகளாலும், குதிரைகளைச் செலுத்தும் வையாளி வீதிகளாலும், சிறப்புற்று விளங்குவது. இந்நகரத்தில் ஆங்காங்கே தெய்வங்களுக்கு விழா நடத்துவதாலுண்டாகும் வாத்திய முழக்கங்களும், மனிதர்க்கு நடத்தும் மணச் சடங்கு முதலிய மங்கள காரியங்களில் முழங்கும் வாத்திய கோஷ்டங்

களும், வேதபாராயண கோஷ்டங்களும், கல்வி பயில்வதாலுண்டாம் பேரொலியும், ஆயுதப் பயிற்சி செய்வதாலுண்டாம் ஆர்ப்பரிப்பும், நடன முழக்கமும், சங்கீத நாதமும் மிகுந்திருக்கும். ஆடவர்களும் ஸ்திரீகளும் தங்கள் தங்களுக்குரிய ஒழுக்கங்களினின்றும் எள்ளளவும் தவறாது இல்லறம் நடாத்தி எல்லையற்ற புகழுடையவர்களாய் என்றும் உள்ளக் களிப்போடு வாழ்வார்கள். அவர்களுடைய இனிய வாழ்க்கையானது நாகர் வாழ்க்கையினும் மேம்பட்டதாகும்.

இத்தகைய கீர்த்தி பொருந்திய இந்நகரத்தில் முற்காலத்தில் பிரஜாபாலன் என்னும் அரசன் செங்கோல் நடாத்திவந்தான். இவனே உத்தம லக்ஷணங்களோடுகூடிய மகாபுருஷன்; தன்னுயிரைப்போல மண்ணுலகிலுள்ள மற்றெல்லா வுயிர்களையும் பாவிக்கும் ஜீவதயையுள்ளவன்; அடக்கம், சாந்தம், பொறுமை முதலிய நற்குணங்களெல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவன்; தெய்வபக்தி நீங்காத சிந்தையான்; அறமே குடிகொண்டிருக்கும் உள்ளத்தான்; படைக்கஞ்சா வீரன்; முடி, குடை, கவரி, தோட்டி, முரசு, சக்கரம், யானை, கொடி, மதில், தோரணம், நீர்க்குடம், பூமாலை, சங்கு, கடல், மகரம், ஆமை, இணைக்கயல், சிங்கம், தீபம், இடபம், ஆசனம் என்னும் இருபத்தொரு அரச சின்னங்களை யுடையவன்; மந்திரியர், புரோகிதர், சேனாபதியர், தூதர், சாரணர், என்னும் ஐவகைக் கூட்டங்களை விட்டு நீங்கப் பெறாதவன்; மந்திரியர், கருமாதிகாரர், சுற்றத்தார், கடைகாப்பாளர், நகரமாக்கள், படைத்தலைவர், இவுளிமறவர், யானைவீரர், என்னும் எண்வகைத் துணை

வர்களையுடையவன்; நட்பாளர், அந்தணாளர், மடைத் தொழிலாளர், மருத்துவக் கலைஞர், நிமித்தகப் புலவர் என்னும் ஐந்துவகை உறுதிச் சுற்றங்களைப் பெற்றவன்; படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் அறுவகை அரசியல்களையுடையவன்; மலை, காடு, மதில், கடல் என்னும் நால்வகை அரண் சேரப்பெற்றவன்; ஆறிலொரு கடமை வாங்கிக் குடிகளை யாதரிக்கும் அருளுடையவன்; அந்தணர், அறவோர், பாவையர், பாலர், ஆசாரியர், தாய் தந்தையர், குருக்கள் முதலியவர்களையும், பசுக்களையும் ஆதரிக்கும் விஷயத்தில் தன்னுயிரையுங் கொடுத்துப் பாதுகாக்கும் பெருங் குணமுள்ளவன்; இத்தகைய தருமகுண சீலனாகிய இவ்விறைவனுக்குத் தகுதியாக, மகா உத்தமியாகிய சௌபாக்கிய சுந்தரி யென்பாள் மனைவியாக அமைந்திருந்தாள். இவள் அருந்ததி முதலிய உத்தம ஸ்திரீகளும் கொண்டாடத் தக்க கற்பிலக்கணம் பெற்றவள்.

இந்த பிரஜாபால மகாராஜன் தன் மனைவியோடு வாழ்ந்து வருங் காலத்தில் இவனுக்கு சுரசுந்தரி, மதனசுந்தரி என்னும் இரண்டு புத்திரிகள் தோன்றி மிக்க அழகுடையவர்களாய் வளர்ந்து வந்தார்கள். இவர்களுள் சுரசுந்தரி என்னும் இளையாள் சிவசர்மன் என்கிற அந்தணனிடத்தில் புறச்சமய சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ச்சி யடைந் திருந்தாள். மூத்தவளாகிய மதனசுந்தரி யென்பாள் மகாபதிவிரதா குணமமைந்த மாது சிரோமணி யாதலின், சுயம்பு திலகமென்னும் ஆலயத்தை அடைந்து ஆங்குள்ள கடவுளை வணங்கி அவர் அருள்பெற்று, யமதர முனிவரைக் கண்டு நமஸ்

கரித்து அவரிடத்தே அநேக தர்ம சாஸ்திரங்களைக் கேட்டுச் சகல சாஸ்திர பண்டிதை யாயினள். இங் ஙனம் இவர்கள் கல்வித் தேர்ச்சி யடைந்த பின்னர் மங்கைப் பருவத்தை யடைந்து தாய் தந்தையர் மகிழ உவளகத்தில் உவப்புடன் வசித்து வந்தனர்.

இவ்வாறு தன் புத்திரிகள் பருவ மடைந்தது கண்டு பிரஜாபால மகாராஜன் "நம்புத்திரிகளோ மண ஞ்செய்தற்குரிய பருவத்தை அடைந்தனர். இனி இவர் கட்கு மணம் முடிக்கா திருப்பது அழகன்று. பருவ மடைந்த பெண்களை விரைவில் ஓர் தகுதி யுடைய மணமகன்பால் சேர்விக்காது வீட்டில் வைத்திருப்ப தைப் போன்ற அறிவற்ற செய்கை உலகத்தில் வேறெ துவும் இல்லை. ஆதலின், நாம் இவர்க்கு விரைவில் மணம் முடிக்க வேண்டும்" என்று நினைத்து ஒருநாள் இளைய குமாரியாகிய சுரசுந்தரியை அழைத்து அவளி டம் "என் அருமைப் புதல்வியே! நீ மங்கைப் பருவ த்தை அடைந்திருக்கின்றாய் யாதலின், ஒரு மணமகனு க்கு மனைவியாய் இல்லறம் நடத்தும் கடமையை மேற் கொள்ள வேண்டும். ஆதலின் நீ உனக்கு விருப்ப மான ஒரு புருஷனைத் தேர்ந்து எனக்குத் தெரிவிப்பா யாயின் அவனுக்கே உன்னை நான் மணம் முடித்து வைக்கின்றேன்; உன் அபிப்பிராயத்தைக் கூறுவா யாக" என்று வினவினன். அவளுக்கு அஹிச்சத்ர புராதிபதியின் புத்திரனாகிய அரிந்தமன் என்பவன் மேல் விருப்பம் ஏற்பட்டிருந்தமையால், அவள் பிரஜா பாலனை நோக்கி "தந்தையே! நான், அஹிச்சத்ரபுராதி பதியின் புத்திரரையே எனக்கு நாயகராகக் குறித்திரு

க்கின்றேன்” என்றனள். அது கேட்டு பிரஜாபால மகாராஜன் அவளுடைய விருப்பத்தின்படியே ஒரு சுபதினத்தில் அரிந்தமனுக்கு அவளை மணஞ் செய்து கொடுத்து அவளுக்கு வேண்டிய ஸ்ரீதனங்களையும் உவந்தளித்தான்.

அதன் மேல் தனது மூத்த புதல்விக்கும் அவ்வாறே மணம் முடிக்கக் கருதி, பிரஜாபாலன் ஒருதினம் அவளை அழைத்து, தன்னுடைய எண்ணத்தை அவளிடம் தெரிவிக்கக் கருதியிருந்தான். அத்தருணத்தில் மதன சுந்தரி யென்பாள், அருகக் கடவுளின் ஆலயம் அடைந்து பஞ்சாமிர்தத்தாலும், சந்தனக் குழம்பாலும், கந்தோதகத்தாலும் சர்வக்ஞனாகிய அக்கடவுளின் முடிமிசை அபிஷேகம் செய்து, அவர் அடிமிசைசாஷ்டாங்கமாக வணங்கித் துதித்து, அங்ஙனம் அபிஷேகம்செய்த கந்தோதகத்தை எடுத்துக்கொண்டு மீண்டு வந்து தன், தாதையைக் கண்டு வணங்கி அவனுக்கு அவ்வபிஷேக உதகத்தைக் கொடுத்துத் தானும் சிரசில் தெளித்துக்கொண்டு முகமலர்ச்சியோடு நின்றாள். அப்போதுபிதா மதனசுந்தரியை நோக்கி ‘‘என் அருமைப் புதல்வியே! உனக்கோ விவாகம் செய்ய வேண்டிய பருவம்வந்து விட்டது; இனிச் சும்மா விருத்தல் தகாது; காலமறிந்து செய்வதைச் செய்தலே அறிவுடையோர்க்கழகு; பருவமடைந்த பெண்கள் மணமின்றி யிருத்தல் மகாபாவமாம்; ஆதலின் நீ உன் தங்கையைப் போலவே ஒருவரைத் தேடி மணம் முடித்துக் கொள்ள வேண்டும்;

“பெண்பேசுங் காலைப் பிதாவிருப்பும் வித்தையே
எண்ணில் தனம்விருப்பும் ஈன்றதாய்-மண்ணின்மிசைக்

கூடியநற் சுற்றம் குலம்விரும்பும் காந்தனது
பேரழகு தான்விரும்பும் பெண்."

என்றபடி மணம்பேசுங்காலத்தில் பெண்ணுக்குப்பிதாவானவன் நல்ல கல்வியுடைய மாப்பிள்ளையை விரும்புவான்; தாயானவள் தனவந்தனாகிய மருமகனைவிரும்புவாள்; சுற்றத்தார்கள் நல்ல குலத்திலுதித்த மணமகனைத் தேடுவார்கள்; பெண்ணோ 'கைநிறைந்த காசினும் கண் நிறைந்த கணவனே சிறந்தவன்' என்றபடி அழகோடு கூடிய நாயகனையே விரும்புவாள்; மற்ற எல்லாருடைய அபிப்பிராயங்களைக் காட்டிலும் பெண்ணின் அபிப்பிராயத்தைத் தெரிந்து அவளுடைய விருப்பப்படி தாய்தந்தையர்மணத்தை நிறைவேற்றுதலே மங்கலவாழ்க்கைக்கேதுவாம்; எப்பொழுதும்,

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

என்பதற்கிணங்கக்கணவனுக்குத்துணையாயிருந்து இல்லற தர்மங்களைநடத்தி மனமொத்தவாழ்வை யுண்டாக்கி,முத்தி வீட்டை அளிப்பவள் பெண்ணே யாதலால் அவள்மனத் திருப்தியோடு வாழ்வதற்கு அவளுடைய மனத்தில் எண்ணிய கணவனை அவளுக்குச் சேர்ப்பித்தலே சிறப்புடைத்தாகும்; அங்ஙனமின்றி மற்றவர்களுடைய அபிப்பிராயங்களை அநுசரித்துப் பெண்ணின் மனத்திற்குப்பொருந்தாத மாப்பிள்ளைக்கு அவளை மணஞ்செய்து கொடுத்தால் அவள் ஆயுள் முடிவு வரையிலும் துக்க சாகரத்திலேயே மூழ்கி உயிர்விடுவாள். அந்தச் சதிபதிகளின் வாழ்க்கையும் திருப்தியான

வாழ்க்கையாக மாட்டாது. இங்ஙனம் ஒருஸ்திரீ புருஷரின்இனிய வாழ்க்கையைக் கெடுத்தல் மகா தோஷமாம். இதனை உணராத சிலர்'குலத்தில் குரங்கெடு'என்ற ஒருபழமொழியைத் தங்கள்போக்கிற்குத் துணையாகவைத்துக் கொண்டு நல்ல சௌந்தரியமுள்ள பெண்ணுக்குத் தங்கள் குலத்தில் குரங்குபோலிருக்கும் குரூபியாகிய மாப்பிள்ளையைக் கொண்டுவந்து சேர்ப்பார்கள்;சிலர் பணமிருந்தால் போதுமென்று தனவந்தனான ஒரு குஷ்டரோகிக்குத் தங்கள் அருமைச்செல்வியைக் கொடுப்பார்கள்; சிலர் மாப்பிள்ளைஎப்படி யிருந்தாலும் சரி, வித்தையிருந்தால் போதும் என்று நினைத்து நித்திய தரித்திரனும் விகார சொரூப முள்ளவனுமாகிய ஒரு படித்த மாப்பிள்ளைக்குத் தங்கள் அழகிய புதல்வியைத் திருமணம் முடித்துக் கொடுப்பார்கள்; சிலர், ஆடுமாடுகளை விலைக்கு விற்ற மாதிரி அதிகப் பணம் பரியமாகக் கொடுப்பவர்களுக்கு, அவர்கள் எத்தன்மை யுடையவர்களா யிருந்தாலும் இலக்குமி போன்ற தங்கள் குமாரத்தியைக் கொடுத்து விடுவார்கள்; இன்னும் குலசுத்தம் ஒன்றையே பெரிதாகப் பாராட்டும் சிலர், தங்கள் குலத்திலுள்ள ஒரு மாப்பிள்ளை படியாத நிர்மூடனா யிருந்தாலும் அவனுக்கு அதிகப் பணத்தையும் வரதக்ஷிணையாகக் கொடுத்துப் பெண்ணையும் மணம் முடித்துக் கொடுக்கிறார்கள்; இவ்வழக்கத்தால் சில பெண்களை வைத்திருப்பவர்கள் தங்கள் ஆஸ்திகளை யெல்லாம் மாப்பிள்ளைகளுக்கு வரதக்ஷிணையாகக் கொடுத்து விட்டு வறுமையாளராகித் தவிக்கின்றார்கள். வரதக்ஷிணை கொடுக்கமுடியாதவர்கள் எப்படியாவது தங்கள் குலத்திலுள்ள ஒரு

வனைச் சரிப்படுத்தி அவனுக்குத் தங்கள் பெண்ணைக் கொடுக்க முயல்வார்கள்; அவ்வாறு கொடுத்தாலும் அந்தப் பெண்ணிற்குச் சந்தோஷ வாழ்க்கை ஏற்படுவதேயில்லை. வரதக்ஷணை கொடுக்கவில்லை யென்ற குறையை மனதில் வைத்துக் கொண்டு மாப்பிள்ளை பலநாளும் அவளைச் சுடச்சுடப் பேசி வருவதால் அவள் மனம் புண்ணாகி எண்ணாத மெண்ணிப் பாதவிக்கின்றாள். இதனால் பல உயிர்ச் சேதங்களும் நேரிடுவதுண்டு. பெண்ணின் உள்ளக் கருத்தையுணராமல் இவ்வாறு செய்வன வெல்லாம் மகாபாதகச் செயல்களேயாம். இவற்றால் பெண்கள் அடையும் துன்பத்திற்கோ அளவில்லை. ஒருவாறு பெண்கள் தங்கள் சுயேச்சையாக ஒருவரைத் தேடிக் கொள்ளுதல் சரியன்றென்னும் நியாயம் ஏற்பட்டிருப்பினும் அப்பெண்ணைச் சார்ந்தவர்கள் அவளுக்கு எவன் பொருந்துவானே அவனையே மாப்பிள்ளையாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்; குலமாதர்கள், தங்கள் தாய் தந்தையர் முதலியோர் எதைச் செய்யினும் அதற்குக் கட்டுப்பட்டு நடக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் என் செய்வார்கள் பாவம்! தங்கள் மனதுக்குப் பொருந்தாத ஒரு புருஷனுக்குத் தங்கள் தாய் தந்தையர், தங்களை மணம் புரிந்து கொடுத்து விட்டாலும் அம் மணத்தையும் ஏற்றுக் கொண்டு ஒருவாறு அப் புருஷனோடே யிருந்து தங்கள் காலத்தைக் கஷ்டத்துடனே கழிப்பார்கள். நல்ல மாப்பிள்ளைக்கு மணம் செய்து கொடுத்தால் திருப்தியோடு அவர்கள் காலம் கழியும். சிறந்த இதத்தினத்தை ஈயத்தோடு சேர்த்து

நகையாகச் செய்தாலும் அவ்விடத்தும் அது தன் இயற்கை குன்றாது; பொன்னோடு சேர்ப்பினும் தன் இயற்கைப்படியே யிருக்கும். ஆயினும், ஈயத்தோடு சேர்ந்திருக்கும்போது அந் நகை அழகு குறைந்ததாகவும், பொன்னோடு சேர்ந்திருக்கும்போது அவ்வாபரணம் அழகு விசேஷித்த தாகவும் தோற்றும். இதேபோல குலஸ்திரீகள் எவ்விடத்தில் சேர்க்கப்பட்டாலும் தங்கள் ஒழுக்கங்களினின்றும் குறைவுபடார்; எனினும் அவர்கள் நல்விடத்திற் சேர்க்கப்பட்டால் அவர்களுடைய வாழ்க்கையானது அழகுடைய தாகவும், கெட்ட விடத்தில் சேர்க்கப்பட்டால் அழகிழந்ததாகவும் விளங்கும். இவற்றை யெல்லாம் ஆராயுமிடத்து, பெண்ணின் தாய் தந்தையரும் சுற்றத்தாரும் அவளுடைய நோக்கத்தை யொருவாறு தெரிந்து கொண்டு, அவள் விருப்பத்திற்கும் தங்கள் எண்ணத்திற்கும் தகுதியாக ஒருவனைத் தேர்ந்தெடுத்து அவளுக்கு நாயகனாக்குதலே தகுதியுடையதாம். இவ்வாறு செய்தற்குப் பெண் அபிப்பிராயத்தை முதலில் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாம். ஆதலின், உனக்கு எந்த நாயகன் மீது இஷ்டமோ அவனைத் தெரிவிக்க வேண்டும். உன் விருப்பத்தை யனுசரித்து நாணும் சுற்றத்தாரும் ஆராய்ந்து மணத்தை நிறைவேற்றுவோம்" என்றனன்.

இவற்றை யெல்லாங் கேட்டு மதனசுந்தரியானவள் மன்னனை நோக்கி "தந்தையே! சுயேச்சையாகக் கணவனைத் தேடிக் கொள்ளுதல் ஸ்திரீகளுக்கு யோக்கியமன்று; தாய் தந்தையர் பார்த்து எவ

னுக்குத் தங்களை மணஞ் செய்து கொடுக்கின்றார்களோ அவன் எத்தகையனு யிருந்தாலும் அவனையே உரிய நாயகனுகக் கொள்ளுதல் குலமாதர்க் கழகாம்; இஃதன்றியும் நானே எவ்வளவு தூரம் ஒருகணவனை ஆராய்ந்து சொல்லினும் 'நிதியும் கணவனும் நேர்படினும் தம்தம் விதியின் பயனே பயன்' என்றபடி நான் செய்த பாவ புண்ணியங்களுக்குத் தக்கபடியும் விதியின் பிரகாரமுந்தான் கணவன் நல்லவனே கெட்டவனே அமைவான். என் தலைவிதியில் எவன் எனக்கு நாயகனுக ஏற்பட்டிருக்கின்றானே அவன் தானே வந்து சேர்வான்; ஆகலின் நான் தாங்கள் கூறியதைப்பற்றி இப்பொழுது யாதொன்றுஞ் சொல்லேன்" என்று சொன்னுள். உடனே தந்தை கோபித்து அவளை நோக்கி "நீ என்னுடைய அபிப்பிராயத்திற்கு விரோதமாகப் பேசுகின்றனையாதலின் என் கண்முன் நில்லாது செல்வாயாக; விதிப்படி நடப்பது நடக்கட்டும்; நான் அதனை அறிவேன்" என்று கூறினுன். மதன சுந்தரி பிதாவுக்கு நமஸ்காரம் செய்துவிட்டுத் தன் வாசஸ்தானம் போய்ச் சேர்ந்தாள்.

அதன்மேல் ஒருதினம் பிரஜாபால மகாராஜன் விநோதமாகப் பொழுது போக்கி வரும்பொருட்டுத் தன் சைனியங்களுடன் காட்டிற்குச் சென்றுன். அப்போது மிகுந்த குஷ்டரோக முள்ளவனு யிருந்த ஸ்ரீபாலன் என்னும் ஓர் இராஜகுமாரன், தன்னகரத்திலிருந்து வெளியேறித் தேச சஞ்சாரம் செய்து எழுநூறு குஷ்டரோகிகளோடு எதிரே வந்தான். அவனைப் பார்த்தவுடனே பிரஜாபால மஹாரா

ஜன் அதிசயித்துத் தன் மந்திரியை நோக்கி "அமைச்ச! இங்கே பல குஷ்டரோகிகளுக்குத் தலைவனாகி வரும் இந்தப் பெருநோயாளன் யாவன்?" என்று வினவினான். மந்திரி அவனுடைய விருத்தாந்தத்தை யுணர்ந்திருந்தானாதலின், அரசனை நோக்கி "இவன் ஓர் இராஜகுமாரன்; நம்முடைய நட்பைப் பெற விரும்பி இங்கே வருகின்றான்' என்று சொல்ல, அரசன் "இவனுடைய வருகை நாம் மனதில் விரும்பியிருந்த ஒருகாரியத்திற்கு அனுகூலமாகவே முடிந்தது. இவனை குஷ்டரோகியாயும் இராஜகுமாரனாயுமிருப்பதால் எல்லாம் விதிப்படியே நடக்குமென்று வாய் ஞானம்பேசிய நம் புத்திரியாகிய மதன சுந்தரியை இவனுக்கே விவாகம் செய்து கொடுத்து, 'இம்மணம் விதிப்படிதான் நடந்தது; அந்த விதியின் பிரகாரமே நீ இவனோடு சேர்ந்து இல்லற வின்பத்தை அனுபவி' என்று சொல்லி அவளுடைய அகங்காரத்தை யடக்கவேண்டும்; நம்முடைய வார்த்தையை மறுத்துப் பேசிய அவளுக்குத் தக்க தண்டனை இதுவே" என்று மனதிற்குள் நினைந்துகொண்டு, அந்தக் குஷ்டரோகியை அருகில் வரவழைத்து அவனுடனே நண்பு பூண்டு, அவனை நகரத்திற்கழைத்து வந்து, அவனுக்கும் அவனுடைய பரிவாரஜனங்களுக்கும் வாசஸ்தலங்களை அமைக்கும்படி மந்திரிக்குக் கட்டளை யிட்டு, அவ்வாறே கிருகங்கள் அமைக்கப் பட்டபின்பு குஷ்டரோகியாகிய ஸ்ரீபாலனையும், அவனைச் சார்ந்தவர்களையும் அவற்றில் குடியேற்றுவித்து மகிழ்ந்திருந்தான். அப்படி யிருந்த அவன், சிலதினங்கள் சென்றபின்பு தன் புத்திரியாகிய மதன

சுந்தரியை அழைத்து அவளிடம் "புதல்வியே! நீ எல்லாம் விதிப்படியே நடக்கு மென்று சொன்னதனால் அவ்வாறே அமைந்த குஷ்டரோகி யொருவனை உனக்கு நாயக னாகும்படி இங்கே வரவழைத்து வைத்திருக்கின்றேன். அவனே உனக்குரிய நாயகன்; நீ அவனை மணந்து கொள்ளுவதற்கு என்ன சொல்லு கின்றாய்?' என்று வினவினான். அதற்கு மதன சுந்தரி "எனக்கு அவ்வாறு விதி ஏற்பட்டிருக்கு மாயின் அவரை நாயகராக நான் ஏற்றுக் கொள்ளுவதில் எனக்கெவ்வித ஆக்ஷேபனையு மில்லை; தாங்கள், யாரை எனக்கு நாயகராக நியமிக்கின்றீர்களோ அவரை நான் மனத் திருப்தியோடு ஏற்றுக்கொள்ளுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்; தங்கள் விருப்பப்படியேசெய்வதைச் செய்க," என்று சொன்னாள். இந்தப் பொருந்தாத செய்கையைக் கேட்டவுடனே அருகிலிருந்த மந்திரியானவன் மனம் பதைத்து மன்னனை நோக்கி "ஏ புவனகாவல! நீர்என்னகாரியம் செய்யக் கருதினீர்! இரதிதேவியை நிகர்த்திருக்கின்ற தங்கள் குமாரத்தியாகிய மதனசுந்தரியை குஷ்டரோகிக்கு மணஞ் செய்து கொடுத்தல் குணம் செய்யாது. இச் செய்கையானது சிறந்த அமுதத்தைப் பாழுங்கிணற்றில் கவிழ்த்ததை நிகர்க்கும்; தாங்கள் இந்த எண்ணத்தை விடுத்து வேறேயொரு தகுதியான மாப்பிள்ளைக்கு இலக்குமியை நிகர்த்த தங்கள் புத்திரியைக் கொடுத்தலே புண்ணிய மாகும்; ஆதலின் நான் அவ்வாறே நீர் செய்ய விரும்புகின்றேன்" என்று தெரிவித்தான். அரசன் பிடிவாதக்

காரணதலின் அந்த அறமொழிகளைச் சிறிதும் செவிக் கொண்டிலன். உடனே தன் புத்திரியை அழைத்துக்கொண்டு அந்தப் புரத்திற்குச் சென்று இரகசியமாகக் குஷ்டரோகியாகிய ஸ்ரீபாலனை வரவழைத்துத் தன் மகளுக்கும் அவனுக்கும் கலியாணத்தை நிறைவேற்றிவிட்டான். அவ்வாறு திருமணம் முடிந்த பின்பு மதன சுந்தரியும் அவள் கணவனாகிய ஸ்ரீபாலனும் பிரஜாபால மஹாராஜனை நமஸ்கரித்தார்கள். அப்பொழுது அரசன் பிடிவாதத்தினால் அக்காரியத்தைச் செய்தவனாயிருந்தும் மிகவும் வனப்புடையவளாகிய தன் புத்திரியையும் அந்தக் கோரரூபனாகிய குஷ்டரோகியையும் நேரில் பார்த்தவுடனே தான் செய்தது மிகவும் கொடுஞ்செயலென்று அவன் மனதில் உறுத்திற்று. இதைப்பற்றி நகரமாந்தர்களும் அவனைப் பலவாறு நிந்தித்தார்கள்; அதனாலவன் நெஞ்சம் கலங்கி 'அடடா! என்ன கொடுமையைச் செய்துவிட்டோம்' என்று தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டு "இனிக் காரியம் நிறைவேறிய பின்பு என் செய்வது?" என்று சிறிது மனந்தேறி ஸ்ரீபாலனுக்கு வேண்டிய சைனியங்களையும், மதன சுந்தரிக்கு அளவற்ற சீதனப்பொருள்களையும் பரிவார தாதிகளையும் கொடுத்து அவர்க்குரிய மாளிகைக்குச் சென்று இல்லறம் நடத்தும்படி அவர்களை அனுப்பிவிட்டான்.

அத்தியாயம். 2.

—(o)—

மதனசுந்தரியின் கற்புயர்வு.

அதன்மேல் ஸ்ரீபாலனும் மதனசுந்தரியும் முறையே இல்லறம் நடத்தி வந்தார்கள். அக்காலத்தில் ஒருதினம் அவ்விருவரும் அருகக்கடவுள் ஆலயத்துக்குப்போய் அக்கோவிலைப் பிரதக்ஷிணம் செய்துவந்து ஆலயத்திற்குள் நுழைந்து பகவானை நமஸ்கரித்து, கடவுளுக்கு நீர், சாந்து, அக்ஷதை, பூமாலை, திருவமுது, தீபம், தூபம், பழம் எனனும் அஷ்டவிதப் பொருள்களைக் கொண்டு அர்ச்சனை செய்து, பூசனை புரிந்து கடவுளை ஸ்தோத்திரம் பண்ணி நமஸ்கரித்துத்திரும்பினார்கள். அப்போது அவ்வாலயத்தின் ஓர் பக்கத்தில் வரகுப்த ஆசாரியரென்னும் முனிவர் தங்கியிருந்தனர். அவரைக் கண்டமாத்திரத்தில் இவ்விருவரும் அவரிடத்தே சென்று சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அவரை நோக்கி "சுவாமி! நாங்கள் கடைத்தேறும்பொருட்டு எங்களுக்கு ஜிநதருமங்களை உபதேசித்தருள வேண்டும்" என்று கேட்டுக்கொண்டனர். அதற்கு அவர் மனமிசைந்து இவர்கள்மீது அன்புடையவராய் இவர்களுக்குத்துறவறதர்மம், இல்லறதர்மம், இரவில் போசன முண்ணாமை, ஜலப்பரிசோதனை, ஜிநபிம்பப்பிரதிஷ்டை, உத்ஸவாதிகள், நித்திய கர்மானுஷ்டானங்கள், விரதத்தின் வகைகள் முதலியவற்றை யெல்லாம் உபதேசித்து, அவற்றுள் விசேஷமாகச் சித்தசக்கர நோன்பின் தன்மையையும் பயனையும் எடுத்துக் கூறி, அந்நோன்பினை அனுஷ்டிக்கும்

படி பிரத்தியேகமாக மதனசுந்தரிக்குக் கட்டளையிட்டருளினார்.

பின்னர், அவள் தன் நாயகனுடன் மாளிகை போய்ச்சேர்ந்து, அந்தச் சித்தசக்கர நோன்பை அனுஷ்டிக்கத்தொடங்கிச் சித்த பரமேஷ்டியை வணங்கி ஸ்தோத்திரம் செய்து, அந்நோன்பிற்காக அளவற்ற திரவியங்களை தானமளித்து, சித்தசக்காத்தை வைத்து; அஷ்டமி முதல் எட்டுநாள் வரையிலும்பூஜைசெய்து, கிரமம் தப்பாமல் அந்நோன்பினை நிறைவேற்றித் தினந்தோறும் சித்த சக்கரத்துக்கு அபிஷேகம் செய்யப்பட்ட கந்தோதகத்தை(வாசனை ஜலத்தை)க்கொண்டுவந்து ஸ்ரீபாலன் மீதும்,மற்றைய குஷ்டரோகிகளின் மீதும் தெளித்து வந்தாள். இவ்வாறுசெய்துவந்ததன் பலனாக பௌர்ணமி திதி வருவதற்குள்ளாகவே ஸ்ரீபாலனுக்கும் மற்றையர்களுக்கும் இருந்த குஷ்டரோகமானது நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்து முடிவாக முழுதும் நீங்கிவிட்டது. அவ்வாறு நீங்கவே ஸ்ரீபாலன் பொன் போன்ற திருமேனியைப் பெற்று மகா சுந்தர புருஷனாய் விளங்கினான். மற்ற குஷ்டரோகிகளும் நல்ல தேகக் கட்டழகு வாய்ந்தவர்களானார்கள். இவ்வாறு எல்லோரும் கர்மரோகமாகிய குஷ்டத்தினின்றும் நீங்கி சௌக்கியமடையவே, மதன சுந்தரி அளவற்ற சந்தோஷத்தை யடைந்து தனக்கு அந்நோன்பை உபதேசித்த முனிவரையும் அதற்குப் பலனளித்த சித்தசக்கரத்தையும் பலவாறு ஸ்தோத்திரம் செய்து கொண்டாடினாள். ஸ்ரீபாலன் முதலியவர்களுக்கு உண்டான மகிழ்ச்சிக்கோரளவில்லை.

இவ்வாறு எல்லோரும் ஆனந்த மடைந்திருக்குங்காலத்தில், ஸ்ரீபாலனுடைய மாதாவாகிய கமலாவதியென்பவள், சித்தசக்கர நோன்பின் மகிமையினால் தன் புத்திரன் கஷ்டரோகமாகிய குஷ்டத்தினின்றும் நீங்கி சௌக்கியமடைந்தா னென்பதை பலஜனங்களால் சொல்லக்கேட்டு, உடனே சென்று அவனைப் பார்க்க வேண்டுமென்னும் விருப்பத்தினால் தானிருந்த நகரத்தினின்றும் புறப்பட்டு உஜ்ஜயினிபுரத்திற்கு வந்தாள். அவள் அந்த நகரத்திற்குச் சற்று தூரத்திலே வரும்போதே ஸ்ரீபாலன், அவள் வருவதை யுணர்ந்து தன்னுடைய பரிவார ஜனங்களோடு எதிர்கொண்டு போய் அவள்சமீபம் அடைந்து அவளுடைய பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து. அவளைச் சிவிகையின் பேரிலேற்றித் தன் மாளிகைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தான். அவள் அங்குப்போய்ச் சேர்ந்த மாத்திரத்தில் மதன சுந்தரி அவளைக் கண்டு ஓர் கௌரவமுடைய மூதாட்டி யென்று நினைத்து வணங்கி, அவளுக்கு நீராட்டி உத்தமமான பட்டாடையை அளித்து. உயர்ந்த போசனம் படைத்துப் பலவிதமானஉபசாரங்களை நடத்தினாள். அவளும் போசனமுண்டு இளைப்பாறிச் சந்தோஷ முற்றிருந்தாள்.

அப்படி யிருக்குந் தருணத்தில் மதன சுந்தரியானவள் கமலாவதியைப் பார்த்து "என் மாதாவே! நீ யார்? உன்னுடைய இருப்பிடம் யாது? நீ இங்குவந்ததற்குக் காரணமென்ன?" என்று வினவினாள். அதற்குக் கமலாவதியானவள் "எனது உயிர்க்குயிராகிய கண்மணியே! நான் வங்க தேசத்திலுள்ள சம்பா நகரத்தில் வசிப்பவள்; என்னுடைய நாயகர் பெயர் சிம்

மசேந மஹாராஜர்; உன்னுடைய பர்த்தாவாகிய ஸ்ரீ பாலன் என்னுடைய புத்திரன்தான்; இவன் பிறந்த இரண்டாவது வருஷத்தில் என்பர்த்தா மரணமாய் விட்டார். அதன்மேல் அவருடைய மந்திரிகள் நால்வருள் ஆனந்த மந்திரி யென்பவர் உன்னுடைய நாயகனாகிய ஸ்ரீபாலனுக்குஇராஜ்ய பட்டாபிஷேகம் செய்வித்து, இவனுக்குப் பிரதிநிதியாயிருந்து தாமே இராஜ்யாதிகாரத்தை நடத்தி வந்தார். அக் காலத்தில் ஸ்ரீபாலனுடைய தாயாதிக்காரனாகிய வீரமதன் என்பவன் ஸ்ரீபாலனுக்கு விஷத்தை யூட்டி அவனைக் கொன்று அவனுடைய இராஜ்யத்தைத் தான் கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்னும் எண்ண முடையவனாய் அதற்கான சூழ்ச்சிகளைச் செய்து வந்தான். இதையுணர்ந்தஆனந்தமந்திரி என்னிடம்வந்து 'இராஜ பத்தினியே! உன்னுடைய புத்திரனுக்குப் பங்காளியாகிய வீரமதன் என்பவன் அவனைக் கொன்று உங்களுடைய இராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொள்ள நினைத்து அதற்கான பல சூழ்ச்சிகளைச் செய்து கொண்டு வருகின்றான். உன்னுடைய பாலன் இங்கே இருந்தால் அவன் உயிர்க்கு அபாயம் நேரும். அவன் உயிருடன் இருப்பானானால் பிற்காலத்தில் அநேக இராஜ்யங்களைக் கைப்பற்றிக் கொள்வான்; ஆதலின் விரைந்து அவனை எங்கேனும் புறநகரத்துக்குக் கொண்டுபோய் வைத்துக் காப்பாற்ற வேண்டும்,' என்று கூறினார். அதன் மேல் நான் அநேக பரிவார ஜனங்களோடு என்புத்திரனை அழைத்துக் கொண்டு வந்து வாரணாசி நகரமடைந்து அவனுடன் அவ்விடத்தில் தங்கி யிருந்தேன். அப்படி யிருக்குங்

காலத்தில் பழவினை சம்பந்தத்தால் ஸ்ரீபாலனுக்கு குஷ்டரோகம் உண்டாயிற்று. அவனோடு எழுநூறு குஷ்டரோகிகளும் சேர்ந்தார்கள். அதன்மேல் என் புத்திரன் இந்நகரத்திற்கு வந்து பூர்வபுண்ணிய வசுத்தினால் உன்னைக் கலியாணம் பண்ணி, நீசெய்த நோன்பின் மகிமையால் தன்னுடன் சேர்ந்திருந்த எழுநூறு குஷ்டரோகிகளோடு தானும் அந்நோய் நீங்கப் பெற்றுச் சுகசரீரத்தை யடைந்தான். இந்த அதிசயத்தை, பலஜனங்கள் வந்து சொல்லக் கேட்டு நான் மகிழ்ச்சி யடைந்து உங்களைப் பார்க்க வேண்டுமென்னும் அவாவினால் இப்போது இங்கு வந்தேன். உங்களுடைய சௌக்கியமான நிலைமையை நேரில் கண்டபின் தேகம் பூரித்து மகிழ்ந்தேன். இனி எனக்கு ஒரு குறையும் இல்லை. கடவுள் கிருபையால் நீங்கள் எப்பொழுதும் சௌக்கியத்தோடு வாழ்வீர்கள்.'' என்று கூறினாள். இவ்வார்த்தைகளால் மதனசுந்தரி அவளைத் தன்மாமி யென்று தெரிந்துகொண்ட வுடனே மீண்டும் பன்முறை அவளுக்கு நமஸ்காரம் புரிந்து பலவித உபசாரங்களைச் செய்து வந்தாள். அதன்மேல் எல்லோரும் அங்குச் சந்தோஷமாகத் தங்கி யிருந்தார்கள்.

அத்தியாயம்-3.

ஸ்ரீபாலன் தேசாந்தரம் போகுதல்.

இப்படியிருக்குங் காலத்தில் ஒருநாள் மதனசுந்தரியின் தந்தையாகிய பிரஜாபால மஹாராஜன் வசந்த

காலப் போது போக்கின் நிமித்தமாக ஓர் பூங்காவன த்தை அடைவதற்குத் தன்னுடைய பரிவாரஜனங்களு டனே புறப்பட்டு ஸ்ரீபாலன் தங்கியிருக்கும் தெருவின் வழியாகப் போனான். அப்போது ஸ்ரீபாலனும் மதன சுந்தரியும் தங்கள் மாளிகையின் மேலுப்பரிகையில் நின்று வேடிக்கைபார்த்தார்கள். அவர்கள் அவ்வாறு நிற்பதை பிரஜாபால மஹாராஜன் பார்த்தான். அவன், தன்னுடைய மருமகனுக்கு குஷ்டநோய் நீங்கிய வித த்தை அறியாததலால், ஸ்ரீபாலன் மேலுப்பரிகையில் நிற்பதைப் பார்த்த வுடனே அவனை வேறொரு பாலிய புருஷனென்றும், ஸ்ரீபாலன் குஷ்டரோகியா யிருந்ததினால் தன்னுடைய குமாரத்தி அவனைத் தள்ளிவிட்டு வேறொரு யௌவன புருஷனை அடைந் திருக்கின்றாளென்றும் கருதி "நம்மகள் செய்திரு க்கும் காரியம் நம்முடைய குலத்திற் கெல்லாம் பழி ப்பை யுண்டாக்கக் கூடியதா யிருக்கின்றதே" என்று முகவாட்டமடைந்தான்.

அவன் இவ்வாறு முகவாட்ட மடையவே, அவ னுடன் சென்ற மந்திரி அவனை நோக்கி "இறைவ! நீர் இங்கு வந்த மாத்திரத்தில் உம்முடைய முகம் திடு மென வேறுபட்டு வாட்டத்தை யடைந்து விட்டது. இதற்குக் காரணமென்ன?," என்று வினவினான். அதற்கு பிரஜாபால மஹாராஜன் "அருமை மந் திரியே! என்னுடைய புத்திரியாகிய மதன சுந்தரி யென்பவள் பூர்வ கர்மவசத்தினால் ஒரு குஷ் டரோகிக்கு மனைவியாகக் கூடியவளா யிருந்தாள்; அதனால் நான் அவளோடு வாக்கு வாதம் செய்து அவள்மீது உண்டாகிய கோபத்தினால் ஒரு குஷ்ட

ரோகியாகிய ஸ்ரீபாலனுக்கு அவளை மணஞ் செய்து கொடுத்தேன். அவளும் அக்காலத்தில் 'தாய்தந்தையர்கள் தங்கள் பெண்களை எவருக்கு மணஞ் செய்து கொடுக்கிறார்களோ அவரிடத்தே அவர்கள் மனைவியராக அமைந்து பதிவிரதா தருமம் தவறாது நடப்பது தான் ஸ்திரீகளுக்கு அழகு. இம்மணம் ஏதோ என் கர்மவசத்தால் நடந்திருக்கின்றது; ஆதலால் இதற்கு நான் மனம் வருந்தேன். இந்தக் குஷ்டரோகியாகிய என்நாயகரையே நான் தெய்வமாகப் பாவிப்பேன்.' என்று ஏதேதோ பல நீதிகளை யெல்லாம் எடுத்துக் கூறி அவனுடன் இசைந்து வந்தாள். அப்படி வந்தும் பின்னால் தன்னுடைய நீதிகளையெல்லாம் விடுத்து அருவருப்புக்கொண்டு அந்த ஸ்ரீபாலனைத் தள்ளிவிட்டு இப்போது வேறொருவனை யடைந்து அவனுடனே அதோ மேலுப்பரிகையில் நின்று வேடிக்கைபார்க்கின்றாள். ஸ்திரீகளுடைய குணம் ஒரு நிலையில் நில்லாதென்பதை இவள்மூலம் நான் தெரிந்துகொண்டேன். இவள் செய்திருக்கும் செய்கையானது, என் குலத்திற்கெல்லாம் என்றென்றும் அழியாப் பழிப்பைபுண்டாக்கக் கூடியதா யிருக்கின்றது. ஒருமண்டலாதிபதியா யிருக்கும் எனக்கு இவ்வித அபகீர்த்தியை உண்டாக்கிய இவளை என்னதான் செய்யலாம் என்று என் மனம் புண்படுகின்றது. இதனாலேயே என்முகம் இப்பொழுது வாட்டத்தை யடைந்தது. இதற்கு நான் என்செய்வேன்" என்று மிகுந்த மனவருத்தத்தோடு மொழிந்தான். இவற்றைக் கேட்டதும் மந்திரி மதனசுந்தரியின் உத்தமகுணங்களையும், அவள் பதிவிரதா தருமத்தினின்றும் தவறாதிருப்பதையும் உணர்ந்தவ

னதலின், அரசன் அவளைப் பற்றித் தப்பு அபிப்பிராயங் கொண்டதை நினைந்துப் புன்சிரிப்புக் கொண்டு அவன் முகத்தை நோக்கி "புவன காவல! நீர் நினைத்தபடி மதனசுந்தரி எவ்வித பழிப்பான காரியத்தையுஞ் செய்யவில்லை; அவள் மகாஉத்தமி; பதிவிரதைகளில் மிகவுஞ் சிறந்தவள்; நற்குணங்களில் அவளுக் கிணை யாவார் உலகில் எவருமிலர்; அவளுடைய பதிவிரதா தர்மமும் தயாளகுணமும் கீர்த்தியும் அறிவுடையோர் கள்எல்லாராலும்கொண்டாடத் தக்கவை; அவளுடைய தன்மையை உணராத தோஷத்தால் நீர் அவள் மீது இவ்வாறு தப்பபிப்பிராயங் கொண்டீர். அவளுடைய நன்னடக்கையால் உண்டாயிருக்கும் ஆச்சரிய மான சில செய்கைகளை நினைக்க என்மனம் குதூகலத்தை யடைந்து தேகம் சிலிர்க்கின்றது. அவளுடைய கற்பின் மகிமையை யான் என்னென்று புகல்வேன். அவள் தன் நாயகனுடன் உம்மை விட்டு நீங்கி இல்லறம் நடத்தத் தொடங்கிய பின்பு பெரியோர் அநுக்கிரகத்தால் சித்தவிரத நோன்பை அநுஷ்டித்து அதனால் தன் நாயகனுடைய குஷ்டரோகத்தையும் அவனோடு சேர்ந்த எழுநூற்றுவருடைய பெருவியாதிகளையும் போக்கிவிட்டாள். வியாதி நீங்கிய பின் ஸ்ரீபாலன் மஹா சுந்தர புருஷனாயினான். மற்ற எழுநூறு குஷ்டரோகிகளும் அழகிய திருமேனியை யுடையவர்களானார்கள். இங்கு மதன சுந்தரியின் பக்கத்தில் நிற்பவன் ஸ்ரீபாலனே. நீர் கருதியபடி வேறொருவனல்லன். இவர்கள் இவ்வாறு சௌக்கிய மடைந்திருக்கும் செய்தி எனக்குத் தெரியும். நீர் அதனை யுணராமல் இவ்வாறு கவலை யடைகின்றீர்; இனி அக் கவலையை

விட்டுவிடும்; உம்முடைய புத்திரியைக்கண்டு சந்தோஷவார்த்தைகள் கூறி அவளுக்குச் செய்யவேண்டியதைச் செய்யும்'' என்று கூறினான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே அரசன் அளவற்றஆனந்தமடைந்து 'ஆ! என் புத்தி என்ன புத்தி! என் உத்தம குமாரத்தியின் நற்குணங்களை யுணராமல் நான் என்ன நினைந்தேன்!'' என்று தன்னைத் தானே நொந்துகொண்டு தன் பரிவார ஜனங்களுடனே ஸ்ரீபாலனுடைய மாளிகைக்குள் நுழைந்தான். அவன் அவ்வாறு வருவதைக்கண்டவுடனே ஸ்ரீபாலனும் மதன சுந்தரியும் எதிர்கொண்டுபோய் அவனுக்கு முன்னே வணங்கி அவனை உள்ளே அழைத்துக் கொண்டுபோய் உன்னதமான ஆசனத்திலிருத்தி அவனுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்து அவனை நோக்கி 'தாங்கள் எங்களை ஒரு பொருட்டாக நினைத்து இவ்வில்லத்திற்கு எழுந்தருளியதால் நாங்கள் மஹா பாக்கியசாலிகளாயினோம்.' என்று இனிய மொழி கூறினார்கள்.

இவ்வினிய வார்த்தைக்காக பிரஜாபாலன் மகிழ்ந்து உடனே தன் புத்திரியைச் சமீபத்திலழைத்து கருணை நிறைந்த முகத்தோடு அவளை நோக்கி "என் அருமைப் புதல்வியே! உன்னுடைய சிறந்தகுணங்களை நான் முன்னே உணராதிருந்தாலும் இப்பொழுது என் மந்திரியால் நன்குணர்ந்தேன். நீ நம்முடைய குலத்திற்கெல்லாம் இரத்தின தீபம்போல பிரகாசத்தைச் செய்தாய்; உன்னுடைய கீர்த்தி மூவுலகத்திலும் பரவக்கூடியதாயிற்று. பதிவிரதையென்னும் நாமம் உனக்கே தகும்; உனக்கு அமைந்த நாயகன்

குஷ்டரோகியா யிருந்தும் மற்ற பெண்களைப்போல் நீ அவன்மீது அருவருப்புக் கொள்ளாமல் அவனையே தெய்வமாக எண்ணி அவன் சொற்படி இல்லறம் நடத்தி நோன்பு நோற்று அதனால் அவனுடைய தீராப் பிணியையும் அவனைச் சார்ந்தவர்களுடைய நோயையும் தீர்த்து எல்லோருக்கும் இனிமையான வாழ்வையுண்டாக்கினாய்; உலகத்தில் உன்னைப் போன்ற உத்தமிகள் எவரிருக்கின்றார்கள்;

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள
பெய்யெனப் பெய்யும் மழை.'

என்பதற்கு நீயே உதாரணமாயினை; பதிவிரதைகளாயிருப்பவர்கள் மனிதரால் செய்தற்கருமையான காரியங்களை யெல்லாம் செய்து முடிப்பார்கள் என்பதை உன்னிடத்தில் நான் பிரத்தியக்ஷமாகப் பார்த்தேன். உன்னுடைய நாயகனது தீராப்பிணியை நீ விரத மகிமையால் தீர்த்ததே உன்னுடைய கற்பை விளக்குவதற்குப் போதிய சாட்சியா யிருக்கின்றது. நீ எப்பொழுதும் சௌக்கியத்தை அடைவாய்" என்று கூறிவிட்டுத் தன் மருமகனாகிய ஸ்ரீபாலனை நோக்கி "என் அருமை மருக! நீ பூர்வ கர்மத்தால் குஷ்டரோகத்துக்குள்ளாயிருந்தும் என் புத்திரியாகிய மதன சுந்தரியின் விரதானுஷ்டான மகிமையால் அந் நோய் நீங்கப்பெற்று இந்திரன் போன்ற சுந்தர புருஷனாயினை; இனி என்னுடைய இராஜ்யத்திற்கு நீயே உரியவன்" என்று உபசார வார்த்தைகள் கூறி அவனுக்கு இரத கஜ துரக பதாதிகளாகிய நால்வகைச் சேனைகளையும்

அநேக திரவியங்களையும், பல கிராமங்களையும், கொடுத்துவிட்டுப் போயினான்.

அவன் இவ்வாறு சந்தோஷமான காரியங்களைச் செய்துவிட்டுச் சென்றும் ஸ்ரீபாலன் மனம் திருப்தியடையவில்லை. இவனுடைய முகம் வாட்டமடைந்திருந்தது. அவ்வாறு முகவாட்டம் ஏற்பட்டிருந்ததைக் கண்டவுடனே மதன சுந்தரியானவள் அவனை நோக்கி "நாத! என்னுடைய பிதா, முன்னே எனக்கு விரோதமான சில காரியங்களைச் செய்திருந்தாலும், இப்பொழுது சந்தோஷமடைந்து நம்மிருவருக்குமே நன்மையான காரியங்களைச் செய்துவிட்டுச் சென்றிருக்கின்றார். அப்படியிருந்தும் நீர் முகம்வாடியிருப்பதற்குக் காரணமென்ன?" என்று வினவினாள். அதற்கு ஸ்ரீபாலன் "உன்னுடைய பிதா இப்போது நமக்குச் சில நன்மைகளைச் செய்திருந்தாலும் உன்னுடைய குணங்களைப்பற்றியே மிகவும் புகழ்ந்து பேசிச் சென்றார். என்னுடைய க்ஷேமலாபங்களைப் பற்றியும் வரலாற்றைப்பற்றியும் என்னிடத்தில் விசாரிக்கவில்லை. அதற்குக் காரணம் நான் திக்கற்றவனாய் வந்து அவரால் ஏற்படுத்தப்பட்ட சில சௌகரியங்களைப் பெற்றுக்கொண்டிருந்ததே. நான் சுயேச்சையாக ஐசுவரியங்களைச் சம்பாதித்து நல்ல நிலைமையிலிருப்பேனானல் அவர் என்னை மதித்து என்னுடைய க்ஷேமலாபங்களை விசாரித்தல் கூடும். எப்பொழுதும் சுயேச்சையையிழந்து பிறர் கைபார்த்துப் பிழைப்பதைப் போல் மனிதர்க்கு இழிவான காரியம் இங்கே வேறொன்றுமில்லை. அதிலும் பெண்ணின் ஸ்ரீதனம் கொண்

தைப் பெரிதாக நினைத்து மாமன் வீட்டோடு சேர்ந்து வாழ்வது மஹா இழிவான காரியம். இதை நினைத்துத்தான் நான் இப்பொழுது முகவாட்டமடைந்தேன். ஆதலில், அவர் இப்பொழுது எனக்கு நல்கிய செல்வங்களைப் பெற்றுக்கொள்ள இஷ்டமில்லை. நான் இப்பொழுதே தேசாந்தரம் போய் அளவற்ற ஐசுவரியங்களைத் தேடிக்கொண்டுவர நினைக்கின்றேன். இதற்கு நீ அனுமதி தரல்வேண்டும்” என்று கூறினான்.

இதைக் கேட்டதும் மதனசுந்தரி இடியோசை கேட்ட சர்ப்பம் போல் நடுநடுங்கி ஸ்ரீபாலனை நோக்கி “நாத! நீர் பொருள் தேடுவதற்குத் தேசாந்தரம் போகவேண்டுமென்று சொல்வது ஒரு விதத்தில் பொருத்தமான காரியமே. ‘திரைகடலோடியுந் திரவியந்தேடு’ என்ற வாக்கியப்படி கப்பலேறிப் போயாவது பலநாடுகளிற் சேர்ந்து திரவியம் சம்பாதித்து வருவது புருஷர்க்குச் சிறந்த கடமையே; என்றாலும் தாங்கள் என்னைவிட்டுப் பிரிந்து செல்வதாகக் கூறுவது மட்டும் என் மனதிற்குச் சம்மதமில்லை. எக்காலத்திலும் கணவனோடு இணைபிரியாதிருந்து அவனுக்கேற்படும் இன்பதுன்பங்களைத் தானும் பங்கிட்டு அனுபவித்தலே பதிவிரதைக்கு முக்கியமான செய்கையாம்; ஆதலின் உம்மைவிட்டுப் பிரிவதற்கு என் மனம் இசையவில்லை; உம்மைவிட்டுப் பிரிந்து நான் தனித்திருந்து அதனால் ஏற்படும் மனத்துயரத்தை எவ்வாறு சகித்திருப்பேன்; நானும் உம்முடன் வருதலே தகுதி; தயவுசெய்து நீர் என்னையும் உடன் அழைத்துச் செல்லவேண்டும்.” என்று கண்ணீர்விட்டழுதபடியே கூறினாள்.

இவ்வாறு அவள் துயரப்படுவதை ஸ்ரீபாலன் பார்த்து மனங் கலங்கினான் எனினும், தான் உத்தேசித்த காரியத்தை நிறைவேற்றியே தீரவேண்டியது அச்சமயத்தில் அவசியமாயிருந்தபடியால், தன் பிரயாணத்தை நிறுத்த முடியாமல்; எப்படியாவது மதனசுந்தரிக்குச் சமாதானம் கூறி அவளை நிறுத்திவிட்டுச் செல்லக் கருதி அவளை நோக்கி "கண்மணியே! உலகத்தில் குலஸ்திரீகள் தங்கள் நாயகரைவிட்டுப் பிரிவதற்கு மனங்கலங்குவது இயற்கையே; அவ்வியற்கைப்படியே நீயும் கலங்குகின்றனை; ஆயினும் பொருள்காரணமாக நாயகர் பிரியும்போது பெண்கள் அப்பிரிவைச் சகித்திருக்கவேண்டியது முறைமை; சந்தோஷமாக புருஷர் தேசசஞ்சாரம் செய்யப் புறப்படுங் காலத்தில் வேண்டுமானால் ஸ்திரீகள் அவர்களுடன் செல்லலாம்; அப்பொழுது அவர்களுக்கு ஒருவித கஷ்டமும் ஏற்படாது. பொருளைத்தேடும் முயற்சியைக் குறித்தோ, யுத்தஞ்செய்யுங் காரணமாகவோ நாயகர் புறப்படுங் காலத்தில் ஸ்திரீகள் உடன் சென்றால் பலவித கஷ்டநஷ்டங்களுக்குள்ளாவர்; அதனால் நாயகருடைய முயற்சியிலும் ஊக்கக் குறைவு உண்டாகும்; ஆகலால் நீ இப்பொழுது என்னுடன் வருவதாகச் சொல்வது தகாது; இனிமேல் நடக்கப்போகும் நன்மையான காரியங்களை உத்தேசித்து நீ என் பிரிவைச் சகித்திருக்கவேண்டும்; நான் பன்னிரண்டு வருஷங்கள் வரை தேச சஞ்சாரம் செய்து என்னுடைய எண்ணங்களை நிறைவேற்றிக்கொண்டு சௌக்கியத்துடன் மீண்டு வருவேன்; நீ அதுவரையிலும் மனங் கலங்காது உன் மாமியுடன் இல்லத்தில் வசித்திருப்பாயாக." என்று கூறினான்.

இவற்றை யெல்லாங் கேட்டவுடனே மதன சுந்தரி அவன் வார்த்தைகளுக் கிசைந்தவளாய்ச் சிறிது மனந்தேறி அவனுடைய பிரயாணத்திற் கிசைந்து அவனை நோக்கி "நாயகரே! உமது விருப்பப்படியே நீர் அந்திய நாடு சென்று வருவீராக; தேசசஞ்சாரம் செய்யுங் காலத்தில் நீர் எவ்விடத்திற்குச் சென்றாலும் சித்த பரமேஷ்டிகளையும், நமக்கு நல்ல வாழ்வை யுண்டாக்கிய சித்தசக்கரத்தையும் மறக்க வேண்டாம்." என்று கூறினாள்.

அதன்மேல் ஸ்ரீபாலன் மதன சுந்தரியை நோக்கி "என் அருமைக் காதலியே! நான் இங்குத் திரும்பி வருமளவும் நீயும் உன் மாமியாரும் சித்த பரமேஷ்டிகள் தியானத்தையும், சித்த சக்கர பூஜையையும் ஜிநமுனிகளுக்கு ஆகாரதானஞ் செய்வதையும் மறவாமல் நடத்திக் கொண்டு வரவேண்டும். நான் போய் வருகின்றேன்" என்று சொல்லிப் பிரயாணத்திற்கு ஆகவேண்டியவற்றை யெல்லாம் சித்தப் படுத்திக் கொண்டு அந்தப்புரத்தை விட்டு வெளியேறினான். மதன சுந்தரி அவனுடைய பிரயாணத்திற்கு, முன்னே இசைந்தாளெனினும் அவனுடைய புறப்பாட்டைக் கண்ட அச்சமயத்தில், மீண்டும் அவள் மனம் கலக்கமுற்றதாதலால் அவனுடைய வஸ்திரத்தைப் பிடித்துக்கொண்டு, "என்மணவாளரே! உம்முடைய பிரயாணத்திற்கு ஒருவாறு முன்னே நான் சம்மதித்தேனாயினும் இப்பொழுது மீண்டும் என் மனம் துயரத்திற் குள்ளாகின்றது. ஆதலின், நானும் உம்முடன் வருகின்றேன்" என்று சொன்னாள்.

அப்போது ஸ்ரீபாலன் அவளுக்கு, முன்னிலும் அதிகமாக நீதி வாக்கியங்களை எடுத்துச் சொல்லி, அவள் மனதைத் தேற்றி அவளைத் தன் பிரயாணத்திற் கிசையும்படி செய்துவிட்டு, அவளை விட்டு நீங்கித் தன் தாயாரிடம் சென்று "என் அன்னையே! நான் தேச சஞ்சாரஞ் செய்யப் புறப்படுகின்றேன். அதற்கு நீ அனுமதி தரல் வேண்டும்" என்று தன் பிரயாணத்தை யும், அதற்கு நேர்ந்த காரணத்தையும் தெரிவித்தான். அந்தப் பிரயாணம் மிகவும் தகுதியானதா யிருந்தபடி யால், அவள் தடைசொல்லாமல் உடனே அதற்கு இசைந்து ஸ்ரீபாலனை நோக்கி "என் தவப் புதல் வனே! நீசுகமாகப் போய்வருவாயாக; ஆனால், நீ எங் குச் சென்றாலும் ஜிந தர்மத்தை மறந்துவிடாதே" என்று சொன்னாள். உடனே ஸ்ரீபாலன் அவளுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி அவளிடம் விடைபெற் றுக் கொண்டு அரண்மனையினின்றும் நீங்கி வெளி யேறி நகரத்தைக் கடந்து போயினான்.

அத்தியாயம்-4.

ஸ்ரீ பாலன் தவள செட்டியோடு சினேகங் கொள்ளல்.

மேற்கூறியபடி நகரத்தை விட்டு வெளியேறிய ஸ்ரீபாலன் அநேக நாடு நகரங்களையும், வனங்களையும் மலைகளையும், கடந்து சென்று பிரகுகச்ச நகரத்திற் குச் சமீபமாகப் போய்ச் சேர்ந்தான். அந் நகரம் ஒரு கந்தர்வ நகரம் போல மிகவும் சிறப்புடையதாய் விளங் கிற்று. அந் நகரத்தின் அழகைப் பார்த்த படியே ஸ்ரீபாலன் அதிசயித்து அதற்குட் பிரவேசித்தான.

அந் நகரத்தில் தவள செட்டி யென்னும் ஒரு கப்பல் வியாபாரி யிருந்தான். அவனுக்கு ஐந்நூறு வியாபாரக் கப்பல்கள் உண்டு. அவன் அத் தருணத்தில் அந்த ஐந்நூறு கப்பல்களிலும் சரக்குகளை ஏற்றிக் கொண்டு அந்நிய தேசம் செல்லப் பிரயாண மானான். அவன் அவ்வாறு பிரயாண மாகும்போது எவ்வளவோ பிரயாசைப்பட்டு அக் கப்பல்களை மாலுமிகளால் நடப்பிக்கும்; அவை இருந்த இடத்தை விட்டுப் பெயரவில்லை. அதனால் அவ் வணிகன் மன வியாகுல முற்று "இஃதென்ன அதிசயம்! நம் கப்பல்கள் இருந்த இடம் விட்டுப் பெயராமலிருப்பதற்குக் காரண மென்ன?" என்று தன் புரோகிதனை யழைத்து அவனிடம் இதற்குக் காரணத்தை வினவினான். அவன் தவள செட்டியை நோக்கி "வணிகர் பெருமானே! சில துர்த்தேவதைகளின் அக்கிரமச் செய்கையால் உம்முடைய கப்பல்கள் நிலைபெயரா திருக்கின்றன. ஆயினும் முப்பத்திரண்டு அங்கலக்ஷணங்களை யுடைய ஒரு மஹா புருஷன் கரத்தால் அக் கப்பல்களைத் தொடும்படி செய்தால், அவை நடைபெறும்" என்று சொன்னான்.

அதைக் கேட்டவுடனே தவள செட்டியானவன் பல வீரர்களை யழைத்து அவர்களிடம் "நீங்கள் நாலா திக்குகளிலுஞ் சென்று முப்பத்திரண்டு அவயவ லக்ஷணங்களோடு கூடிய ஓர் புருஷனைத் தேடிக் கண்டு அவன் எவனாயிருந்தாலும் உடனே அழைத்து வருவீராக" என்று கட்டளை யிட்டான். இக் கட்டளையைச் சிரமேற்கொண்ட அவர்கள், உடனே சென்று அக்க கைய புருஷனைத் தேடத் தொடங்கினார்கள். அவ்வாறு

தேடிக்கொண்டு வரும்பொழுது மேற் கூறியபடி அந் நகரத்திற் சென்ற ஸ்ரீபாலனைக் கண்டார்கள். அங்ஙனம் கண்டவுடனே அவனுக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் புரிந்து "ஐய! இந் நகரத்தில் தவளசெட்டியாரென்னும் வணிகர் ஒருவர் இருக்கின்றார்; அவர் இப்பொழுது தங்களைப் போன்றவர்களுடைய சிநேகத்தை மிகுதியும் விரும்பி யிருக்கின்றார். தாங்கள் அவரைப் பார்த்தால் தங்களுக்கு நன்மையுண்டாகும்" என்று கூறி அவனை அழைத்தார்கள். ஸ்ரீபாலன் அவர்களுடைய வார்த்தைகளுக் கிணங்கி அவர்கள் பின்னே சென்றான். எல்லோரும் தவள செட்டியாரிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

தவள செட்டியார் ஸ்ரீபாலனைக் கண்ட வுடனே அளவற்ற மகிழ்ச்சி யடைந்து, அவனுக்குப் போஜன முதலியவைகள் அளித்து மிகவும் உபசாரம் புரிந்து, உயர்ந்த ஆசனம் கொடுத்து, அதில் அவனை எழுந்தருளச் செய்து, பின்னர் அவனை நோக்கி, "சுவாமி! உம்முடைய வரவு எனக்கு நல்வரவாயிற்று. உம்மைத் தரிசித்த மாத்திரத்தில் நான் சகல துன்பங்களும் நீங்கப் பெற்றேன். இப்போது நான் உம்மை அழைப்பித்ததற்குத் தகுந்த காரணம் ஒன்று உண்டு: என்னுடைய ஐந்நூறு கப்பல்களும் சில துர்த்தேவதைகளின் துஷ்டச் செய்கையால் இருந்த இடம் விட்டுப் பெயராது இருக்கின்றன. அவற்றைப் பற்றிப் புரோகிதரிடம் நான் வினவியதில் அவர் முப்பத்திரண்டு அங்கலக்ஷணங்களோடு கூடிய ஒருமகா புருஷனுடையகரத்தால்அக் கப்பல்களைத் தொடும் பக்ஷத்தில் அவை நடைபெறுமென்று கூறினார். அவர் வாக்கின்படி அத்தகைய

லக்ஷணங்களையுடைய புண்ணிய புருஷனை அழைத்து வரும்படி, நான் என்னுடைய வீரர்களை ஏவினேன். நீர், அவ்வித லக்ஷணங்களோடு கூடியவரா யிருத்த லினுலே, அவர்கள் உம்மை என்பால் அழைத்து வந்தனர். ஆதலின், நீர் நயவு செய்து என்னுடைய குறையை நிவிர்த்திக்கவேண்டும்." என்று இரந்து கூறினான்.

இதைக் கேட்டதும் ஸ்ரீபாலன் அவனை நோக்கி "ஐயா! தவளசெட்டியாரே! உம்முடைய இஷ்டப்படியே நான் இக் காரியத்தை நிறைவேற்றுகின்றேன். ஆனால், ஜிநாலயமடைந்து சர்வக்ஞனுக்கு பூசனை செய்தபின்புதான் இதைச் செய்ய வேண்டும். அதற்குரிய சௌகரியங்களை நீர் ஏற்படுத்தினால் நான் கடவுள் பூஜையை முதலில் நிறைவேற்றிப் பின்னர் உம்முடைய எண்ணத்தைப்பூர்த்தி செய்வேன்" என்றான். உடனே தவளசெட்டி பூஜாதிரவியங்களை யெல்லாம் ஸ்ரீபாலனுக்குக் கொடுத்தான். ஸ்ரீபாலன் அவற்றைப் பெற்றுக் கொண்டு ஜிநாலயமடைந்து கடவுளுக்கு பூசனை அபிஷேகம் முதலியவற்றை யெல்லாம் செய்து முடித்து அவர் பாதங்களில் வீழ்ந்துநமஸ்கரித்து அவரைத் துதித்தெழுந்து, அக்கடவுளுக்கு அபிஷேகம்செய்தகந்தோதகத்தைக் கொண்டு வந்து தவளசெட்டியுடன் கப்பல்களின் அருகே போய் நின்று கடவுளை ஸ்தோத்திரம் பண்ணி (சித்தன் நம:) என்று மந்திரஞ் சொல்லி அவற்றின் பேரில் தெளித்தான். அவ்வாறு தெளித்த மாத்திரத்தில், அக் கப்பல்களை அசையவிடாமல் தடுத்துக் கொண்டிருந்த துஷ்ட தேவதைகளெல்லாம்

காற்றாய்ப் பறந்தோடிப் போயின. உடனே கப்பல்க ளெல்லாம் நடக்கத் தலைப்பட்டன. இவ்வதிசயத்தைக் கண்டு அக்கப்பல்களிலிருந்த ஜனங்களும் தவள செட்டியும் மஹா சந்தோஷத்தையடைந்து ஸ்ரீபால னைப் புகழ்ந்து துதித்தார்கள். அதன்மேல், தவள செட்டி ஸ்ரீபாலனை விட்டுப் பிரிய இஷ்டமில்லாதவ னாய் அவனையும் ஒரு கப்பலி லேற்றித் தன்னுடைய ஐந்நூறு கப்பல்களையும் நடப்பித்துக் கொண்டு, தான் குறித்த இடங்களுக்குச் செல்லப் பிரயாணமாயினான்.

அவ்வாறு புறப்பட்டு எல்லோரும் நடுக்கடலைச் சார்ந்து அந்தரத்வீபம் என்னும் ஒரு தீவுக்கருகே செல்லும்போது அத்தீவிலிருந்த பப்பரான் என்னும் ஓர் சோர ராஜாவானவன் அநேக கப்பல்களுடனும், வீரர்களுடனும், பலவித ஆயுதங்களுடனும் வந்து தவள செட்டியின் கப்பல்களை வளைத்துக்கொண்டு யுத்தம் புரிந்து அவனைச் சார்ந்த வீரர்களை யெல்லாம் சின்னபின்னப் படுத்தி வெற்றி கொண்டு கப்பல்களி லிருந்த ஜனங்களை யெல்லாம் கட்டிப் போட்டு விட்டு அவற்றில் நிரப்பப்பட்டிருந்த திரவியங்களை யெல்லாம் அபகரித்துக் கொண்டு போயினான். அவனுடைய கொடுஞ் செய்கையைக் கண்ட தவள செட்டி மனம் கலங்கி அத்திருடர்களால் தீங்கடையாமல் ஓர் கப்பலி லிருந்த மஹா சாமர்த்தியவானாகிய ஸ்ரீபாலனிடஞ் சென்று அவன் அவ்வாறு இருந்ததனால் பகைவனை ஜெயிப்பான் என்று உறுதிகொண்டு அவனை நோக்கி "வீரசிகாமணியே! நீ இருக்கும்போதும் எனக்கும் என்னைச் சார்ந்தவர்க்கும் இத்தகைய தீங்கு நேர லாமோ! நடுக்கடலில் வந்து இடுக்கண் புரிந்து போ

கின்ற இத்துடுக்கர்களாகிய சோரரை இப்பொழுதே அடக்கி அவர் கைவசப்பட்ட பொருள்களை மீண்டும் எங்களிடம் சேர்ப்பிக்க வேண்டும். இவ்வுதவியைச் செய்யாமல் நீர் வேடிக்கை பார்த்திருப்பது தகாது.'' என்று கூறினன்.

இந்த வசனங்களைக் கேட்ட வுடனே ஸ்ரீபாலன் தவள செட்டியின் மீது இரக்கமும் சோரர் மீது கோபமும் கொண்டு, உடனே தன்னிடத்திலிருந்த வில்லை வளைத்து நாணேறிட்டுக் கையிற் பிடித்து, அம்புப் புட்டிலை முதுகிற் கட்டி, யுத்த சன்னத்தனாய்ப் புறப்பட்டுப் போய், அச் சோரர் கப்பல்களை விரைவிற் கண்டு அவற்றைத் தடுத்து யுத்தஞ் செய்து அச் சோரர்களை யெல்லாம் பிடித்துக் கட்டி, அவர்களையும் அவர்களுடைய கப்பல்களையும், அவர்களால் திருடிக்கொண்டு போகப்பட்ட திரவியங்களையும் திரும்பக் கொண்டு வந்து தவள செட்டியின் கப்பல்களின் அருகிற் சேர்த்தான். அவ்வாறு கொண்டு வந்து சேர்த்த பின்பு தவள செட்டி முதலியவர்கள் எல்லோரும் சந்தோஷித்து அவ்விடத்திலேயே தங்கள் கப்பல்களுக்கு நங்கூரமிட்டு ஸ்ரீபாலனுடனே சில தினங்கள் தங்கினர்கள். அப்போது ஸ்ரீபாலன், அந்தச் சோரர்களைத் தன் வச மாக்கிக்கொண்டு அவர்களுக்கு ஆகாரம் முதலியவைகளை அளித்துப் பாதுகாத்து வந்தான்.

இப்படியிருக்கும் போது ஒரு சமயத்தில் அந்தச் சோரர்கள் ஸ்ரீபாலன் தங்களுக்குக் கெடுதி யொன்றும் செய்யாமல் இருந்ததைப் பற்றி, அவன் மீது சற்று விசுவாச முடையவர்களாய் அவனை நோக்கி ''சுவாமி! உம்முடைய நல்ல குணத்திற்காக நாங்கள்

மகிழ்ச்சியடைந்தோம். நீர் எங்களுடனே எங்கள் தீவிற்கு வருவீரானால் உமக்கு அளவற்ற திரவியங்களை க்காணிக்கையாகக் கொடுத்து இன்னும் பல கௌரவங்களையுஞ் செய்து உம்மை அனுப்புவோம். ஆகையினால் தயவு செய்து இதற்கு நீர் இசைய வேண்டும்." என்று கூறினார்கள். ஸ்ரீபாலன் இந்த வார்த்தைகளைக் கேட்டு அவர்களுடன் போக மனம் ஒருப்பட்டானெனினும் 'இவர்கள் திருடர்கள் ஆதலின் இவர்களின் வார்த்தையை நம்பலாகாது; தவள செட்டியாரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டுதான் நாம் செல்ல வேண்டும்' என்று கருதி, தவள செட்டியின் முகத்தை நோக்கினான். அக் குறிப்பை யுணர்ந்த தவள செட்டி ஸ்ரீபாலனை இரகசியமாக ஒரு பக்கத்தில் அழைத்துக் கொண்டு போய் அவனிடத்தில் "சுவாமி! சோரர்களோ மஹா வஞ்ச நெஞ்ச முடையவர்கள்; அவர்கள் இதமான வார்த்தைகள் பேசினும் ஒரு போதும் அவர்களின் சொல்லை நம்பலாகாது; அவர்களுடைய கபடமான வார்த்தைக் கிணங்கி நீர் அங்குச் செல்வீரானால் உமக்குக் கேடு சம்பவிக்கும்; ஆதலின் நீர் அவர்களுடன் போகக் கருதியிருக்கும் எண்ணத்தை இப்பொழுதே அகற்றி விடுவீராக" என்று சொன்னான். அதன் மேல் ஸ்ரீபாலன் சோரரிடம் வந்து "எனக்கு வேறு பல அவசியமான காரியங்க ளிருக்கின்றமையால் நான் உங்களுடன் வருதல் முடியாது" என்று கூறிவிட்டான்.

பின்னர் அந்தச் சோரர்களுக்குத் தலைவனாகிய பர்ப்பரன் ஸ்ரீபாலனுடைய நற்குணங்களைப் பலவாறு கொண்டாடி அவனுக்குத் தன்னிட மிருந்தவற்றுள்

ழு கப்பல்களையும் அளவற்ற திரவியங்களையும் கொடுத்து அவனிடம் விடை பெற்றுக்கொண்டு தன்னுடைய கூட்டத்தாரோடு தானிருக்கும் தீவிற் போய்ச் சேர்ந்தான்.

அத்தியாயம்—5.

மதன மஞ்சுஷை திருமணம்.

அதன்மேல் தவளசெட்டியும் ஸ்ரீபாலனும் மற்ற ஜனங்களும் தங்கள் வசமிருந்த ஐந்நூற்றேழு கப்பல்களையும் நடப்பித்துக் கொண்டு பற்பல தீவுகளின் துறைமுகங்களைப் பிடித்து முடிவாக இரத்தினத்வீபம் அடைந்து அத்துறைமுகத்தில் நிறுத்திவிட்டு இறங்கி அங்குள்ள நகரத்திற் பிரவேசித்தார்கள். அந்நகரமோ சகல வளங்களும் நிறைந்து பொன்னுலகம் போலச் சிறப்புற்று விளங்கிற்று. அத்தகைய பட்டணத்திற் புகுந்தவுடன் ஸ்ரீபாலனும் மற்றவர்களும் அங்குள்ள சிறந்த மாளிகைகளின் ஒழுங்கையும், கடைவீதிகளின் அழகையும், தெருக்களின் சிறப்பையும், மற்றுமுண்டான விநோதங்களையும் பார்த்துத் திரிந்தார்கள். அவர்களில் ஸ்ரீபாலன், ஒருபக்கமாகச் சென்று அங்கே ஓரிடத்தில் சஹஸ்ர கூடங்களையுடைய திரைலோக்ய திலகமென்னும் ஜினாலயமிருக்கக்கண்டு சந்தோஷத்துடன் அதனருகே சென்றான். அந்தக் கோவிலின் கோபுர வாயிற் கதவானது மூடப்பட்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் ஸ்ரீபாலன் 'இக்கோ

யிற் கதவு மூடப்பட் டிருப்பதற்குக் காரணம்யாது?'' என்று அங்கிருந்த துவார பாலகாளிடம் வினவினான்.

அதற்கு, துவார பாலகர், ''ஐயா! இந்தக் கபாடத்தை தேவர்களாலும், வித்தியாதார்களாலும் கூட திறத்தல் முடியாது. இது சகல புண்ணியங்களும் நிறைந்த ஒரு மஹா புருஷனால் மாத்திரம் திறக்க முடியும். அப்படியிருக்க இதைப்பற்றி நீர் ஏன் சிந்திக்கின்றீர்; இஃது உம்மால் இயலுங் காரியமன்று; நீர் வந்தவழியைப் பார்த்துச் செல்லும்'' என்று ஸ்ரீபாலனிடத்தில் அவமதிப்பாகக் கூறினார்கள். இவ் விருத்தாந்தத்தைக் கேட்டவுடன் ஸ்ரீபாலன் அவர்களிடம் ஒன்றும் பேசாமல் மிகுந்த தெய்வபக்தியோடு கூடி, சித்தன் நம: என்னும் மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே அந்தக் கபாடத்தைத் தன் காத்தினால் தொட்டான். அங்ஙனம் அவன் காம் பட்டமாத்திரத்தில் அக்கபாடம் தானே திறந்து கொண்டது. உடனே அவன் அந்த ஆலயத்திற்குள் பிரவேசித்துக் கடவுளைத் தரிசித்து, அவர் முன்னே நின்று அநேக ஸ்தோத்திரங்களைச் செய்து சுவாமிக்கு அபிஷேகம் நடத்தி, பூசனையை நிறைவேற்றிச் சுவாமி பாதங்களில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து நமஸ்கரித்துக்கொண்டு திரும்பி வந்தான்.

இக்கோவிலானது நெடுங்காலத்திற்கு முன்னே மூடப் பட்டது. இந் நகாத்திற்கு இறைவனாகிய வித்தியாதர மன்னன் தன் புத்திரி யொருத்திக்கு ''நாயகன் யாவன்?'' என்றுஒருமுனிவரிடம் வினவ அவர்'இந்தக் கோவிலை எவன் திறக்கின்றானோ அவனே மணவாள

றுவான்' என்று ஒருசமயத்தில் கூறியிருந்தார். அவ்வ ரசன் அத்தகைய மனிதன் வந்து கதவைத் திறக்கும் போது அவ் விவரத்தைத் தனக்குத் தெரிவிக்குமாறு துவார்பாலகரை அக் கோவிலின் கோபுர வாயிலில் வைத்திருந்தான். அவர்கள் தாம் மேற்கூறியபடி ஸ்ரீபாலனை எளனம் செய்தவர்கள். ஸ்ரீபாலன் கதவைத் திறந்த அதிசயத்தைக் கண்டவுடனே அவர்கள் சென்று அவ் வித்தியாதர மன்னனிடம் தெரிவித்தார் கள். அவன் உடனே ஸ்ரீபாலனைக் காணும் பொரு ட்டு ஓடிவந்தான். அப்படி ஓடி வந்து கோவிலுக்குட் புகுந்த மாத்திரத்தில் முன் சொன்னவாறு கடவுள் பூஜை முடித்துத் திரும்பி வந்த ஸ்ரீ பாலன் அம் மன் னனுக் கெதிர்ப்பட்டான். அவனைக் கண்ட மாத்திரத் தில் அவ்வித்தியாதர மன்னன் உவகைமிகுந்தவனாய்த் தழுவிக்கொண்டு, அவன் முகத்தை நோக்கி "புண் ணிய புருஷனே! உன் வரவு எனக்கு மிகுந்த ஆனந் தத்தை யுண்டாக்கிற்று. நான் இத் தீவிற்கு இறைவனா கிய வித்தியாதர மன்னன். என்தேவி தேவமாலினி யென்பாள். எனக்கு சித்திரன், விசித்திரன் என்னும் இரண்டு புத்திரர்கள் உண்டு; இவர்களுக்குப் பின் பிறந்த மதன மஞ்சுஷை என்னும் ஒரு புத்திரியும் இருக்கின்றனள்; அவள் பருவமடைந்த போது நான் ஒரு சமயத்தில் ஞானசாகரர் என்னும் முனிவரைக் கண்டு 'சுவாமிகளே! என் புத்திரிக்கு எவன் நாயகனா வான்?' என்று வினவினேன். அதற்கவர் 'இந்தஇரத் தின தீபத்தில் எப்பொழுதும் மூடப்பட்டிருக்கும் தி ரைலோக்ய திலக மென்னும் ஜினாலயத்தின் கோபுர வாயிற் கபாடத்தை எவன் திறக்கின்றானோ அவனே

உன் புத்திரிக்கு மணவாளனாகத் தகுந்தவன்,' என்று கூறினார். நான் அது முதல் அத்தகைய ஓர் புண்ணிய புருஷனுடைய நல் வரவை எதிர்பார்த்திருந்தேன். இன்று உன்னால் கதவம் திறக்கப்பட்ட அதிசயத்தை துவார பாலகரால் கேள்வியுற்று உன்னைக் கண்டு என் எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்ளும்படி ஓடி வந்தேன். ஆதலின், முனிவர் கூறியபடியே நீ என் புத்திரியை விவாகம் செய்து கொள்ளுவதற் கிசைய வேண்டும்" என்று கூறினான்.

அப்போது ஸ்ரீ பாலன் "நாம் நினையாதிருக்கும் போதே நமக்கு இத்தகைய காரியங்கள் தாமே சம்பவிக்கின்றன. இவையெல்லாம் பூர்வ கர்ம வசத்தினால் நிகழ்வனவாம். ஆதலின், இம் மணத்தை நாம் மறுத்தல் கூடாது" என்று சிந்தித்து வித்தியாதரனுடைய வார்த்தைகளுக் கிணங்கினான். உடனே அம் மன்னன் ஸ்ரீபாலனைத் தன் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போய் அச் சமயமே நன் முகூர்த்தம் ஏற்பட்டிருந்தமையால் அதில், சகல சிறப்புக்களுடனும் தன்புத்திரியை அவனுக்கு விவாகஞ் செய்து கொடுத்து நற் போசனம் முதலியவற்றை யுதவி உபசாரம் புரிந்து அநேக ஆடையாபரணங்களையும், அளவற்ற திரவியங்களையும், சதுரங்க சேனைகளையும் அபூருபமான இரண்டு வித்தியாதர வித்தைகளையும் நல்கினான். இங்கே இவ்வாறு மணம் நிகழ்ந்து கொண்டிருக்க, தவள செட்டி முதலியவர்கள் அந்நகரத்தைச் சுற்றிப் பார்த்துத் தங்களுக்காக வேண்டிய காரியங்களை முடித்துக்கொண்டு துறைமுகம் சேர்ந்து தங்கள் கப்பல்களில் தங்கியிருந்தார்கள். மேற்கூறியபடி ஸ்ரீபாலன் அக் கன்

னிகையைக் கலியாணம் செய்து கொண்டு, சகல சிறப்புக்களையும் அடைந்த பின்னர், அவ்வித்தியாதர மன்னனிடம் விடை பெற்றுக் கொண்டு தன்மனைவியுடனும், தனக்குக் கிடைத்த பொருள்களுடனும் தவள செட்டியிடம் போய்ச் சேர்ந்தான். அவ் வணிகன் நடந்த செய்திகளை யெல்லாம் ஸ்ரீபாலனிடம் விசாரித்து உணர்ந்து மிக்க மகிழ்ச்சியடைந்து அவனைப் பலவாறு கொண்டாடினான். அதன் மேல் எல்லோரும் கப்பல்களின்மேலேறித் தங்கள் நகரத்திற்குச் செல்லப் புறப்பட்டார்கள்.

அத்தியாயம்- 6.

ஸ்ரீபாலனை தவளசெட்டி சமுத்திரத்தில் தள்ளுதல்.

மேற்கூறியபடி எல்லோரும் சமுத்திரத்திற் செல்லும் போது மதனமஞ்சுஷை யென்னும் பெண்ணானவள் தன்னுடைய நாயகனது விருத்தாந்தத்தை விசாரித்துணர விருப்ப முடையவளாய், ஒரு சமயத்தில் தானும் அவனும் தனித்திருக்கும் போது அவனைநோக்கி "எனக்குரிய நாதரே! நான் இதுவரையிலும் உம்முடைய சரித்திரத்தைத் தெரிந்து கொள்ளவில்லை. இவ்வாறு அறியாமலிருப்பது தகுதியன்று. ஆகலால் இப்போது உம்முடைய விருத்தாந்தத்தை எனக்கு விரித்துரைக்க வேண்டும். உம்முடைய நகரம் யாது? உம்முடைய தாய் தந்தையரிருக்கின்றனரோ? உமக்கு வேறு மனைவியருளரோ? சுற்றத்தாருண்டோ?" என்று வினவினாள். அதற்கு ஸ்ரீபாலன் "கண்மணி

யே! நீ இவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியந்தான். உன்னுடைய வினக்களுக்கு விடையளிக்கின்றேன் கேட்பாயாக: எனக்குச் சொந்தமான நகரம் சம்பாபுரமாகும்; என் தந்தை இறந்துவிட்டார்; கமலாவதி யென்னும் என் மாதா இருக்கின்றாள்; என் சிறிய பிதா எனக்குத் தீங்கு செய்ய நினைத்ததால் நான் என் தாயாருடன் வெளியேறி, வாரணாசியில் தங்கி, பின்னர் உஜ்ஜயினிப் பதியை யடைந்து அவ்விடத்தில் வசித்து வருகின்றேன்; அங்கே, அந்நகரத்தின் இராஜகுமாரத்தியாகிய மதன சுந்தரியை மணம் புரிந்துள்ளேன்; அவள் இப்பொழுது என் தாயுடன் அந்நகரத்திலேயே இருக்கின்றாள்; இன்னும் அங்கே என் பரிவார ஜனங்கள் எழுநூறு பேர்களும் இருக்கின்றார்கள்" என்று கூறிப் பின்னும் தன்னுடைய மற்ற சரித்திரங்களையும் விவரமாக எடுத்துச் சொன்னான். இவற்றையெல்லாம் மதனமஞ்சுஷை கேட்டு மிக்க வியப்படைந்து தன் கணவன்மீது விசுவாச முடையவளாய் மகிழ்ந்திருந்தாள்.

இப்படி யிருக்கும்போது, ஒருநாள் தவள செட்டியானவன், மதனமஞ்சுஷை தன் அறைக்குள்ளிருந்து வெளிவருஞ்சமயத்தில் அவளைப் பார்த்து விட்டான். அந்தோ! அவன் அவ்வாறு பார்த்தவுடனே, அவனுக்கு ஸ்ரீபாலன்மீது ஏற்பட்டிருந்த விசுவாச மெல்லாம் எங்கேயோ பறந்தோடிப் போய் விட்டது. ஸ்ரீபாலன் தனக்குச் செய்த நன்றிகளை யெல்லாம் அவன் அடியோடு மறந்து விட்டான். மதனமஞ்சுஷைமீது அச் சண்டாளன் ஏதோ ஒருவிதமான துர் அபிப்பிராயங் கொண்டு விட்டான். 'சிநேகிதனுடைய இல்லத்தில்

தீங்கு செய்வார் செத்த பிணத்திற்குச் சமமாவார்,' என்னும் நீதியை அவன் சிறிதும் நினைக்கவில்லை. 'உத்தமிகளுக்கு இடர் செய்வார் எப்பொழுதும் நரகிற்கே சுமை செய்வார்' என்னும் அறமொழியையும் அறவே மறந்தான். ஐயோ! பாவம்!! பாவம்!!! ஸ்ரீபாலனை யொழித்து அவளை, தான் கைப்பற்றிக்கொள்ளவேண்டுமென்றே அந்த மட்டியாகிய செட்டி தீர்மானித்து விட்டான்.

மேற்கூறியபடி தவள செட்டி மகா பாதகமாகிய எண்ணத்தை மனத்திற் கொண்டவுடனே மதிமயங்கி ஆகார முண்ணாமல் தேகம் மெலிவடைந்து முகம்வாடி தான் கொண்ட எண்ணத்தை வெளிப்படுத்த முடியாமல் அவஸ்தைப் பட்டுக்கொண் டிருந்தான். அவனுடைய பரிவார ஜனங்களில் முக்கியஸ்தனாகிய ஒருவன் தவள செட்டியின் முகவாட்டத்தைக் கண்டு, அவன் தனித்திருக்குஞ் சமயத்தில் அவனை நோக்கி "வணிகர் தலைவ! உமது முகம் மிகவும் வாட்ட மடைந்திருக்கின்றது. உலகத்தில் எவருக்கும் மனத்துயரத்தினாலேயே முக வாட்ட முண்டாகும். ஆதலின் நீர் மனத்தில் ஏதோ கவலை யடைந்திருக்கின்றீர் என்று நான் நினைக்கிறேன். உம்முடைய மனத் துயரம் யாது? அதனைத் தெரிவிப்பீராக" என்றான். அதற்கு, தவள செட்டி தான் கொண்ட எண்ணத்தை அவனிடம் தெரிவித்து, "எப்படியாவது என்விருப்பத்தை நிறைவேற்றினால் மாத்திரந்தான் என்மனம் திருப்தி யடையும். இல்லாவிடில் நான் ஒரு பித்தம் பிடித்தவனைப் போன்று ஒரு காரியமும் செய்ய இயலாமல் தலை சுழன்று தரையில் சாய்ந்து விடுவேன்" என்று கூறினான். அம்

மனிதன் இந்தக்கொடிய வசனங்களைக் கேட்டதும் 'ஐயோ! பாவி என்ன நினைத்தான்!' என்று வருந்தி, தவள செட்டியை நோக்கி "உத்தமமான குலத்திற் பிறந்த புத்திமானே! உமக்கு இது தகுங் காரியமன்று. பலருங் கொண்டாடத்தக்கவியாபாரி யாகியநீ இத்தீய எண்ணங் கொள்ளலாமா? பதிவிரதைகளை நினைத்தாலும் நெஞ்சம் வெந்து போகுமே. இத்தகைய எண்ணத்தால் எத்தனையோபேர் கெட்டொழிந்ததை நாம் இதிகாச புராணங்களால் அறிந்திருக்கின்றோமே. கீசகன் மகா பதிவிரதையாகிய திரௌபதியைக் கற்பழிக்க நினைத்து அதனால் அடைந்த கேடும் பழிப்பும் உலகத்தில் என்றும் நிலைபெற்றிருக்கின்றனவே. சீதையை அபகரித்த இராவணன் தன்னுடைய பெருஞ் செல்வாக்கையெல்லாம்இழந்து பத்துத் தலையும் அறுபட்டுவீழ, மாய்ந் தொழிந்ததை எவர் அறியாதார்? இன்னும் எத்தனையோ பேர் இவ்வித கெடு நினைப்பால் படு நரகில் வீழ்ந்து அழிந்தார்கள். இவர்களுடைய நிலைமைகளை யெல்லாம் நீர் உணர்ந்திருந்தும் இவ்விதம் தீங்கான வழியில் பிரவேசித்த தானது விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் வீழ்வதுபோ லிருக்கின்றது. மேலும், ஸ்ரீபாலனே உமக்கு அருமைச் சிநேகிதன்; நீரே அவனைத் தேடிக் கண்டு சிநேகிதனுக்கிக் கொண்டீர். அவனால் பல நன்மைகளையும் அடைந்திருக்கின்றீர். அவனுடைய அஸ்த விசேஷத்தால் உம்முடைய கப்பல்களெல்லாம் நடை பெற்றன. இத்தகைய சிநேகிதனுக்கு நீர் துரோகஞ் செய்வது மகா பாதக மாகும். ஆகலால் இந்த எண்ணத்தை விட்டு விடும்." என்று கூறினன்.

அவன் இவ்வாறு நீதிகளை எடுத்துக் கூறியும் தவள செட்டியின் மனம் நல்வழிக்குத் திரும்பவில்லை. அதனால் அந்தச் செட்டி நீதி கூறிய அவனைக் கடிந்து பேசிஅனுப்பி விட்டுத் தன் மனம்போல் நடக்கக்கூடிய வணிகபமற்றொருவனை யழைத்து அவனிடத்தில், தான் கொண்ட எண்ணத்தை வெளிப்படுத்தி "என்னுருயிர்த் துணைவ! 'உனக்கு ஒரு லக்ஷம் பொன் தருகின்றேன். இக் காரியத்தில் நீ எனக்குத் துணையாயிருந்து இதனை எப்படியாவது நிறைவேற்றி வைக்கவேண்டும். இதற் கோர் உபாய மிருக்கின்றது. அதனைக் கூறுகின்றேன் கேள். ஒரு பெரிய மீன் சமுத்திர ஜலத்தில் வருவ தாக நாம் கப்பலின் மேல் தட்டில் போய் நின்று கூச்ச விடவேண்டும். அந்தக் கூச்சலைக் கேட்டவுடன் ஸ்ரீபா லன் வெளியேறி நம்மிடம் ஓடி வந்து 'என்ன விசேஷ ம்? ஏன் கூச்சவிடுகின்றீர்கள்?' என்று கேட்பான்; அப்போது நாம் 'இங்கே ஒருபெரிய மீன் வருகின்றது; இதனைநீர் பாரும்' என்று கூறுவோம்; அவன் அப்படி யே கப்பலின் ஓரமாகப் போய் நின்று கீழே ஜலத்தை நோக்குவான். அச் சமயத்தில் நாம், அவனைச்சமுத்தி ரஜலத்தில் தள்ளி விடலாம்; இக்காரியம் முதலில் முடி ந்து விட்டால், பின் அவன் மனைவியைப் பற்றிய காரி யம் எளிதில் நிறைவேறும்; உன் சம்மத மென்ன? அத னைத்தெரிவிப்பாயாக" என்றான். உடனே அவன் அதற் கிசைந்து இவனை நோக்கி "நீர் கூறியபடியே இக் காரி யத்தைச் செய்து முடிப்போம்." என்று கூறி விட்டு மற்றொரு செட்டியையும் தனக்குத் துணை சேர்த்துக் கொண்டு தவள செட்டியுடன் கப்பலின் மேற்பாகத் திற் போய் ஒரு கோடியில் நின்று கொண்டு "இதோ!

ஒரு பெரிய மச்சம் வருகின்றது. கப்பலிலுள்ளவர்களே! நீங்கள் விரைந்தோடி வந்து இதனுடைய பிர்மாண்டமான ரூபத்தைப் பாருங்கள்" என்று உரக்கக் கூறினான். அந்தக் கூச்சலைக் கேட்டவுடனே ஸ்ரீபாலன் தானிருந்த அறைக்குள்ளிருந்து வெளியேறி ஓடி வந்து தவளசெட்டி முதலியவர்களிடத்தில் "இஃதென்ன கூச்சல்?" என்றான். அப்போது அவனும் மற்றவர்களும் "ஸ்ரீபாலரே! இங்கே ஒரு அதிசயமான மச்சம் வருகின்றது. இதனைக் கண்டுதான் நாங்கள் அவ்வாறு கூவினோம். நீர்இதன் தோற்றத்தைப் பாரும். இது மிகவும் அதிசயமான வடிவமுடையதா யிருக்கின்றது." என்று கூறினார்கள்.

ஸ்ரீபாலன் இந்த வஞ்சகமான வார்த்தைகளைக் கேட்டவுடனே மெய்யென்றே நினைத்துக் கப்பலோரமாகப் போய் ஒரு பாய்மரக் கயிற்றைப் பற்றி அதன் மேற் சாய்ந்த படியே சமுத்திரத்தை எட்டிப் பார்த்தான். அந்தோ! பாபம்!! பாபம்!!! அந்தச் சண்டாளர்கள் முன் பின் யோசியாமல் அக் கயிற்றை வெகு சீக்கிரத்தில் அறுத்து விட்டார்கள். உடனே ஸ்ரீபாலன் திடீரென்று சமுத்திர ஜலத்தில் வீழ்ந்தான். அப்படி வீழ்ந்த வுடனே தவளசெட்டி 'சனியன் தொலைந்தது' என்று சந்தோஷித்துத் தன் கப்பல்களை விரைவாக நடத்தும்படி மாலுமிகளுக்கு ஆக்ஞாபித்தான். அவர்கள் அவ்வாறே நடத்தத் தொடங்கினார்கள். சிறிது நேரத்திற்குள் கப்பல்களெல்லாம் அவ்விடத்தை விட்டு நெடுந்தூரம் போய் மறைந்து விட்டன. சமுத்திர ஜலத்தில் வீழ்ந்த ஸ்ரீபாலன், ஒரு முறை நீரில் முழுகி மேலே கிளம்பி அஸ்த லாகவத்தால் மிதந்து

கொண்டு கப்பல் கயிறு தானே அறுபட்டிருக்குமென்றும், அதனாலேயே, தான் விழ்ந்திருக்கக் கூடுமென்றும், தவளசெட்டி முதலியவர்கள் உடனே தன்னைத் தூக்கிவிடுவார்களென்றும்நினைத்துக் கப்பல்களை நோக்கினான். மேற்கூறியபடி அக் கப்பல்கள்விரைந்துபோய் விட்டமையால், அவனுடைய கண்ணுக்குத் தோற்றவில்லை. அதனாலவன் தவள செட்டி முதலியவர்கள் தனக்கு வஞ்சனை செய்திருக்கின்றார்கள் என்பதை நிச்சயமாக உணர்ந்து கொண்டான். அவ்வாறு தெரிந்து கொண்டவுடனே அவனுடைய மனம் அடைந்த வேதனைக்கு அளவே இல்லை. அவன் நீரில் மிதந்து கொண்டிருந்தாலும் அலைகள் பலவிதமாகச் சுழன்று சுழன்று அவனுக்குப் பலவிதமான துன்பங்களை விளைவித்துக் கொண்டிருந்தன. அவன் நீரில் அமிழ்வதும் மேலே கிளம்புவதும் தலைகீழாகச் சாய்வதும் பின் நிமிர்வதுமாகப் படாத பாடுகளெல்லாம் பட்டான். இவ்வித சங்கடங்களையெல்லாம் அவன் அனுபவித்துக் கொண்டே தவள செட்டியின் கபடச்செய்கையை நினைத்துக் கண் கலங்கி "அடா செட்டியே! உன்னை மகா உத்தமனென்றே நான் நினைத்திருந்தேன். ஆதியில் நீ என்னோடு சிநேகங்கொண்டு என்னால் பல நன்மைகள் அடைந்ததை உத்தேசித்து நீ எனக்கு எள்ளளவும் தீங்கு செய்ய மாட்டாயென்றேநான்நினைத்திருந்தேன். நீயோமகா நய வஞ்சகக் காரனாய் இருந்திருக்கின்றாய். இப்பொழுது நீ எதை உத்தேசித்து என்னைச் சமுத்திரத்தில் வீழ்த்தினையோ எனக் கொன்றும் விளங்கவில்லை. என்னுடைய மனைவியையும், பொருள்களையும் அபகரித்துக் கொள்ள வேண்டுமென்னும் பேராசைக் குணத்தினால்

இவ்வாறு செய்தனை போலும்! நிலையற்ற உலக வாழ்வைப் பெரிதெனக்கருதினையேபாவி! என்னதான்கருதினாலும் என்னைக் கொல்ல நினைக்கலாமா? இவ்வாறு சிநேகத்துரோகஞ் செய்த சண்டாளனாகிய உன்னைக் கடவுள் தண்டிக்காமல் விடுவாரா? அப்படியே உனக்கு என்னுடைய திரவியங்களில் இஷ்டமிருக்கும் பக்ஷத்தில் உன் எண்ணத்தை எனக்குத் தெரிவித்தால் யான் யாதொரு தடையுஞ் செய்யாமல் அவற்றை உனக்குக் கொடுப்பேனே. நீ எனக்கு இவ்விதந் தீங்கு செய்து எவ்வளவு காலந்தான் உலகத்தில் ஜீவித்திருக்கப் போகின்றாய். அடா அறிவற்ற பதரே! உலகம் அநித்தியம் என்பதை நீ சிறிதும் உணர்ந்திலை போலும்; அற்ப சுகத்தைக் கருதி நீ எப்பொழுதும் நீங்காத பழிக்கு ஆளாகினையே. உன்னை இனி உலகத்தார் நம்புவார்களா? நீ நினைத்தபடி உலகத்தில் ஒரு போதும் சௌக்கிய மடையப் போகிறதில்லை. இம்மையில் பல கஷ்டங்களை யனுபவித்து மறுமையிலும் தீநரகிற் கிரையாவாய்" என்று அவனைப்பலவாறு நிந்தித்து விட்டு, அதன்மேல்மதனமஞ்சுஷையைநினைத்து "ஐயோ! என் அருமைக் காதலியே! நீ மணம் முடித்து இரண்டொரு நாள் கழிவதற் குள்ளாகவே என்னைப் பிரியுங்காலம் நேர்ந்ததே; உனக்கு இவ்வித ஆபத்து உண்டாயினதென்பதை நீ அறிந்த மாத்திரத்தில் உன் மனம் என்னபாடு படுகின்றதோ; நீ எவ்வாறு புலம்புகின்றனையோ; உன்னை அபகரிக்க வேண்டு மென்றே அச் சண்டாளன் எனக்கு இத்தீங்கினைச் செய்திருப்பதால் அவன் உன்னை என்ன பாடு படுத்துவானோ; இனி உன்னை நான் பார்க்கும் காலமும் வாய்க்குமோ; நான் பிழைப்

பேனே சாவேனே; நடுக்கடலில் யாதொரு பற்றுக் கோடு மின்றி வீழ்ந்து தவிக்கின்ற எனக்குக் கரை சேரும் மார்க்கமும் ஏற்படுமோ; ஆ! என்னுருயிர்த் துணைவியே! இனி நான் பிழைத்து வந்து உன்னைப் பார்ப்பது நிச்சயமில்லை. உன்னைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று பலவிதமாகப் புலம்பினான்.

அவன் இவ்வாறு சங்கடப் பட்டு "இனி நம்முடைய கதி எப்படியாகுனாலு மாகட்டும். நாம் கடவுளைத் தியானிக்க வேண்டும். அவருடைய கிருபை யிருந்தால் நாம் பிழைத்துக் கொள்ளவுங் கூடும்" என்று சித்த சக்கரத்தைத் தியானித்தபடியே நீரில் நீந்தினான். அச் சக்கரத்தின் மகிமையால் அவனுக்குச் சிறிதும் இளைப்புத் தோன்றவில்லை. ஜலத்தினுலேற்பட்ட பலவித அவஸ்தைகளும் நீங்கி விட்டன. நெஞ்சில் தைரியமும் தேகத்தில் வலிமையும் ஏற்பட்டன; மனதில் தைரியமுண்டாகவே அவன் சிறிதும் இளைப்பின்றி ஜலத்தில் நீந்திக் கொண்டே ஒரு திசையை நோக்கிச் சென்றான். அலைகளும் அப்பக்கமாக அவனை விரைந்து தள்ளின. தெய்வசங்கற்பத்தால் வெகு சீக்கிரமாகவே அவன் அந்தப் பக்கத்துக் கரையிற் போய்ச் சேர்ந்து விட்டான்.

அவ்வாறு கரை சேரவே ஸ்ரீபாலன் "நடுக்கடலில் கிடந்த நாம் இவ்வளவு சீக்கிரமாகக் கரை யேறியது மிகவும் அதிசயந்தான்; கடவுளே நம்மை இவ்வாறு காப்பாற்றி யிருக்கின்றார்; நம்முடைய சித்தசக்கரத்தின் மகிமையே மகிமை; அதன் துணையில்லாவிடில் நாம் இச் சமயம் பிழைப்பது அரிதாகும்; எல்லாம் கடவுள் செயல்" என்று, தன் வஸ்திரத்தைக் கடல் அப

கரித்துக் கொண்டபடியால் உள்ளுடையோடு ஓர் முனிவனைப்போல சமுத்திரக் கரையிலிருந்த ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். அவ்வாறு இருந்தவுடனே அவனுக்கு, தான் அப்போது அடைந்திருந்த நிலைமையைப் பற்றி மிகுந்த துக்கமுண்டாயிற்று. எனினும் அவன் "எதுவும் ஊழ்வினையின் படியே நடக்கும்; ஆதலால் இனி நாம் சித்தங் கலங்குவதிற் பயனில்லை; நம்முடைய துன்பக்கடலைக் கடப்பதற்கு தேவ நாம சிந்தனையே ஒரு தெப்பமாகும்; இப்போது நாம் தெய்வத்தைச் சிந்திப்பதன்றி வேறொன்றும் செய்யக்கூடாது" என்று கடவுளைத் தியானித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

அத்தியாயம்-7

குணமாலை திருமணம்.—தவளசெட்டி ஸ்ரீபாலன் மேல் நீசத்துவம் கற்பித்தல்.

ஸ்ரீபாலன் தங்கியிருந்த சமுத்திரக் கரையினோரமாக தவளவர்த்தன மென்னும் ஓர் பட்டின மிருந்தது. அதில் தனபாலன் என்னும் அரசன் அக்காலத்தில் அரசு செலுத்திவந்தான். அவனுடைய மனைவி வனமாலை யென்பாள். இவர்களுக்கு மனோகரன், சுகண்டன், ஸ்ரீகண்டன் என்னும் மூன்று புத்திரர்களிருந்தார்கள். குணமாலை யென்னும் ஒரு புத்திரியும் உண்டு. இவள் பருவமடைந்த வுடன் இவளுடைய தந்தையாகிய தனபாலன் முன்னொருநாள் ஒரு முனீஸ்வரரைக் கண்டு நமஸ்கரித்து அவரிடம் "சுவாமி!

"என்னுடையபுத்திரிக்கு நாயகனுவான் யாவன்?" என்று வினவினன். அதற்கவர், "அரசனே! இன்னும் கொஞ்சக் காலத்திற்குள் எல்லாலக்ஷணங்களும் அமைந்த இராஜபுத்திரனொருவன நடுக்கடலில் வீழ்ந்து நீந்திக்கொண்டு இந் நகரத்திற் கருகிலுள்ள கரையில் வந்து சேருவான்; அவனே உன் புத்திரிக்கு நாயகனுதற்குரியவன்; அவன் வருஞ்சமயம் அறிந்து நீ அவனுக்கே உன் குமாரத்தியை மணம் புரிந்து கொடுப்பாயாக" என்று கூறினர். அதன் மேல் அவ்வரசன் சில வீரர்களை அச் சமுத்திரக்கரையின் அருகிலிருந்தி "ஓர் திவ்விய புருஷன் கடலில் நீந்திக் கொண்டு வந்து இவ் விடத்தில் சேர்வான்; அவன் எப்பொழுது இங்கு வருகிறானே அப்பொழுதே என்னிடம் வந்து அச் செய்தியைத் தெரிவிப்பீராக" என்று அவர்களுக்கு ஆக்ஞாபித்திருந்தான். அப்படியே அவர்கள், அங்குக் காத்திருந்தார்கள். அப்படியிருக்கும் போதுதான் ஸ்ரீபாலன் அங்கே போய்ச் சேர்ந்தான்.

அவனைக் கண்ட மாத்திரத்தில் அவ்வீரர்கள் தனபால மஹாராஜனிடம் சென்று "அரசர் பெருமானே! நீர் தெரிவித்த புண்ணிய புருஷன் கடற்கரையில் வந்திருக்கின்றான்." என்று சொன்னார்கள். உடனே தனபால மகாராஜன் மிகுந்த சந்தோஷத்தை யடைந்து தன் பரிவார ஜனங்களோடு அங்குச் சென்று ஸ்ரீபாலனைக்கண்டு உபசார வார்த்தைகள் கூறித் தழுவிக்கொண்டு அவனுக்கு வேண்டிய ஆடையாபரணங்களை நல்கி, அவனைப் பற்றி முனிவர் கூறியதை அவனிடஞ் சொல்லி, அவன் 'இதுவும் பூர்வ கர்மப்படி நிகழ்வது தான்' என்று அதற்கிசைய, அச் சம்ம

தத்தின் பேரில் அவனை யானையின் மீதிலேற்றி அரண்மனைக் கழைத்துக் கொண்டுபோய் உபசரித்துச் சில தினங்கள் வைத்திருந்துபிறகு ஒரு நல்லதினத்தில் கலியாண முகூர்த்தம் ஏற்படுத்திச் சகல இராஜாக்களையும் வரவழைத்து அவர்களுக்கு முன்னிலையில் ஸ்ரீபாலனுக்கும் தன் புத்திரி குணமாலைக்கும் விவாகச் சடங்கைநிறைவேற்றி ஸ்ரீபாலனைத் தன்னுடைய பொக்கிஷசாலைக்குத் தலைவனாக ஏற்படுத்தினான். அதன்மேல் ஸ்ரீபாலன் அங்கே குணமாலையுடன் இனிது வாழ்ந்திருந்தான். எனினும் மதனமஞ்சுஷை என்னகதியடைந்தனளோ என்னும் விசாரமானது அவனுடைய மனதை வாட்டிக் கொண்டிருந்தது.

இப்படி யிருக்குங் காலத்தில், மேற்கூறியபடி ஸ்ரீபாலனை வஞ்சனையாகச் சமுத்திரத்தில் வீழ்த்திய தவள செட்டியானவன் அதன்மேல் மதனமஞ்சுஷையை வசப்படுத்துதற்குச் செய்ய வேண்டியஉபாயங்களை ஆராய்ந்து தன்மனதிற் கிசைந்த சில சேடியர்களை வரவழைத்து அவர்களை நோக்கி "பெண்களே' ஸ்ரீபாலனோ சமுத்திரத்தில் வீழ்ந்தொழிந்தான்; இனி நான் அவனுடைய மனைவியாகிய மதனமஞ்சுஷையென் பாலை வசப்படுத்திக்கொள்ள நினைக்கின்றேன்; நீங்கள் அவளிடஞ் சென்று 'உன்னுடைய கணவன் சமுத்திரத்தில் வீழ்ந்திறந்தான்; இனி நீஅவனை நினைப்பதால் ஒரு பிரயோசனமு மில்லை; அவனை மறந்து நீ சௌக்கியத்தை யடைவதற்கான வழியைத் தேடிக் கொள்.' என்று சொல்லுங்கள். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் அவள்சிறிது நேரம் அழுது புலம்பிவிட்டுப் பின்னர் மனந்தேறியிருப்பாள். அச்சமயத்தில் நீங்கள் அவ

னுக்கு இதமான வார்த்தைகளைக் கூறி அவளை என்னு டைய நோக்கத்தின்படி திருப்பி விடுங்கள்.'' என்று கூறினான்.

அத் தாதிகள் அவ்வாறே சென்று மதன மஞ்சு ஷையிடம் ''அம்மையே! நீ துரதிர்ஷ்டசாலியாய்ப் போய் விட்டாய்; மணம் முடித்த சில தினங்களுக் குள்ளாகவே மாங்கல்யத்தை இழக்குங் காலம் உன க்கு நேர்ந்துவிட்டது; அந்தோ! உன் கணவன் கட லில் வந்த ஒரு மச்சத்தைப் பார்க்கப் போய்க் கப்பலி லிருந்து கால் நழுவி ஜலத்தில் வீழ்ந்திறந்து விட்டார். நம்முடைய தவள செட்டியார் மிகவும் துக்கப்பட்டு அவருடைய பிரேதத்தையாவது எடுத்துப் பார்க்கலா மென்று எவ்வளவோ பிரயாசைப்பட்டுப் பார்த்தும் அஃது அகப்படவில்லை; உன் தலைவிதி இப்படி முடி ந்தது; இனிமேல் என் செய்வது அம்மா! நீ துக் கப்படாதே'' என்று ஒரு பெருங் கலக்கமான சமாச் சாரத்தை அவளுடைய செவிகளில் இடிபோலப் புகுத விட்டார்கள்.

இதைக் கேட்டவுடனே அவள், ''ஐயோ! என்நாய கர்போய் விட்டாரா!'' என்று ஒரு பெருங்கூச்சலிட்டு முகத்தில் அறைந்தபடியே மூர்ச்சித்துக் கீழே சாய் ந்து விட்டாள்; அவளுக்குப் பிரக்ஞையே கிடை யாது; அவிழ்ந்த கூந்தலுடனே ஒரு மயிலானது மயங்கித் தோகைகளைச் சோரவிட்டுக் கீழே கிடப்பது போல் கிடந்த அவளுடைய தோற்றமானது கல்மன தும் கரைந்துருகக் கூடியதாயிருந்தது; அவள் அவ் வாறு கிடப்பதைப் பார்த்தவுடனே அங்கு நின்ற சேடி யர் தவள செட்டியின் நோக்கப்படி நடக்கக் கூடியவர்

களாயிருந்தாலும் அவளுடைய பரிதாபமான நிலைமைக்காக மனமிரங்கி 'ஐயோ! உத்தமியான ஒரு பெண்பாலுக்கு நம்முடைய செட்டி இத்தகைய தீங்கைச் செய்கின்றானே' என்று வருந்தி, உடனே மதன மஞ்சுஷையைத் தூக்கி அவளுடைய முகத்தில் ஜலத்தைத் தெளித்து விசிறியால் வீசி அவளுக்குண்டான மூர்ச்சையை நீக்கினார்கள். உடனே அவளுக்குத் தெளிவு பிறந்தது. அவ்வாறு தெளிவடைந்த வுடனே அவள் தன் நாயகனை நினைத்து "ஆ! என் நாதரே! நீர் என்னை மணம் முடித்த சில தினங்களுக்குள்ளாகவே எனனைப்பிரிந்து விட்டீரே! இதற்காகத்தான் என்னைக் கலியாணம் செய்து கொண்டீரோ! ஐயோ! நீர் ஜலத்தில் வீழ்ந்து அமிழ்ந்திய வுடன் உம்முடைய உயிர் என்ன பாடுபட்டதோ! எவ்வாறு நீங்கியதோ! நீர் ஏதோ காலகதியால் இறந்தாலும் நான் உம்முடைய பிரேதத்தையாவது எடுத்து வைத்துப் புலம்பி அதற்கு முறைப்படி ஈமக்கிரியை செய்யும் பாக்கியத்தைக் கூட அடையாமற் போனேனே; என் பிராண நாதரே! ஆருயிர்த்துணைவரே! அருமைக் காதலரே! அழகிற் சிறந்த பூமானே! அவனிபோற்ற வந்த அரசிளஞ் சிங்கமே! புத்தியிற் சிறந்த உத்தமரே! ஜீவகாருண்யம் நிறைந்த சீமானே! திரிலோகமும் புகழும் கீர்த்தி வாய்ந்த செல்வரே! பரோபகாரியே! பாவச் செய்கை சிறிது மில்லாத என்பர்த்தாவே! கோப மில்லாத் துரையே! கோமானின் புத்திரனே! உம்முடைய அழகிய முகத்தையும், அமிர்த வசனத்தையும், பொன்போன்ற மேனியையும் இந்தப்பெண்பாவை இனி எப்பொழுது காணப் போகின்றேன்; நாம் மங்க

ளமாக மணம் முடித்துக்கொண்டும் சில தினங்கள்கூட சந்தோஷத்தையடைய வில்லையே. இது தெய்வத்திற்கும் சம்மதியாயிற்றே; அமங்கலியான நான் இனி யெப்படி உயிர் வைத்திருப்பேன்; எவ்வாறு என் காலங்கழியும்; நான் இனி அரைநிமிஷமும் உலகத்திலிரேன்; இதோ என் தேகத்தை விட்டு உம்மோடு கூடவே நீர் சென்றவிடத்திற்கு வருகின்றேன்" என்று வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு நிலத்தில் வீழ்ந்து புரண்டு கண்ணீர் ஆறுகப் பெருகியோடப் பலவாறு புலம்பினுள்.

இவள் இவ்வாறு புலம்புவதை,பக்கத்திலநின்ற சேடியர் பார்த்து, தாங்களும் கண்ணீர் விட்டழுது இவளுடைய முகத்தைநோக்கி "இராஜபுத்திரியே! ஏதோ நடந்தது நடந்து விட்டது. எதுவும் உலகத்தில் ஊழ்வினைப்படியே நடக்கும். உன் தலையில் இவ்விதி அமைந்திருக்கின்றது. உலகத்தில் எவருக்கும் தேகம் அநித்திய மானதே. ஒவ்வொருவரும் பிறப்பதும் இறப்பதும் சகஜம். உலகபந்தத்தால் ஜனங்கள் ஒருவரை யொருவர் உரியவரென்று கருதுகின்றார்கள்; நன்றாக ஆலோசிக்குமிடத்தில் ஒருவர்க்கொருவர் சதமானவரல்லர். ஆதலால் நீ உன் கணவன் பிரிந்ததற்காகத் துக்கப் படாதே. இனி அவருடைய ஞாபகத்தை மறந்துவிடு. அவர் தலைவிதியின்படியே அவருடைய காலத்தைக் கழித்துக்கொண்டு போய்விட்டார். இனி நீ சௌக்கியப் படுவதற்கான வழியைத்தேடி, உன் காலத்தைக் கழிக்க வேண்டும். உலகத்திலிருக்கும் வரையில் சௌக்கியத்தை யடைவதுதான் நலம்;

இதைத் தவிர நாம் காண்பது வேறொன்றுமில்லை." என்று தவள செட்டிக்கே அனுகூலமான சில வார்த்தைகளைக் கூறி, அவளைத் தேற்றினார்கள்.

அவர்கள் கபடமாக இந்த வார்த்தைகளைக் கூறின போதிலும் மதன மஞ்சுஷை, இவற்றால் சிறிது மனந் தேறினாள். அவ்வாறு தேறிய பின்னர் "நல்வினையிருந்தால் நம்முடைய துக்கத்திற்கு நிவர்த்தி ஏற்படுதலுங் கூடும். நம்முடைய நாயகர் சமுத்திரத்தில் வீழ்ந்திருந்தாலும், தெய்வ கிருபை யிருக்குமேயானால் ஜீவனுடன் பிழைத்து வருதலுங் கூடும். 'ஒருவருக்குத் தீவினை சேருமாயின், அவர்கள் உட்கொள்ளும் பொருட்டுச் செம்பொற் கிண்ணத்தில் நிறைத்து ஸ்திரீகளாலேந்தப்பட்ட அமுதமும் தொண்டையில் விக்கிக் கொண்டு அவரைக் கொன்று விடும்; நல்வினை யிருக்குமேயானால் அவர்கள் நடுக்கடலில் வீழ்ந்தாலும் உயிர் பெற்றுக் கரையேறுவார்' என்று நீதி யறிந்த பெரியோர் கூறியிருக்கின்றனர். ஆதலால் உலகத்தில் நாம் எதையும் இப்படித்தான் நடக்குமென்று உறுதியான தீர்மானம் செய்து விடலாகாது. ஆழ்ந்து யோசித்தே எந்தக் காரியத்தையும் செய்ய வேண்டும். எதிலும் அவசரப் படலாகாது. நாம் உயிர் விடவேண்டுமென்று நினைத்ததும் அவ்வளவு சிறந்த காரியமன்று. சிறிது காலம் பொறுத்திருந்து நம்முடைய நாயகரது சமாசாரம் ஏதேனுந் தெரிகிறதா வென்று பார்க்கவேண்டும். நாம் இப்பொழுது உயிரை விட்டுவிடும் பக்ஷத்தில் நல்வினைப் பயனால் ஒருவாறு நம் காதர் உயிரோடிருப்பாரானால், இச் செய்கை அவருக்குத் துக்கத்தையுண்டாக்கக் கூடியதாவதோடு பயனற்றதாகவும் முடி-

யுமன்றோ. ஆதலின், நாம் இவ் வெண்ணத்தை விடுத்துச் சிறிது காலம் வரையில் தாமதித்து இருந்துபார்ப்போம். நம் நாயகர், உயிருடனிருந்து நம்மிடம் வந்து சேர்வாரானால் நாம் மகிழ்ச்சி யடைவோம். இல்லாவிடில் இப்பொழுது நினைத்ததைச் செய்துமுடிப்போம்” என்று தீர்மானித்துத் தன் விதியை நொந்துகொண்டு மௌன முற்றிருந்தாள். சேடியர்கள் அவளிடம் விடைபெற்றுக் கொண்டு திரும்பி வந்து தவள செட்டியிடம் அங்கே நடந்த சமாசாரங்களை யெல்லாம் தெரிவித்தார்கள்.

அதன்மேல் தவள செட்டி “நம் நோக்கப்படியே காரியங்கள் பாதிப்பாகம் நிறைவேறின. இனி மற்றவை முடிய வேண்டும். அவைகளும் சுலபமாகவே முடிவு பெறும்,” என்று திருப்தி யடைந்து, தன்மனம் போல் நடக்கக் கூடிய வேறு சில தாதிப் பெண்களை யழைத்து அவர்களிடத்தில் “என் மனம் போல் நடக்கும் மாதர்களே! நான் உங்களிடஞ் சொல்லப் போகும் விஷயத்தை வெகு சாமர்த்தியமாக நீங்கள் செய்து முடிக்க வேண்டும். மதன மஞ்சுஷை யென்னும் பெண், தன் நாயகனைப் பறிகொடுத்துத் தளர்ச்சியுற்று முன்னே சென்ற சேடியர்களால் சிறிது மனந்தேறி ‘இனி மேல் நாம் ஜீவிப்பதற்கு என்ன உபாயஞ் செய்யலாம்’ என்ற யோசனையுட னிருக்கின்றாள். இத்தருணத்தில் நீங்கள் அவளிடம்போய்ப் பறபல இதமான வார்த்தைகளைக் கூறி எப்படியாவது அவள், எனக்கு மனைவிபோன்றிருப்பதற்கு இசையும்படி செய்துவிட வேண்டும். நீங்கள் இக்காரியத்தைச் செய்து முடிப்பீர்களே யானால், நான் உங்களுக்கு மிக்க வெகுமதி தருவேன்” என்று தெரிவித்தான்.

அவர்கள் "ஏதோ எங்களால் முடிந்தவரை பார்க்கின்றோம்" என்று சொல்லிவிட்டு மதன மஞ்சுஷையிடம் போய்த் தேறுதல் கூறுகின்றவர்களைப்போல, அருகில் உட்கார்ந்துகொண்டு அவள் முகத்தை நோக்கி "தாயே! நீ எதற்காக இன்னும் முகம்வாடியிருக்கின்றாய்? நடந்து போனதைப் பற்றி இனிச் சிந்திக்காதே; இனிமேல் நீ சௌக்கியப் படுவதற்கான வழியைத் தேடிக்கொள்; இறந்துபோன உன் நாயகர் இனிமேல் மீண்டு வரப்போகிறதில்லை; அவரை நீ நினைப்பதாலும் ஒரு பிரயோசனமுமில்லை; 'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும், மாண்டார் வருவாரோ மா நிலத்தில்'; அவர் இறந்து விட்டாலும், அவரையே எப்பொழுதும் நினைத்துக் கொண்டு நீ உன்னுடைய சௌக்கியங்களையெல்லாம் இழந்து விடுவது தகுதியன்று; நீயோ அறியாப் பருவமுடைய சிறு பெண்ணாயிருக்கின்றாய்; இந்தப் பருவத்தில் உலக சௌக்கியங்களை யடையாமலிருப்பது கூடாது; உலகத்தில் நாம் பிறந்தது எதற்காக? இவ்விடத்திலுண்டாம்சுகவாழ்வை அடைவதற்குத் தானே; அப்படியிருக்க உன் இளமைப் பருவத்தை ஏன் வீணாகக் கழிக்க வேண்டும்; உன்னைப் போன்ற இளம் பெண்கள் மறுவிவாகம் செய்து கொள்வது மிகவும் உத்தமமான காரியமாகும்; நமக்கெல்லாம் தலைவராயிருக்கின்ற தவளசெட்டியாரோ உன்னுடைய நாயகரைக் காட்டிலும் எவ்வளவோ சிறந்தவர்; இவரை மணாளராக அடைவது நம்மைப் போன்ற பெண்களுக்குத் தவப் பயனிருந்தால் மாத்திரந்தான் கைகூடும்; ஆகலால் நீ வேறு எவ்விதயோசனையுஞ் செய்யாமல் இவரை மணம் புரிந்து கொள்; உன்னை இவர்

தடையில்லாமல் ஏற்றுக் கொள்வார்; இவருக்கும் உன்னை மனைவியாக்கிக் கொள்ளவேண்டுமென்ற எண்ணமும் சிறிது இருக்கிறது; அதனைக் குறிப்பாகச் சில வார்த்தைகளால் இவர் எங்களிடம் தெரிவித்துமிருக்கின்றார்; தானே வரும் இந்தப் பெரும் பாக்கியத்தை நீ தள்ளிவிடாதே; எங்கள் மனம்போல நீ இசைந்து எங்களுக்கனுகூலமான விடை யளிப்பாயாக." என்று சந்தர்ப்பத்திற் கேற்றபடி பல துர்ப்போதனைகளைச் செய்தார்கள்.

இந்த அசுசியான வார்த்தைகளைக் கேட்டவுடனே மதனமஞ்சுஷை யானவள் சூரிய வெப்பத்தால் தாக்கப்பட்ட இளம்பயிர் வாட்ட மடைவது போல முகம் வாடி "ஆ! தெய்வமே! நான் இவ்வித பரிதாப நிலைமையிலிருக்கும் போது இந்தப் பாவிகள் இவ்வித துர்ப்போதனையான வார்த்தைகளைச் சொல்வதற்குக் காரணமென்ன? நன்றாக ஆலோசிக்கு மிடத்து இது தவள செட்டி செய்த சூழ்ச்சி யென்றே தெரிகிறது; இதனால் அவனே நம் நாயகரை உபாயமாகச் சமுத்திரத்தில் வீழ்த்தியிருப்பா னென்பதும் சந்தேகமில்லாமல் விளங்குகின்றது; அந்தோ! இந்தக்கொடுங் காரியத்தைச் செய்வதற்கு அந்தப் பாவிக்கு எவ்வாறு மனமிசைந்ததோ! அவன் உருப்படுவானே! அவனுக்குத் தெய்வந்தான் துணைச் செய்யுமா! அவன் மீளா நரகிற்கு ஆளாவது திண்ணம்" என்று மனம் வெதும்பிக் கண் சிவந்து கோபக் குறிப்புடன் சேடிகளை நோக்கி "பாவிகளே! என்னை யாரென்று நினைத்து இவ்வித வார்த்தைகளைக் கூறுகின்றீர்கள்; கேவலம் இழிகுலப் பெண்களிடத்திலல்லவா, இந்த அயோக்கியத் தன

மான வார்த்தைகளைக் கூறவேண்டும்; நீங்கள் இவ்வாறு சொல்லும் பசப்பு வார்த்தைகளால் நான் அநித்திய மான இந்த உலக வாழ்வை நம்பி உங்கள் நோக்கத்திற் கிசைவேனென்று நீங்கள் நினைக்கிறீர்களா; பர்த்தா இறந்தால் பதிவிரதைகளாயிருப்பவர்கள் அவனுடனே உயிர் விட வேண்டும், அல்லது உயிருடனிருக்க நேர்ந்தால் அவனுடைய தியானத்தோடு உயர்ந்த கைம்மை விரதங்களை யனுஷ்டித்து நற்கதியடைய வழிதேட வேண்டும்; இவற்றை விட்டு வேறு சிந்தனை செய்வோர் குலமாதர்களாக மாட்டார்கள்; உயர் குலத்திற் பிறந்த எனக்கு உங்கள் சொற்படி கெட்ட வழியிற் பிரவேசிக்க மன மிசையுமா? அசைவற்ற மகா மேருகிரியும் ஒரு சமயம் அசைந்தாலு மசையும்; அணைகடவாத சமுத்திர ஜலமானது ஒரு சமயம் கரைகடந்து புரண்டாலும் புரளும்; எப்பொழுதும் வெப்பம் மாறாத அக்கினியானது ஒரு சமயத்தில் தண்ணீர் போலக் குளிர்ந்தாலும் குளிரும்; என்னுடைய சித்தமோ எப்பொழுதும் நல்ல நிலையிலிருந்தும் புரள மாட்டாது. நீங்கள் இனி, இப்பேர்ப்பட்ட தீ மொழிகளை என்னிடம் கூற வேண்டாம்; இங்கே நிமிஷ நேரமும் நில்லாமல் இப்பொழுதே வெளியேறிச் செல்லுங்கள்; உங்கள் தவள செட்டி அக்கிரமமாக எனக்குத் தீங்கு செய்ய நினைப்பானாயின், அடியோடு அழிந்து போவா னென்று அவனுக்குச் சொல்லுங்கள்." என்று கடுகடுத்துக் கூறினள். தாதிகள் மறுவார்த்தை யொன்றும் பேச முடியாமல் தவள செட்டியிடம் போய்த் தாங்கள் மதனமஞ்சுஷையிடம் கூறிய வார்த்தைகளையும், அவற்றிற்கு விடையாக அவள் கூறிய

கடின மொழிகளையும் விவரமாகத் தெரிவித்து 'வணிகர் பெருமானே! அவள் மனதைத் திருப்புவது எங்களாலியலுங் காரிய மன்று; உம்மால்முடிந்தால் நீர் வேறு உபாயங்களால் திருப்பிக்கொள்வீராக' என்று சொன்னார்கள்.

அதன்மேல் தவள செட்டி "முகத்துக்குமுகம் வித்தியாசப் படுவதுண்டு; நமக்கும் தாதிகளுக்கும் அதிக தாரதம்மிய மிருக்கின்றது; அவர்கள் முன்னிலையில் மதன மஞ்சுஷையின் மனம் ஒரு விதமாக இருக்கும்; எனினும், நமக்கு முன்னிலையில் மற்றொரு விதமாகத் தானிருக்கும்; அவர்களுக்குமுன்னே அவள் அவ்வாறு கடிந்து பேசினும், நமக்குமுன்னே அவ்வளவு கடினமாகப் பேச மாட்டாள்; நம்மைக் கண்ட வுடனே தாட்சண்ணியத்தினாலாவது நம்முடைய வார்த்தைகளை அவள் அங்கீகரித்தல் கூடும். ஆதலால் நாமே அவளிடம் நேரில் சென்று இனிமையான வார்த்தைகளைக் கூறி அவளை நம்முடைய வழிக்குத் திருப்புவோம்." என்று சிந்தித்து உடனே அவளிடம் போய்ச் சேர்ந்தான்.

இந்தக் கொடியனைக் கண்ட மாத்திரத்தில் அவள் பூனையைக் கண்ட எலியைப்போல் நடு நடுங்கி 'இந்தப் பாவி ஏன் இங்கே வந்தான்; இவன் என்ன தீங்கைச் செய்வானோ; தெய்வந்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்' என்று ஒரு பக்கமாக ஒதுங்கித் தரையைப் பார்த்த வண்ணமாக நின்றாள். அப்பொழுது கொடியவனாகிய தவள செட்டி அவள் சமீபத்திற் போய் நின்று "மாதரசியே! எனக்கு முன்னே வந்த தாசிகளிடத்

தில் நீ என் அவ்விதக் கடுமையானவார்த்தைகளைக் கூறி ணய்; இந்த நன்மையான காரியத்தைத் தடை செய்வ தற்குக் காரண மென்ன? நீ இதை ஒரு போதும் மறுக்க மாட்டாய்;இதிலிருக்கும் அனுகூலம் உன்மன திற்கே நன்றாகத் தெரியும்; ஆயினும் கேவலம் தாதி களிடத்தில் இந்தப் பெரிய விஷயத்தைப் பற்றித் தா ராளமாகப் பேசக்கூடா தென்று நினைத்து நீ அவ்வாறு மேலுக்குச்சம்மதமில்லாதவள்போலக்கடுஞ்சொற் கூறி னைபோலும்; ஆனல் என் பேரில் மிகுந்த தவறிருக்கின் றது; இத்தகைய முக்கியமான காரியத்திற்கு நானே நேரில் வாராமல் அடிமைப் பெண்களை அனுப்பியது மதியீனமாகும்; இக்குற்றத்தை நீ மன்னிக்க வேண் டும்; இப்பொழுது நானே நேரில் வந்தேன்; இனி நீ தடை சொல்ல மாட்டா யென்று நான் நினைக்கின் றேன்; செல்வத்திலும் அழகிலுஞ் சிறந்த என்னை யன்றி இனி உனக்குத் தகுதியானவர்கள் வேறே எவ ரிருக்கின்றார்கள்;நீ பல விதமான பயனற்ற எண்ணங் களை மனதில் வைக்காமல் என்னை மணம் புரிந்து கொ ள்; இந்தப் பெரிய நிலைமை உனக்குக் கிடைப்பது அரி தாகும்; தலையால் வந்த ஸ்ரீதேவியைக் காலால் தள்ளு வது போல உனக்குத் தானே வரும் பெரும் பாக்கியத் தை நீ அலட்சியமாகத் தள்ளிவிடாதே; தலைநிமிர்ந்து என்னைப் பார்த்து எனக்கு அனுகூலமான வார்த்தை கூறுவாயாக" என்று பைத்தியம் பிடித்தவனைப்போல தன் புத்திக்குத் தக்கவாறு ஏதேதோ கூறி வாயில் வ ந்தபடி பிதற்றினன். தூர்த்தர்கள் தங்களுக்கு முடி யாத விஷயங்களை யெல்லாம் முடிந்து விட்டதாக, மன தில் நினைத்துக்கொண்டு மனோராஜ்யம் செய்வது உலக

இயற்கை யன்றோ?.

இவ்வாறு செட்டி, கட்குடியனைப்போல் பிதற்றி யதை மதன மஞ்சுஷை கேட்டவுடன் ஆற்றொணுத் துயரமும் கோபமுங் கொண்டு அவன் முகத்தைப் பார்க்காமல் வேறொரு பக்கமாகத் திரும்பிக் கொண்டு "அடே! வை:த்தியக்காரா! நீ எதற்காக மனித ஜென்மம் எடுத்தா.ப; உலகிற்கு நீ சுமையே; அட! பயனற்ற பதரே! உன் புத்தியையெல்லாம் எங்கே விலைக்கு விற்றுவிட்டாய்;உனக்குச் சிறிதேனும் அறிவிருந்தால், இத்தகைய கொடுஞ் செய்கைகளைச் செய்து கபடமான வார்த்தைகளைப் பேச மாட்டாய்; அட! சிநேகத் துரோகி! நன்றி மறந்த சண்டாளா! உனக்கு எவ்வளவோ நன்மை செய்த என் நாயகரை நீ எப்படி மனம்பொருந்திச் சமுத்திரத்தில் தள்ளினயோ! அவரைத் தள்ளினது மன்றி, எனக்கும் கேடு செய்ய நினைக்கின்றாய்; என்னிடத்தில் கெடுதலான வார்த்தைகளையும் பேசுகின்றாய்; பதிவிரதைகளுக்குத் தீங்கு செய்தோர் பட்ட பாடுகளை யெல்லாம் நீ நன்றாக ஆராய்ந்து பார்; எனக்கு இவ்வளவு தீங்கு செய்ய நினைத்திருக்கும் உன்னுடைய வரவை நரகம் எதிர் பார்த்துக்கொண்டிருக்கும்; நீ துராகிருதமாக எதையுஞ் செய்து விடலாமென்று நினைக்காதே; நினைத்த அப்பொழுதே அழிந்து விடுவாய்; கேவலம் மிருகங்களிடத்திற்கூட உன்னுடைய கொடுந் தொழி லிருக்க மாட்டாது; 'நட்பாளரிடத்தே வஞ்சனை செய்தவனும், அன்னிய மாதரை இச்சித்தவனும், கன்னிகைகளுக்குக் கலக்கஞ் செய்தவனும், சீவ ராசிகளைக் கொன்று அவற்றின் மாமிசங்களைத் தின்றவனும், அமைச்சனாயிருந்து அரசனைக்கெடு

த்தவனும் ஆகிய இவர்கள் குஷ்டநோயால் பீடிக்கப் பட்டுக் கஷ்டமுற்றிறந்து நரகத்திற் போய் மூழ்குவார் கள்' என்னும் பெரியோர் நீதியை நீ ஆராய்ந்து பார்; இத ற்கு விரோதமாக நடக்கும் உனக்கு இன்ன கதிதான் ஏற்படு மென்பதை இதன்மூலம் நன்றாகத்தெரிந்து கொள்; இனி இங்கே நில்லாதே; சீ சீ! பேதையே! விரைவில் வெளியே போ!" என்று அவ[illegible] வெறுத்து 'சுருக்கத்திற்றுணிவு' என்ற நியாயப்படி வெகு தைரி யங் கொண்டு பேசினாள்.

அவள் இவ்வளவு கடினமான வார்த்தைகளைக் கூறியும் தவள செட்டி, தான் கொண்ட எண்ணத்தை விடாமல் மேலும் பற்பல வார்த்தைகளைக்கூறி அவளை உபத்திரவப் படுத்த ஆரம்பித்தான். அப்பொழுது அவள், "இனி இத் தூர்த்தனை விலக்குதல் நம்மாலிய லுங் காரியமன்று; தெய்வமே இவனைத் தண்டிக்க வேண்டும்; ஆகலால், நாம் இப்பொழுது இஷ்டதெய் வங்களைப் பிரார்த்திப்போம்" என்று தன்னிடரைநீக்கும் படி மிகுந்த பக்தியோடு இஷ்ட தேவதைகளைத் தியா னித்தாள். அத் தெய்வங்கள் அவளுக்குத் துணை செ ய்ய ஆரம்பித்தன. அவளுடைய கற்பின் மகிமையால் தவள செட்டியின் கப்பலில் பற்பல பாகங்கள் தீ பற்றி யெரியத் தலைப்பட்டன. திடீரென அவ்வாறு தீ ப ற்றவே தவள செட்டி திடுக்கிட்டுப் பயந்து "இவளை நாம் சாமான்யமானவளென்று நினைத்தோம்; இவளோ ஒரு தேவதை போன்ற மகிமை யுடையவளாயிருக்கி ன்றாள்; இப்பொழுது நம்முடைய கப்பலில் தீ பற்றி யெரியும்படி செய்தது இவளுடைய கொடுஞ்சாபமே; ஆதலால் நாம் இவளிடம் வணங்கி நம்முடைய குற்றத்

திற்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும்" என்று உடனே போய் அவளுடைய பாதங்களில் வீழ்ந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அவளை நோக்கி "பெண் மணியே! உன்னுடைய மகிமையை யுணராமல் நான் உனக்குச் சிறிது தீங்கு நினைத்து விட்டேன்; இப்பொழுது உன்னுடைய தெய்வீகத் தன்மையை நானுணர்ந்து கொண்டேன்; நீ இனிக் கோபித்தால் நான் பிழைப்பது அருமை: ஆகலால் நான் செய்த குற்றத்தை மன்னித்து நீ என் மீது கிருபை புரிய வேண்டும்" என்று வேண்டினன். அவ்வாறு வேண்டவே அவன் மிகுந்த தீங்கைச் செய்தவனாயிருந்த போதிலும், 'தீங்கு செய்த ஒருவனுக்கு நன்மை செய்தலே மிகுந்த தண்டனையாம்' என்ற நீதிப்படி மதன மஞ்சுஷையானவள் கப்பலிற் பற்றியெரிந்த தீ அணையும்படி தியானஞ் செய்தாள். உடனே நெருப்பு அவிந்து விட்டது. பின்பு தவள செட்டி அவளை விட்டு விலகிப் போய்த் தன்னுடைய கப்பல்களையெல்லாம் நடப்பித்துக்கொண்டு முன்னே ஸ்ரீபாலன் போய்ச் சேர்ந்திருக்கின்ற தளவர்த்தன புரத்திற் சேர்ந்தான்.

மேற்கூறியபடி ஸ்ரீபாலன் தங்கியிருக்கின்ற தளவர்த்தன புரிக்கே தவள செட்டியும் போய்ச் சேர்ந்தவுடன், மதனமஞ்சுஷையை வெளியே விட்டுவிடாமல் "இவளைச் சுயேச்சையாகப் போகும்படி விட்டுவிட்டால் இவள் வெளியேறிப் போய்ப் பலரிடத்திலும் நாம் இவளுக்குச் செய்த தீங்கை வெளிப்படுத்தி அவர்களால் நமக்குப் பெருந்தீங்கு நேரும்படி செய்து விடுவாள்; மேலும் இவளை நம் வசமாகவே வைத்திருந்தால் கொஞ்சக்

காலஞ் சென்றபின்னாவது இவள், தன் மனம் மாறுபட்டுநம் மீது இரக்கங் கொண்டு தானே ஒருவாறு நம் நோக்கத்திற்கு இணங்கினாலும் இணங்கி விடக்கூடும்; ஸ்திரீகளின் மனது எப்பொழுதும் ஒருநிலையில் நில்லாது; ஆகலால் இவளை விடக்கூடாது." என்று மேலும் தன் பேராசைக் குணத்தையும் மதியீனத்தையும் விடாமல் சபலச் சித்தத்தால் அவளைக் கப்பலிலேயே வைத்து அவளுக்குக் காவல் செய்து கப்பல்களையெல்லாம் துறைமுகத்தில் நிறுத்திவிட்டு அநேகஞ் செட்டிகளோடு இறங்கி அப் பட்டணத்தில் வியாபாரஞ் செய்யும் பொருட்டாகப் பிரவேசித்து, முதலில் அந் நகர்க் கிறைவனாகிய தனபால மகாராஜனைக் கண்டு அவனுக்குச் சிறந்த காணிக்கைகளை வைத்து வணக்கஞ் செய்து அவனெதிரே நின்றான். அப்பொழுது அம் மன்னன் தவள செட்டி கொடுத்த காணிக்கைக் காகவும், செய்த வணக்கத்திற் காகவும் மகிழ்ந்து அவனை நோக்கி "நீ யாவன்? இங்கே வந்து நம்மைக் கண்டதற்குக் காரண மென்ன?" என்று வினவினான். அதற்குத் தவள செட்டி தன்னுடைய விருத்தாந்தங்களைத் தெரிவித்து அதன் மேல் அரசனை நோக்கி, "மன்னர் பெருமானே! நான் தங்களுடைய தயவைப் பெற்றுக் கொஞ்சக்காலம் இங்கே யிருந்து வியாபாரஞ் செய்யலா மென்று வந்தேன்; இதற்கு நீங்கள் அனுமதி தரல் வேண்டும்" என்று கூறினான்.

அரசன், "அப்படியே நீ இங்கு வியாபாரஞ் செய்யலாம்" என்று தவள செட்டிக்கு அனுமதி கொடுத்து உடனே தன்னுடைய பொக்கிஷத் தலைவனாகிய ஸ்ரீபாலனை யழைத்து, தனக்குக் காணிக்கை கொண்டு

வந்து வைத்த அந்தத் தவள செட்டிக்குத் தக்க பிரதி மரியாதை செய்யும்படி அவனிடம் ஆக்ஞாபித்தான். அப்பொழுது ஸ்ரீபாலனுந் தவள செட்டியும் ஒருவரை யொருவர் தெரிந்து கொண்டார்கள். அவ்வாறு தெரிந்து கொண்ட வுடனே தவள செட்டியானவன் "ஐயோ! இந்த ஸ்ரீபாலன் சமுத்திரத்தில் வீழ்ந்து இறந்துவிட்டா னென்றல்லவோ நாம் கருதி யிருந்தோம்; எப்படியோ இங்கு வந்து சேர்ந்திருக்கின்றானே; இவன் நம்மை யறிந்தால் இலகுவில் விடுவானோ; ஆனால், நாம் இவனுக்கு வஞ்சனை செய்ததை இவன் உணர்ந்திருக்க மாட்டான்; அதனால் நமக்குத் தீங்கு செய்ய இவன் மன மிசையாது; என்றாலும், இவன் நம்முடைய வஞ்சனையை உணர்ந்திருக்க மாட்டா னென்றுநாம் எட்படி உறுதி கொள்வது? ஒரு சமயம் இவன் உணர்ந்திருந்தால் நமக்குப் பெருந் தீங்குதானே நேரும்; எப்படி யிருந்த போதிலும் இவன் விஷயத்தில் சந்தேகம் சந்தேகமே; ஆதலால் இவன் நமக்கொரு தீங்கு செய்வதற்கு முன்பாகவே இவனை நாம் அடியோடு ஒழித்துவிட முயலவேண்டும்." என்று தீர்மானித்துக் கொண்டான்.

ஸ்ரீபாலனோ தவள செட்டியைப் பார்த்தவுடன் "இந்தப் பாவி எப்படியோ இங்கு வந்து சேர்ந்திருக்கின்றானே; இதுவும் ஒரு நல்ல காலந்தான்; இவன் வந்திருப்பதால் இவனுடைய கப்பலில் நம்முடைய மனைவியும் வந்திருக்கக் கூடும்; ஒருவாறு இவன் அவளைத் தீங்குக் குள்ளாக்கி யிருந்தாலு மிருக்கலாம்; ஆதலால் அவளிருப்பதையும் இல்லாததையும் நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்; அதன் பின்பு

தான், நாம் இவனுக்குத்தண்டனையையோ நன்மையை யோ செய்ய வேண்டும்; இந்தக் காரியங்களைப்பற்றிப் பின்னர் நாம் யோசித்துக் கொள்ளலாம்; இப்பொழுது அரசன் கட்டளைப்படியே நாம் இவனுக்கு மரியாதை செய்து விடுவோம்." என்று யோசித்து உடனே தவள செட்டியை அழைத்துக் கொண்டுபோய் அநேகம் பழ வர்க்கங்களையும், ஆடையாபரணங்களையும் அவனுக்குப் பதில் மரியாதையாகக் கொடுத்தான். தவள செட்டி தன்னை ஸ்ரீபாலன் பார்ப்பானென்று சந்தேகங் கொண்டு முகத்தை பொருபக்கமாகத் திருப்பிக் கொண்டே அவனால் கொடுக்கப் பட்ட மரியாதைப் பொருள்களைப் பெற்றுக் கொண்டு தன்னிருப்பிடத்திற்குப் போய் விட்டான்.

அவ்வாறு சென்ற பின்பு அவன் நெடுநேரம்வரையிலும் ஸ்ரீபாலனுக்குச் செய்ய வேண்டிய வஞ்சனைகளைக் குறித்து யோசனை செய்து முடிவாக ஒரு காரியத்தைச்செய்யத்தீர்மானித்து, உடனே இராஜன் அரண்மனைக்குச் சென்று துவார பாலகனைக் கண்டு அவனுக்குச் சில பொருள்களைக் கொடுத்து அவன் மனதை வசப்படுத்திக் கொண்டு அதன்மேல், அவனிடம் ஸ்ரீபாலன் அங்குப்போய்ச்சேர்ந்த விருத்தாந்தங்களை யெல்லாம் விசாரித்தான். அவன் நடந்தவைகளையெல்லாம் ஒன்றொழியாமற்கூறிவிட்டான். ஸ்ரீபாலன் அங்குச் செல்வாக்கடைந்திருப்பதைக் கேள்விப்பட்டவுடனே தவள செட்டி மனம் புழுங்கி அவன்மீது பொறாமை கொண்டு "அந்தோ! இவன் இந்த நிலைமையிலிருந்தால் நம்மைக் குலத்தோடும் நாசஞ் செய்து விடுவான்; ஆதலால் நாம் இவனை விரைந்தொழித்து முன் ஜாக்கிரதைப்

பட வேண்டும்.'' என்று தீர்மானித்து, உடனே அவ்விடத்தை விட்டு நீங்கிப் பறைச் சேரிக்குப் போய் மிக்க தைரியமுள்ள நூறு பறையர்களை யழைத்து அவர்களிடத்தில் "அன்பர்களே! நான் உங்களுக்கு அளவற்ற திரவியந் தருகின்றேன்; நீங்க ளெல்லோரும் அரசர் முன்னே சென்று உங்கள் ஜாதி இயற்கைப்படி பறை முழக்கிப் பறைககூத் தாடுங்கள்; அரசர் உங்கள் கூத்தைக்கண்டு சந்தோஷமுற்று உங்களுக்கு ஆடையாபரணங்களை நற்பரிசாகக் கொடுக்கும்படி பொக்கிஷத்தலைவனுகிய ஸ்ரீபாலனுக்கு ஆக்ஞாபிப்பார்; அவன் அவ்வாறே உங்களுக்குச் சன்மானஞ் செய்ய வருவான்; அவனைக் கண்டவுடனே உங்களில் ஒவ்வொருவரும் 'இவன் எனக்கு மாமன், எனக்கு மைத்துனன், எனக்கு அண்ணன், எனக்குத்தம்பி, எனக்குச் சிற்றப்பன், எனக்குப் பெரியப்பன்' என்று பற்பலவிதமாக முறை கொண்டாடி அவனை உங்கள் சொந்தக்கார னென்றே அரசருக்கு முன்பு ஸ்தாபித்து விடுங்கள்; ஒரு காரியார்த்தமாக நான் இதைச் செய்யும்படி உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; நீங்கள் வெகு சாமர்த்தியமாக இதை நிறைவேற்றவேண்டும்'' என்று சொல்லி அவர்களுக்கு அளவற்ற திரவியங்களைக் கொடுத்தான்.

அவர்களுக்கு இது மிக்க பயங்கர முள்ளதும் நீதிக்கு அடாததுமாகிய செய்கை யென்று தெரிந்தபோதிலும் அவர்கள், பணத்தாசையால் இதற்கு உடன்பட்டு, உடனே இராஜசமுகத்திற்சென்று பறைகளை முழக்கி, பள்ளுமுதலிய பாடல்களைப் பாடிப் பலவிதமாண

கூத்தாட்டங்களை யாடினார்கள். அரசன், அவர்களுடைய ஆடல் பாடல்களைக் கேட்டுச் சந்தோஷங் கொண்டு, அவர்களுக்கு நல்ல ஆடையாபரணங்களைக் கொடுக்கும்படி ஸ்ரீபாலனுக்குக் கட்டளை யிட்டான் அவன் அக் கட்டளைப் படியே அவற்றை யெடுத்துக்கொண்டு பறையர்களுக்குக் கொடுக்க வந்தான். அவனைக் கண்டவுடனே அந்தப் பறைக் கூட்டத்தாரில் ஒருவன் "அட அண்ணா! நீ காணாமல் ஓடிவந்து விட்டாயே! இங்கேயா இருக்கிறாய்! உனக்கு இங்கே நல்ல உத்தியோகம் கிடைத்திருக்கின்றதே! நம்முடைய ஜாதியாருக்கு இவ்வளவு மேன்மையான உத்தியோகங் கிடைக்குமா!" என்று அவனைக் கட்டிக் கொண்டு அழுதான். மற்றொருவன் ஓடிவந்து "அட யாமா! நீ இங்கே எப்படி வந்து சேர்ந்தாய்! நீ காணாமற் போன அன்றையிலிருந்து நான் சோறுகூடச் சாப்பிட வில்லையே; நீ இப்படி மோசஞ் செய்யலாமா! என்னிடமா வது ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வரக்கூடாதா!" வென்று அவன் கழுத்தைக் கட்டினான். பின்னொருவன் வந்து "சிற்றப்பா! நீ என்னைக் கூட மறந்து விட்டாயே! நான் உனக்கு என்ன செய்தேன்! என்னிடத்திற்கூடச் சொல்லாமல் ஓடி வந்து விட்டாயே!" என்று அவன் முகத்தைத் தடவினான். வேறொருவன் ஓடிவந்து "அட தம்பி! வீட்டில் என்னதான் மனஸ்தாப மிருந்தாலும் இப்படி யொருவரிடமும் சொல்லாமலோடி வரலாமா! வந்தாலும் இப்படிப்பட்ட இராஜா வீட்டில் சேர்ந்து உத்தியோகஞ் செய்யலாமா! இது நம்முடைய ஜாதிக்கடுக்குமா! நமக்கு எரும், எருதும், பறைக் கொட்டும், நாயன் மாரிடத்தில் பண்

ணைக்கு உழுவதும், படி வாங்கிச் சாப்பிடுவதும் சொந்தமாயிருக்க, அவற்றை விட்டு நீ மேல் குலத்தாரது தொழிலை எடுத்துக் கொண்டாயே! நாளை, பின்னை இது வெளியானால் இராஜா உன்னைக் கட்டி வைத்துக் கொண்டு உதைக்க மாட்டாரா? என்னடா! பைத்தியக் காரத் தனமான வேலையைச் செய்து விட்டாயே!' என்று அவன் முகத்தைத் தடவினான். இப்படியே ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறை கொண்டாடி அவனைத் தங்கள் பந்துக்களிலொருவனென்று அங்குள்ளவர்கள் நினைக்கும்படி செய்து விட்டார்கள். இந்த ஆச்சரியமான சம்பவத்தைக் கண்டவுடன் ஸ்ரீபாலன் 'இஃதென்ன! பெரிய மோசமான செய்கையாயிருக்கின்றதே!' என்று பிரமை கொண்டவன் போல் ஒன்றுந் தோன்றாமல் நின்று விட்டான்.

அப்பொழுது தனபால மகாராஜன் யாதொரு சந்தேகமுமில்லாமல் ஸ்ரீபாலனைப் பறையனென்றே நினைத்து "இஃதென்ன அநியாயம்! நாம் குலத்திற் கெல்லாம் இழிவைத் தேடிக் கொண்டோமே! இந்தச் சண்டாளன் தன்னுடைய ஜாதியை மறைத்துக் கொண்டு வந்து நம்மை ஏமாற்றிவிட்டானே! இவனுக்குநாம் உத்தியோகம் கொடுத்ததைப்பற்றி அவ்வளவு தோஷம்உண்டாகமாட்டாது; வகைதெரியாமல் நாம் பெண்ணைக்கட்டிக் கொடுத்துவிட்டோமே! இனி யிந்த இழிவை எவ்வாறு நீக்கிக் கொள்வது? இந்த மோசக்காரனைச் சித்திரவதை செய்தாலும் நமக்கு ஏற்பட்டிருக்கும் கேவலம் நீங்கமாட்டாதே! இப்பேர்ப்பட்ட நடிப்புக் காரனை என்ன செய்தாலுந் தகும்" என்று மிகுந்த

கோபத்துடனே ஸ்ரீபாலனை நோக்கி "அடா! நடிப்பிற் சிறந்த மோசக்காரா! நீ ஏன் இவ்வாறு உன் ஜாதியை மறைத்தொழுகினாய்? இவர்கள் சொல்வது உண்மைதானா? நீ உள்ளதைச் சொல்" என்று கேட்டான்.

ஸ்ரீபாலன், "இது தவள செட்டி செய்த சூதாகவே யிருக்கலாம்; இந்த ஆபத்திலிருந்து தப்புவதெவ்விதம்? நாம் இச்சமயத்தில் நெஞ்சைப் பிளந்து கொண்டு உண்மையை வெளிப்படுத்தினாலும் நம்முடைய வார்த்தையை ஒருவரும் நம்பமாட்டார்கள்; மோசக்காரர்களுடைய செய்கை இவ்வளவு சாமர்த்திய முடையதா யிருக்கின்றது; அவர்களுடைய மாறுபாட்டினின்றுந் தவற ஒருவராலும் முடியாது; இது நமது பழவினையின் படியே நடந்திருக்கின்றது; இனி எதுவும் நம் தலைவிதிப்படியே நடக்கும்; ஆதலால் நாம் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருப்பதே தகுதி" யென்று தன் தலைவிதியை நொந்துகொண்டு அரசனுக்கு விடையொன்றுங் கூறாமல் நின்றான்.

அவன் அவ்வாறு நின்றதைக் கண்டே அரசன் "இவன் பறையன் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை; அதனாற்றான் இவன் மௌனமாக நிற்கின்றான்; இப்படித் தன் குலத்திற்குத் தகாத காரியத்தைச் செய்து நமக்குப் பெரிய மானக்கேட்டை யுண்டாக்கிய இந்த நடிப்புக் காரனைச் சிரச்சேதம் செய்து விடுதலே தகுதியான காரியம்" என்று உடனே கொலையாளிகளை வரவழைத்து ஸ்ரீபாலனை அவர்களுக்குக் காட்டி "இந்தக் கொடியனைக் கொண்டுபோய் மசானத்திற் கொலை செய்து விடுங்கள்" என்று அவர்களிடம் உத்தரவு

செய்தான். உடனே அவர்கள் ஸ்ரீபாலனைப் பிடித்துக் கட்டிக் கொலை செய்வதற்குக் கொண்டு போனார்கள். அவ்வாறு கொண்டு போகுங் காலத்தில் தெருக்களி லுள்ள ஜனங்களிற் பலர், ஸ்ரீபாலன் விஷயத்தில் அரசன் செய்திருக்குங் கட்டளையையும், அவன் மீது பொய்யாகப் பறையர்களால் ஸ்தாபிக்கப்பட்ட குற்றத்தையு முணர்ந்து அவனை நோக்கி "ஐயோ! இவனைப் பார்த்தால் இராஜ குமாரனைப் போல விருக்கின்றானே! யாரோ மாறுபாட்டுக் காரர்கள் மோசமாக இவன் மீது இக் குற்றத்தை ஸ்தாபித்திருக்கக் கூடும்! அப்படியிருந்த போதிலும் அரசன் சரியாக விசாரித்து உண்மையை உள்ளபடி யுணர்ந்து ஒரு தீர்மானத்தைச் செய்யக் கூடாதா! இது பொய்யா யிருந்தால் அரசனுக்கு மிகுந்த பாவமன்றோ வந்து சேரும்." என்று இரக்கமான வார்த்தைகளைக் கூறித் துக்கப் பட்டார்கள். இன்னுஞ் சில பேதைகள், அவனைப்பார்த்து, "இந்தப் பறையனுக்கு என்ன தைரியம்! உயர்ந்த சாதிக்காரனைப் போல் இவன் நடித்து இராஜனை ஏமாற்றி இராஜ குமாரத்தியையும் மணஞ் செய்து கொண்டான்; 'கெட்டிக் காரன் பொய், எட்டு நாளையில் தெரியும்' என்றபடி இவனுடைய மோசம் சில தினங்களுக்குப் பின்னாவது வெளிப்படாமற் போகுமா? அதுவோ இப்பொழுது வெளியாய் விட்டது! பையனும் தூக்கில் மாளப் போகின்றான்! சில மூடர்கள் வீணாக இவ்விதம் நடிப்புத் தொழில்களைச் செய்து உலகத்தில் மிகுந்த அவஸ்தைக் குள்ளாகின்றார்கள்; இதனால் என்ன பிரயோசனம்? சாதியை மறைப்பதைப் போல் அவிவேகமான செய்கை உலகத்தில் வேறெதுவு மில்லை" என்று தங்

கள் புத்திக்குத் தகுந்தபடி உண்மையை யுணராமல் ஸ்ரீபாலனைப் பலவாறு நிந்தித்தார்கள். வேறு சிலர் அவனைப் பார்த்து "நம்முடைய இராஜா இவனுடைய மோசச் செய்கையை யுணர்ந்து இப்பொழுது இவ்னு க்குத் தூக்குத் தண்டனை விதித்து விட்டார்; இவனை என்ன செய்த போதிலும் அரசனுக்கு ஏற்பட்ட இழி வு இனி யெப்பொழுதும் நீங்கப் போகிறதில்லையே; சம்பந்தமும் செய்தாய்விட்டது;பந்திபோசனமும் நடந் தேறியது; இவனும் இராஜ குடும்பத்தாரும் இதுவரை யொன்றாகவே கலந்திருந்தார்கள்; இப்படி யெல் லாங் கலந்து போன பின்பு இனி அரசன் எவ்வாறு தன்னையும் தன் குடும்பத்தையும் பரிசுத்தம் செய்து கொள்வது? இஃது அரசனுக்கு எவ்விதத்தாலும் நீக் கிக் கொள்ள முடியாத தோஷமாக வந்து சேர்ந்தது; ஆனாலும் இந்த நீசனுக்கு இவ்வளவு தைரியம் கூடா து" என்று பேசினார்கள். இப்படியே ஒவ்வொரு கூட்டத்தாரும் உலக இயற்கைப்படியே தங்கள் தங் கள் புத்திக்கிசைந்தவாறு பற்பல விதமான வார்த்தை களைப் பேசினார்கள். ஸ்ரீபாலன் இவற்றை யெல்லாங் கேட்டு மனம் புண் பட்டு "எல்லாம் கடவுளுடைய செயல்; யார் என்ன பேசினாலும் பேசட்டும்; இஃது உலகத்தின் இயற்கை தானே; இதைப்பற்றி நாம் கவலை கொள்ளுவதில் பயனில்லை" என்று தெய்வத் தைச் சிந்தித்தபடியே சென்றான்.

இவ்வித நிலைமையோடு ஸ்ரீபாலன் செல்லுங் கால த்தில், இவனுடைய நிலைமைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த தாதியொருத்தி ஸ்ரீபாலனைக் கொலையா

ளிகள் கொலைசெய்யக் கொண்டுபோகும்சமாசாரத்தை த்தெரிவிப்பதற்குக் குணமாலைபிடம் ஓடினாள். அப்பொழுது குணமாலையின் நாயகனாகிய ஸ்ரீபாலன் திரும்பி வருந்தருணமா யிருந்தபடியால் அவன் பார்த்து மகிழும் பொருட்டு, அவள் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். அத்தருணத்தில் சென்ற தாதியானவள், அவளை நோக்கி "தாயே! நீ யார் பார்த்து மகிழ வேண்டுமென்று உன்னை அலங்கரித்துக் கொள்ளுகின்றாயோ அவரைச் சிரச்சேதம்செய்யும்படி உன்னுடைய தந்தையாகிய இராஜா கட்டளை பிறப்பித்து விட்டார்; அவர்கட்டளைப்படியே கொலையாளிகள் உன் கணவனைக் கொலை செய்யக் கொண்டு போகின்றார்கள்; நீ இதற்காக என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொள்" என்று முன் நடந்த வர்த்தமானங்களை யெல்லாம் கூறினாள்.

குணமாலை, இடியோசை கேட்ட சர்ப்பம் போல மனங்கலங்கி "ஐயோ! என் நாதருக்கா இவ்வித கதி நேர்ந்து விட்டது! அவருடைய லக்ஷணங்களெல்லாம் இராஜ புத்திரரென்பதைச் சந்தேகமில்லாமல் விளக்கிக் கொண்டிருந்தனவே! அப்படி யிருக்க அவரை இழிகுலத்தவரென்று சொன்னவர்கள் யாவர்? அவருக்கு ஏற்பட்ட விரோதிகளால் இக்கற்பனை செய்யப்பட்டிருக்க வேண்டும்; பலர், பல விதமாகச் சொன்ன போதிலும் என் தந்தை தீர விசாரியாமல் எப்படி அவசரப்பட்டு இந்தத் தீர்ப்பைச் செய்யலாம்? நாம் இப்பொழுதே சென்று நடந்ததை விசாரித்து நம்முடைய நாயகரை இந்தஆபத்தினின்றும் விடுதலைபெறச் செய்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்; பர்த்தாவுக்

குப் பின் நமக்கு உலகத்தில் என்ன சிறப்பிருக்கின்றது" என்று உடனே வெளியேறிப்போய்த் தன் நாயகனை நடுவழியில்கண்டு அவனிடத்தில் "நாத! உமக்கு எவ்வாறு இக்கதி நேர்ந்தது? சந்தர்ப்பம் நோக்கி உம்முடைய வார்த்தை பயன்படாதென்று கருதி ஆபத்தான சமயத்தில் நீர் உம்முடைய விருத்தாந்தத்தைப் பற்றி ஒன்றுஞ் சொல்லாதிருப்பதாகத் தெரிகிறது. அதனாலேயே உமக்கு இவ்வாபத்து நேர்ந்திருக்கிறது. உண்மையில் நீர் இழிந்த வகுப்பினராய் இருப்பீரென்று நினைப்பதற்கு ஏதுவே யில்லை; ஆதலால், நீர் உம்முடைய உண்மைச் சரித்திரத்தை என்னிடஞ் சொல்வீராயின் நான் அதைக் கொண்டு உம்மைத் தூக்குத் தண்டனையினின்றும் நீக்கி விடுவேன்; நீர் உம்முடைய விருத்தாந்தத்தைச்சொல்லாமல் மறைப்பீரானால் வீணாக உம்முயிர் போய் விடுவதன்றி அத் துக்கம் சகிக்க முடியாமையால் என்னுயிரும் போய்விடும்; எவ்வித குற்றமுமின்றி அவ்வாறு இருவரும் இறப்பதால் என்ன பயன்? மேலும், நம்மைப் போன்றவர்கள் இவ்வித நடிப்புக் காரர்களின் மோசச்செய்கைக்கு இடங்கொடுத்து நடக்கலாகாது. அவர்கள் காரியம் ஜெயம் பெறும்படி விட்டு விடுவோமேயானால் உலகத்தில் நீதியானது மறைந்து அநீதியல்லவா தலையெடுத்தாடும்; இப்பொழுதோ மிகுந்த ஆபத்தான சமயமாயிருக்கிறது; ஆதலால் நீர் சிறிதும் தாமதிக்காமல் உண்மையை வெளிப்படுத்துவீராக." என்று கூறினாள்.

இவற்றை யெல்லாங் கேட்டவுடன் ஸ்ரீபாலன், சிறிது நேரம் யோசித்து "இப்பொழுது தவள செட்டி இங்கே வந்திருப்பதால் ஒருவாறு நம்முடைய மனைவி

யாகியமதனமஞ்சுஷையும்அவனுடையகப்பலிலிருக்கக் கூடும்; அவளிடம் போய் நம்முடைய விருத்தாந்தங் களைக் கேட்டுக் கொள்ளும்படி இவளுக்குச் சொன்னால், இவள் அவ்வாறே போய் அவளிடம் கேட்பாள்; அவள் எல்லா விஷயங்களையும் சொல்லக் கூடும். பின்பு இருவராலும் தவள செட்டியின் பொய் வெளிப்பட்டு நம்முடைய தண்டனை நீங்கினாலும் நீங்கக் கூடும்; தண்டனைக் குள்ளானவர்களுடைய வார்த்தையைக் காட்டிலும், அன்னியருடைய வார்த்தைகளே சிரேஷ்டமானவைகளாக அதிகாரிகளால் எடுத்துக் கொள்ளப்படும்'' என்று தீர்மானித்து அவளை நோக்கி, ''குணமாலையே! ஏதோ என் தலைவிதியால் நான் இத்தண்டனைக் குள்ளாயினேன்; இப்பொழுது நான் எந்த வார்த்தைகளைக் கூறினாலும் அவை சிரேஷ்டமுடையவை யாக மாட்டா; ஆதலால் நீ என்னுடைய விருத்தாந்தங்களை யுணர்ந்து கொள்வதற்கு நானொருபாயஞ் சொல்கின்றேன் கேள்; இப்பொழுது இந்நகரத்திற்கு வந்திருக்கும் தவள செட்டி யென்பவனுடைய கப்பல்கள், துறைமுகத்திலே நிற்கின்றன; அவற்று ளொன்றில் மதன மஞ்சுஷை யென்னும் பெண்ணொருத்தி யிருப்பாள்; நீ அவளிடஞ் சென்று என்னுடைய விருத்தாந்தங்களை விசாரிப்பாயானால் அவள் எல்லாவற்றையும் விவரமாகக் கூறுவாள்'' என்றான்.

குணமாலை, உடனே தன் பிதாவினிடஞ் சென்று ''தந்தையே! தாங்கள் சில பறையர்கள் எவருடைய துர்ப் போதனையாலோ செய்த பல நடிப்புத் தொழில்களை நம்பி என் பர்த்தாவை நீசரென்று கருதி உண்மையை நன்றாக விசாரியாமல் வெகு சீக்கிரமாக

அவருக்கு மரண தண்டனை விதித்து விட்டீர்கள்; இது நியாயமாகாது; ஆதலால் நான் அந்த விஷயத்தைப் பற்றி உண்மையை விசாரிக்கப் போகின்றேன்; நான் வெளியே போய் அந்த விஷயத்தை விசாரித்து உம்மிடம் வந்து தெரிவிக்கும் வரையிலும் என்பர்த்தாவைக் கொலைக் களத்திற்குக் கொண்டு போகாமல் நிறுத்தி வைக்க வேண்டும்" என்று மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். அரசன் அவ்வாறே ஸ்ரீபாலனை நிறுத்தி வைக்கும்படி கட்டளை பிறப்பித்தான். ஸ்ரீபாலன் கொலைக்களத்திற்குக் கொண்டுபோகப் படாமல் நிறுத்திவைக்கப்பட்டான்.

அதன்மேல் குணமாலை தன் சிவிகையிலேறித் துறைமுகத்திற்குப் போய்த் தவள செட்டியினுடைய ஒவ்வொரு கப்பலிலும் ஏறி மதனமஞ்சுஷையென்னும் பெண்ணிருக்கின்றுளாவென்று ஆராய்ந்து பார்த்துக் கொண்டே வந்து முடிவாக ஒரு கப்பலில் அவளிருக்கக்கண்டு 'இவள் தான் நம் நாயகர் கூறிய பெண்ணாயிருப்பாள்' என்று உறுதி கொண்டு அவளிடத்தே சென்று நமஸ்கரித்தாள். அவள் "இந்தப் பெண் மிகவும் ரூபத்திற் சிறந்த ஓர் இராஜ குமாரத்தியைப் போல் விளங்குகின்றுள்; இவள் எவளோ தெரியவில்லை; இவள் நம்மிடம் வந்து நமஸ்கரித்ததற்குக் காரணம் யாதோ" என்று சந்தேகங் கொண்டு அவளை நோக்கி "அம்மையே! நீயார்? என்னிடம் வந்ததற்குக் காரண மியாது?" என்று வினவினுள். குணமாலை "நான் ஸ்ரீபாலருடைய மனைவி" என்று சொன்னுள். இந்த வார்த்தையைக் கேட்டவுடனே மதன மஞ்சுஷை திடுக்கிட்டு "இவளுடைய வார்த்தையால்

நம்முடைய நாயகர் உயிர் பெற்றிருக்கின்றாரென்பது விளங்குகின்றது! இஃதென்ன அதிசயம்! இவள் சொல்வது உண்மையோ பொய்யோ; ஒருவாறு தவளசெட்டியின் வஞ்சனைச் செய்கையால் இவள் நம்மிடம் அனுப்பப்பட்டிருப்பாளோ! காரியம் எப்படியிருந்தாலும் சரி; விஷயத்தைத் தீர விசாரிப்போம்'' என்று கருதி உடனே அவள் முகத்தை நோக்கி, "பெண்மணியே! நீ ஸ்ரீபாலருடைய மனைவியா! ஸ்ரீபாலர் எங்கேயிருக்கின்றார்? அவர் எப்படி உம்மிடம் வந்து சேர்ந்தார்? அவரை நீ எவ்விதம் மணாளராக அடைந்தாய்? நீ சொல்வது எனக்கு வியப்பாகவிருக்கிறது! நான் கேட்ட கேள்விகளுக்கு நீ விரைவில் விடையளிப்பாயாக'' என்று சொன்னாள்.

குணமாலை, ஸ்ரீபாலன் அந்நகரத்திற்கு வந்து சேர்ந்த விதத்தையும், தன் தந்தை அவனை வரவேற்று அவனுக்குத் தன்னை மணம் புரிந்து கொடுத்த வரலாற்றையும், இன்னும் மற்ற விவரங்களையும், அவன் அப்போது சில நீசர்களின் செய்கையால் மரண தண்டனைக்குள்ளாகியிருப்பதையும், அதை விடுதலை செய்தற்பொருட்டாக அவனுடைய சரித்திரத்தை விசாரித்தற்காகவே, தான் அவளிடம் வந்த செய்தியையும் கூறினாள்.

இவற்றையெல்லாங் கேட்டவுடனே மதனமஞ்சுஷை, ஸ்ரீபாலன் உயிர் பெற்றிருந்ததற்கும், குணமாலையைக் கலியாணஞ் செய்ததற்கும், சந்தோஷத்தையும் வியப்பையும், பின் நடந்திருக்கும் விஷயங்களுக்காக அளவற்ற துக்கத்தையுமடைந்து பெருமூச்சுவிட்டு

"ஆ! என் நாயகரும் இருக்கின்றாரோ! அவரைக் காப்பாற்றிய தெய்வத்தை நான் ஆயிரம் முறை வணங்குகின்றேன்; இப்படி அவர் தெய்வச் செயலால் உயிர் பிழைத்திருந்துங்கூட, மீண்டுமா அவருக்கு இத்துன்பம் நேர வேண்டும்; ஒருவாறு இது அந்த மகா சண்டாளனாகிய தவள செட்டியின் சூழ்ச்சியாக இருந்தாலு மிருக்கலாம்; ஆதலின் நாம் இப்பொழுதே இராஜ சமுகத்திற் சென்று ஸ்ரீபாலருடைய உண்மைச் சரித்திரங்களைக் கூறி அவரை மரண தண்டனையினின்றும் விரைவில் விடுவிக்க வேண்டும்; நல்லோர்க்கு எப்பொழுதும் தெய்வம் துணைச் செய்யும்" என்று ஆலோசித்துக் குணமாலையை நோக்கி, "தங்கையே! நானும் அவருக்குப் பத்தினிதான்; அவருடைய சரிதங்களையெல்லாம்இங்கு உன்னிடம்மாத்திரம் நான்கூறுவதாற் பயனில்லை; நான் இராஜ சமுகத்தில் வந்து எல்லாவற்றையுங் கூறுகின்றேன்; இந்தக் கப்பலுக்குத் தலைவனாகிய தவளசெட்டியென்பவன் நம் நாயகருக்கு விரோதி; அவனாலேயே இந்தச் சூழ்ச்சி நடந்திருக்குமென்று நான் நினைக்கின்றேன்; எஃது எப்படியிருந்தாலும் என் பர்த்தாவின் உயிரை மீட்பதற்கு நான் இப்பொழுதே வருகின்றேன்" என்று சொன்னாள். உடனே குணமாலை அவளைக் கப்பலை விட்டுக் கீழே இறக்கித் தன் சிவிகையி லேற்றிக் கொண்டு தன் தந்தையாகிய அரசனிடஞ் சென்றாள். அப்போது தவள செட்டி, மதனமஞ்சுஷையை வெளியில் விடாமல் காவல் செய்யக் கூடியவனாயிருந்தும் இராஜ புத்திரியாகிய குணமாலை வந்து அவளை யழைத்துக்கொண்டு போனபடியால், அவளைத் தடை செய்தால் தன்னுடைய இராக

சியங்கள் வெளிப்பட்டுத் தனக்கு மிகுந்த அபாயமுண்டாகு மென்று கருதி, அதனால் தடைசெய்யாமல் விட்டு விட்டான். அவ்வாறு விட்டதுமன்றி "ஏன் அந்தப் பெண் இவளை அழைத்துச் செல்கின்றாள்? இதனால் ஒருவாறு நமக்குத்தீங்கு நேர்ந்தாலும் நேருமோ; நாம் கப்பல்களை நடத்திக் கொண்டு ஓடிப் போய் விடலாமா? சி! சீ! அப்படி அவசரப் பட்டு ஒன்றையும் செய்து விடலாகாது; எதையும் தீர்க்க ஆலோசித்தே செய்ய வேண்டும்; ஒருவாறு நாமிங்கிருப்பதால் நமக்கு நன்மை யுண்டானாலும் உண்டாகக் கூடும்; நம்முடைய சூழ்ச்சியை எவர் அறியப் போகின்றார்கள்; ஒருவாறு மதன மஞ்சுஷை நம்முடைய இரகசியங்களை வெளிப்படுத்தினாலும், நாம் நம்முடைய வாக்குச் சாதுரியத்தால் அவளுடைய வார்த்தைகளைப் புரட்டி அவள் மீதும் சில குற்றங்களை ஸ்தாபித்து விடலாம்" என்று பல விதமாக ஆலோசித்து மனங் குழம்பிக் கொண்டிருந்தான்.

இவன் இப்படி யிருக்க, மேற்கூறியபடி சென்ற குணமாலையும் மதன மஞ்சுஷையும் அரசன் சமூகத்திற் போய்ச் சேர்ந்த வுடன், குணமாலை அவ்வரசனை நோக்கி "தந்தையே! என் பர்த்தாவினுடைய சரித்திரங்களை யெல்லாம் இந்தப்பெண்மணி யிடத்தில் விசாரித்துக் கொள்ளலாம்; அந்த விசாரணையினால் உண்மை விளங்கிப் போகும்". என்று சொல்ல, அரசன் மதன மஞ்சுஷையை நோக்கி "ஸ்ரீபாலன் விஷயத்தில் உனக்குத் தெரிந்தவற்றைச் சொல்வாயாக." என்றான். அவள் அரசன் முன்னே நின்று நமஸ்கரித்து, "புவன காவல! நான மகா பதிவிரதை; என் வாக்

கில் பொய் யென்பதே வராது; தெய்வ சாக்ஷியாக நான் சொல்வதெல்லாம் உண்மை; என் வார்த்தைகளை நீர் சந்தேக மில்லாமல் நம்ப வேண்டும்" என்று உறுதி மொழி கூறி, ஸ்ரீபாலன் பிறந்தது முதல் தன்னை மணஞ் செய்து கொண்டு வந்து தவள செட்டியால் சமுத்திரத்தில் வீழ்த்தப்பட்டது வரையிலுமுள்ள சரித்திரங்களையும், தவள செட்டி தனக்குச் செய்த தீங்குகளையும் கூறி, 'ஸ்ரீபாலனை, பறையர்களைக் கொண்டு நீச னென்று ஸ்தாபிக்கச் செய்ததும் தவள செட்டியாகவே யிருக்கலாம்' என்றுஞ் சொன்னாள்.

இவற்றை யெல்லாங் கேட்டவுடனே அரசன், விஷயத்தைத் தீர்க்க விசாரியாமல் தீர்ப்புச் செய்த தன்னுடைய மதியீனத்தைப் பற்றித் தன்னைத்தானே நொந்து கொண்டு "ஐயோ! நிரபராதியாகிய ஸ்ரீபாலனைக் கொல்லும்படி தீர்மானித்த நம்முடைய மதி என்னமதி; எதையும் தீர விசாரித்துச் செய்ய வேண்டு மென்னும் நீதியை நாம் அநுசரிக்காமற் போய் விட்டோமே; 'கண்ணாரக் கண்டதும் பொய், காதாரக் கேட்டதும் பொய், தீர விசாரித்ததே நிசம்' என்பது நம் புத்தியில் விளங்காமற் போய்விட்டதே; தவள செட்டி எவ்வளவு சாமர்த்தியமாக இந்தச் சூழ்ச்சியைச் செய்திருக்கிறான்; கேவலம், சில பறையர்களுடைய பாசாங்கான வார்த்தைகளை நம்பி நாம் ஸ்ரீபாலனை நீசனென்று உறுதியாக நம்பி விட்டோமே! உலகத்தில் வாயாடிகளாக விருப்பவர்கள் உண்மையைப் பொய்யாகவும், பொய்யை உண்மையாகவும் புரட்டி விடுவார்களென்பது இவர்களுடைய செய்கையால் நன்கு விளங்குகின்றது; நம்முடைய குமாரத்தி இவ்விஷயத்தில் பிரவேசிக்கா

திருந்து விடுவாளேயானல் இதுவரை ஸ்ரீபாலனுடைய உயிர் போயிருக்குமே; அப்படிப் போயிருந்தால் அந்தப் பாவம் நம்மை விடுமா? பாழ்நரகிலல்லவா கொண்டு போய் வீழ்த்திவிடும்; இவற்றிற் கெல்லாம் காரணம் அந்தத் தவள செட்டி யல்லவா?; அவனைச் சித்திரவதை செய்தாலும் என் சினம்தீராது; அவனை மகா சத்தியவந்தனென்று நம்பியல்லவா நாம் பலவித சன்மானங்களை, ஸ்ரீபாலனைக்கொண்டு அவனுக்குச்செய்வித்தோம்; அவன் இப்பேர்ப்பட்டவனென்பது நமக்கு முன்னே சிறிதும் தெரியாமற் போய் விட்டது; நம்மால் ஸ்ரீபாலனுக் கேற்பட்டிருக்கும் மனோவேதனையை நாம் எவ்வாறு தீர்ப்போம்'' என்று எண்ணுது மெண்ணி மனம் புண்ணுகி உடனே ஸ்ரீபாலனை வரவழைத்து அவனை நோக்கி "இராஜகுமாரனே! நான் என் மதியீனத்தால் செய்த தப்பிதத்தை நீ மன்னிக்கவேண்டும்; உலகத்தில் ஏமாற்றுக்காரர்களுடைய வலையினின்றும் நீங்குவது எப்பேர்ப்பட்டவர்களுக்கும் அருமையாயிருக்கும்; இந்தப் பாவிகளுடைய வார்த்தையில் நான் மதிமயங்கிப் போனேன்; இது அறியாமையால் நடந்த செய்கையாதலின் நீ என்மீது கோபங் கொள்ளாதிருப்பது தகுதியாகும்'' என்று பல தாழ்மையான வார்த்தைகளைக் கூறி அவனைச் சிம்மாஸனத்திலேற்றி உபசரித்தான். அப்போது ஸ்ரீபாலன் அம் மன்னனை நோக்கி "மண்டலாதிபரே! இஃது உம்முடைய தவறன்று; தவளசெட்டியின்மீதும் குற்றமில்லை; இப்பொழுது நடந்தவை யனைத்தும் என்னுடைய பழவினையின் பயனாகும்; எனக்கு ஒருவர் மீதுங் கோபமில்லை'' என்று சாந்தமான வார்த்தைகளைக் கூறினன்.

அரசன் அவனுடைய பொறுமைக்காக மகிழ்ந்து, தவள செட்டியின் மீதும், அந்த நீசர்கள் மீதும், அடங்காக் கோபங் கொண்டு, உடனே சில காவலர்களை யழைத்து அவர்களிடத்தில் "ஓர் உத்தமிக்கும் ஒரு மகா புண்ணிய புருஷனுக்கும் இவ்வாறு அளவற்ற தீங்குகளைச் செய்த அந்தச் செட்டியையும், அவனைச் சார்ந்தவர்களையும், நீசர்களையும் இப்பொழுதே இங்குக்கொண்டு வாருங்கள்; அவர்களுக்குத் தக்க தண்டனை செய்யாத வரையில் என் மனம் திருப்தியடைய மாட்டாது" என்று கட்டளையிட்டான். உடனே அவர்கள் சென்று சிறிது நேரத்திற்குள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு வந்து அரசன் முன்னே நிறுத்தினார்கள். அரசன் அவர்களைப் பார்த்தவுடனே காட்டுத் தீயைப் போலக் கொதித்தெழுந்து தவள செட்டியை நோக்கி "அடே பாதகா! நீ ஸ்ரீபாலனைச் சமுத்திரத்தில் வீழ்த்தி மகா பதிவிரதையாகிய மதனமஞ்சுஷைக்குத் தீங்கு செய்ய நினைத்ததோடு மேலும் ஸ்ரீபாலனுக்கு இடரைச் செய்தாயல்லவா? இவ்வித பாதகத்தைச் செய்யலாமா? இப்பொழுது நீ உண்மையைக் கூறிவிடு; இல்லாவிடில் உனக்கு அளவற்ற தண்டனை கிடைக்கும்" என்று மிகுந்த கோபத்தோடு சொன்னான். அப்போது தவள செட்டி, தான் செய்த குற்றங்களை மறைக்கத் துணிந்து 'ஐயோ! நான் எவ்வித தீங்கும் செய்யவில்லை; ஸ்ரீபாலர் தாமே சமுத்திரத்தில் வீழ்ந்து விட்டது உண்மை; அதன்மேல் நான் மதனமஞ்சுஷையை இடரின்றிக் காப்பாற்றி இங்குக்கொண்டு வந்துசேர்த்தேன்; நான் தீங்கு செய்யக் கூடியவனா யிருந்தால் அந்தப் பெண்ணை உயிருடன் இங்கே கொண்டு வருவேனா;

இதனுலேயே நீங்கள், நான் நிரபராதியென்பதைத் தெரிந்து கொள்ளலாம்; பின்னர், அவர் விஷயமாக நீசர்கள் செய்த செய்கையைப் பற்றி எனக்கொன்றுந் தெரியாது'' என்று மகாபரிசுத்தன் போலக் கூறினுன்.

அரசன் முன்னிலும் அதிகக் கோபமடைந்து அவனை நோக்கி 'அடே சிநேகத்துரோகி! ஏன் பொய் சொல்லுகிருய்; இப்பொழுது உன்னுடைய கள்ளத்தனத்தை வெகு சீக்கிரத்தில் வெளியாகும்படி செய்கிறேன் பார்' என்று சொல்லி விட்டு, உடனே சில சேவகர்களிடம் எதிரே நின்ற பறையர்களைக் காட்டி ''இவர்களை நையப்புடைத்து உண்மையைச் சொல்லும்படி செய்யுங்கள்'' என்று கட்டளை யிட்டான். அப்பொழுதே அந்தச் சேவகர்கள் விரைந்தோடி, ஒரு கட்டுப் புளியம் மிலாறுகளைக் கொண்டு வந்து அங்கே போட்டுக் கொண்டு ஒவ்வொன்ருக எடுத்து அவைகள் தூள் தூளாகப் போகும்படி அவற்ருல் பறையர்களை விளாசி 'நடந்ததைக் கூறுங்கள்; உள்ளதைச் சொல்லுங்கள்' என்று பல்லைக்கடித்து அதட்டினுர்கள். அவர்களாலடிக்கப்பட்ட அடிகள் பறையர்களுக்குத் தேள் கொட்டினது போல் மிகுந்த வேதனையைச் செய்தன. அதனுலவர்கள் 'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்ற வாக்கியத்திற் கிணங்கத் துடி துடித்துத் தங்கள்மனவுறுதியைக் கைவிட்டுக் கண்ணீர் விட்டழுது கொண்டு ''சுவாமிகளே! எங்களை அடிக்க வேண்டாம்! அடிக்க வேண்டாம்!! நாங்கள் நடந்ததைக் கூறிவிடுகிறேம்; இந்தத் தவள செட்டியார் எங்களிடம் அதிகப்பணம் கொடுத்து அந்தக் கட்டுப்பாடான காரி

யத்தைச் செய்யும்படி கேட்டுக் கொண்டார்; நாங்கள் என்ன செய்வோம் ஏழைகள்; பணத்தாசையினால் அந்த அயோக்கியத்தனமான காரியத்திற்கிசைந்து விட்டோம்; எங்கள் குற்றத்தை நீங்கள் மன்னிக்க வேண்டும்" என்று கும்பிட்டு வீழ்ந்தார்கள்.

அதன்மேல் அரசன் தவள செட்டியை நோக்கி 'இப்பொழுது நீ என்ன சொல்லுகிறாய்' என்று கேட்டான். தவளசெட்டியோ தன்னுடைய இரகசியங்களெல்லாம் வெளிப்பட்டுப் போயினமையால் வெட்கமும் துக்கமுமுள்ளவனாய் ஒன்றுஞ் செய்ய இயலாது வாயை மூடிக் கொண்டு மௌனமாய் நின்றான். அதன்மேல் அரசன் "இந்தச்செட்டி குற்றஞ் செய்ததில் எள்ளளவுஞ் சந்தேகமே யில்லை; ஆதலால் இவனுக்கும் மற்றவர்களுக்கும் தக்க தண்டனை புரிய வேண்டும்" என்று தீர்மானித்து, அவர்களைப் பலவிதமாக அடித்து இம்சிக்கும்படி தலையாரிகளுக்குக் கட்டளை யிட்டான். அவர்கள் அப்பொழுதே அக்கட்டளையை நிறைவேற்ற ஆரம்பித்தார்கள். அதைக் கண்ட ஸ்ரீபாலன் அரசனை நோக்கி "மன்னர் பெருமானே! இவர்கள் தீங்கு செய்தவர்களா யிருந்தாலும் என்னுடைய பழவினையால் ஏவப்பட்டே அதைச் செய்தார்கள்; என் தலைவிதிக்கு இவர்களைத் தண்டிப்பது நீதியாகாது; மேலும் தீங்கு செய்வார்க்கு நன்மை புரிவதே மேலோர் செய்கை; ஆதலால் இவர்களுக்கு எவ்வித துன்பமும் செய்யாமல் இவர்களை அனுப்பி விடுதலே நலம்." என்று கூறினான். அரசன், தனக்கு அவர்கள் மீது மிகுந்த கோபமிருந்தாலும், ஸ்ரீபாலன் அவ்வாறு சொன்ன படி

யால் அவனுடைய வார்த்தைக் கிணங்கி அவர்களைத் துன்பப் படுத்தாமல் அனுப்பி விட்டான். அவர்கள் ஸ்ரீபாலனுடைய உத்தம குணத்தைப்பற்றிப் புகழ்ந்து பேசிக் கொண்டு போய் விட்டார்கள்.

அதன் மேல் தனபால மகாராஜன் ஸ்ரீபாலனை அரண்மனைக் கழைத்துக்கொண்டு போய் அவனுக்கு ஸ்நானஞ் செய்வித்து ஆடையாபரணங்களை நல்கி அவனை அலங்கரித்துக் கொள்ளும்படி செய்து, குணமாலையுடனும் மதனமஞ்சுஷையுடனும் கொலுக்கூடத்திற் கழைத்துக் கொண்டுபோய், உயர்ந்த சிம்மாசனத்தின்மீதேற்றி, அவன் மனைவியரிருவரையும் இரண்டு பக்கத்திலுமிருக்கச் செய்து தன்னுடைய இராஜ்ஜியத்தில் பாதியை அவனுக்குக் கொடுத்து, அதற்கு அறிகுறியாகப்பலவாத்தியங்களும்முழங்கப் பெரியோர்கள் ஆசீர்வதிக்க நல்ல சுப முகூர்த்தத்தில் மகுடாபிஷேகமுஞ் செய்தான். இவ்விதச் சிறப்புக்களெல்லாம் பெற்றுக் கொண்ட பின்பு, ஸ்ரீபாலன் 'தீங்கு செய்த பகைவர்க்குத் தண்டனையாவது: அவர் மனம் நாணிப் போகும்படி அவர்க்கு மிக்க நன்மையைச் செய்தலே' என்ற நீதிப்படி தனக்கு அளவற்ற தீங்குகளைச் செய்த தவள செட்டி முதலியவர்களை வரவழைத்து அவர்களுக்கு நல்ல விருந்து செய்து உயர்ந்த ஆடையாபரணங்களையும், அளவற்ற திரவியங்களையும் கொடுத்து உபசார வார்த்தைகள் கூறி, அவர்களை அனுப்பிவிட்டுத் தன் மனைவியருடனே அந் நகரத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தான். அவனுடைய பொறுமைக் குணங்களைக் கண்டு அந் நகர மாந்தர்களெல்லோரும்

அவனைப் பலவாறு கொண்டாடினார்கள். அவனானு பசரித்தனுப்பப்பட்ட தவள செட்டி முதலியோர்கள் திரும்பிக் கப்பலுக்குப் போகுங் காலத்தில் தவள செட்டியானவன், தான் மிகுந்த கொடுமைகளை ஸ்ரீபாலனுக்குச் செய்தும் அவன் அவற்றை மனத்திற் கொள்ளாமல் தனக்கு உபகாரத்தையே செய்ததை நினைத்து அதனால் மிகுந்த அவமானத்தையடைந்து "இத்தகைய புண்ணிய புருஷனுக்குத் தீங்கு செய்த நாம் உலகத்தில் உயிரோடிருக்கலாமா" என்று மனவேதனைப் பட்டு அத்துக்கஞ் சகிக்காமையால் உடனே தன் வஜ்ர கங்கணத்தை உடைத்துத் தூளாக்கி வாயிற் போட்டுக் கொண்டு இறந்து நரகத்தை யடைந்தான். அவனுடைய பரிவார ஜனங்கள் அவனிறந்ததற்காக வருந்தி அச்செய்கையை ஸ்ரீபாலனிடத்தில் தெரிவித்து விட்டுத் தாங்களிருந்த கப்பல்களிற் போய்ச் சேர்ந்திருந்தார்கள்.

அத்தியாயம்-8.

ஸ்ரீபாலன் மதன சுந்தரியிடம் போய்ச் சேருதல்.

அதன்மேல் ஸ்ரீபாலன், "தவள செட்டி நமக்குப் பலவித இடையூறுகளைச் செய்துவந்தும், நாம் அவனுக்கு நன்மையையே செய்தோம்; அப்படி யிருந்தும் அவன், தான் செய்த தவறுகளை நினைத்துத் தானே தற்கொலை புரிந்துகொண்டான். அவனுடைய குற்றமே அவன் நெஞ்சைப் பிளந்து அவனைக் கொன்றது; 'கெடுவான் கேடு நினைப்பான்' என்றபடி

அவன் பல பாவச் செய்கைகளைச் செய்து அதன் பயனாக த்தானே கெட்டொழிந்தான்; 'நன்மை செய்தார் நலம் பெறுவார், தீமை செய்தார் தீமையுற்று நிற்பர்தாமே' என்ற நீதிவாக்கியத்தின் உண்மையை நாம் இவன் மூலம் தெரிந்து கொண்டோம்" என்று அவன் விஷயத்தில் இரக்கங் கொண்டு, தனக்கு பர்ப்பர ராஜனால் கொடுக்கப் பட்ட ஏழு கப்பல்களையும், இரத்தினதீபத்தரசனால் கொடுக்கப் பட்ட ஐசுவரியங்களையும் தன் வசப்படுத்திக் கொண்டு தவள செட்டியினுடைய ஐஞ்னூறு கப்பல் களையும், மற்றப் பொருள்களையும், பரிவார ஜனங்களை யும் அவனுடைய நகரத்திற்கு அனுப்பி அவனுக்குச் சொந்தக்காரரிடம் சேர்ப்பித்து விட்டுச் சில தினங் கள் சென்றபின், வேறு பல தேசங்களுக்குச் சென்று வர விரும்பித் தூதுவர்களால் சிற்சில தேசங்களின் வளங்களையும், ஆங்காங்குள்ள அதிசயங்களையும் கேள் விப் பட்டுத் தன் மாமனாகிய தனபால மகாராஜனிடத்தி லும், மதன மஞ்சுஷை, குணமாலை ஆகிய மனைவியரி டத்திலும், தான் தேச சஞ்சாரம் செய்து விரைவில் திரும்பி வருவதாகச் சொல்லி விடை பெற்றுக் கொண்டு அங்கிருந்து நல்ல சுப தினத்தில் தனக்கு அவசியமாக வேண்டிய சிற்சில படைகளுடன் பிரயாண மானான்.

இவ்வாறு புறப்பட்ட அந்த ஸ்ரீபால மகாராஜன் குண்டலபுரம், காஞ்சன புரம், கங்கண தேசம், பஞ்ச பண்டித தேசம், மல்லிபால மகா தேசம், கலிங்க தே சம், முதலிய பல நாடுகளுக்கும், சில தீவுகளுக்குஞ் சென்று ஆங்காங்குள்ள அரசர்களைக் கண்டு, அவர்களி டத்திலே தன் பிரதாபங்களைக் காட்டி அவர்களால்

கொடுக்கப்பட்ட அநேகசேனைகளையும், ஆடையாபரணங் களையும், அளவற்ற திரவியங்களையும், அநேகம் அடிமை யாட்களையும், பல கன்னிகைகளையும் பெற்றுக் கொண் டு, சில மாதங்களில் தளவர்த்தன புரத்திற்குத் திரும்பி வந்து சேர்ந்தான். அவன் இவ்வாறு அளவற்ற ஐசு வரியங்களுடன் திரும்பி வந்ததைக் கண்டு தனபாலன் முதலியோர்கள் மிகவும் மகிழ்ச்சி யடைந்து அவனு டைய வீரப் பிரதாபச் செயல்களுக்காக அவனைமிகவும் கொண்டாடினார்கள்.

அதன் மேல் ஸ்ரீபாலன் சில மாதங்கள் வரை அங் கே தங்கி யிருந்து, தன்னுடைய முதன் மனைவியாகிய மதனசுந்தரி யிடம் திரும்பி வருவதாகச் சொல்லி வந்த காலம் சமீபித்து விட்ட படியால், அவளிருக்கு மிடத்திற்கு விரைந்து போய்ச் சேர வேண்டு மென்று கருதி, ஒரு தினம் தன் மாமனிடஞ் சென்று "நான் சுற்றுப் பிரயாணமாக வந்து அதிக நாட்களாகின்றன; இனி என்னுடைய வாசஸ்தானம் போய்ச் சேர வேண் டும்; நீர் அதற்கு அநுமதி தருவீராக" என்று சொ ன்னான். தனபால மகாராஜன் அவனுடைய பிரிவிற்கு மன மிசையாதவனாகி அவனை நோக்கி "என்னருமை மருகரே! உம்மைப் போன்ற திவ்விய புருஷன் என் னுடைய நகரத்திற் சேர்ந்திருப்பதே எனக்கு மிகுந்த பாக் கியமாகும்; எனதெண்ணம் அப்படி யிருப்பதால் உம் மை விட்டுப் பிரிய எனக்கு இஷ்டமில்லை; நீர் இவ்வி டத்திலேயே இருக்கவேண்டும்; வேண்டுமானால் உம் மைச் சார்ந்தவர்களை இங்கே வரவழைத்துக் கொள்ள லாம்." என்று கூறி அவன் பிரயாணத்தைத் தடுத் தான். அப்பொழுது ஸ்ரீபாலன், "மாமா! உமக்கு

என்மீது ஏற்பட்டிருக்கும் அபிமானத்தால் நீர் இவ்வாறு கூறுகின்றீர்; நான் உம்முடைய வார்த்தைப்படியே எதையுஞ் செய்யக் கடமைப் பட்டவனே; ஆயினும், நான் என்னுடைய தேசத்திற்குப் போய் நிறைவேற்ற வேண்டிய காரியங்கள் அநேக மிருக்கின்றன; அவை தள்ளிவிடத் தக்கவை யல்ல; நான் அவற்றைக் கவனியாமல் விட்டு விடுவேனானால் எனக்கு எவ்வித சிறப்பு மில்லாமற் போகும்; மேலும் என்னுடைய சொந்த அரசாட்சியைப் பங்காளி எனக்குத் துரோகஞ் செய்து கைப்பற்றிக் கொண்டிருக்கிறான்; அதனை நான் அவசியம் மீட்கவேண்டும்; அது தவிரவும் என்னை அவமதித்த முதல் மாமனுக்கு என்னுடைய ஐசுவரியங்களையெல்லாம் கொண்டுபோய்க்காட்டி அவர் என்னை நன்கு மதிக்கும்படி செய்யவேண்டும்; இன்னும் என்னுடைய முதல் மனைவியிடம் பனிரண்டு வருஷங்களுக்குள் நான் திரும்பி வந்து விடுவேனென்று உறுதியாகக் கூறிவந்தேன்; இப்பொழுது பதினொரு வருடங்கள் கழிந்து பனிரண்டாவது வருடத்தில் பதினொருமாதங்கள் கடந்து விட்டன; நான் சொல்லி வந்த காலம் பூர்த்திபெற இன்னும் ஒருமாத மிருக்கின்றது; இதற்குள் நான் போகாமல் இந்த ஒருமாதமும் நீங்கிவிடுமேயானால் அவள் மிகுந்த துயரத்திற் குள்ளாவாள்; ஒருசமயம் எனக்கேதோ அபாயம் வந்துவிட்டதென்று நினைத்து அப்பேதைப் பெண் உயிரை விட்டுவிடவுங் கூடும்; என்மாதாவும் அவ்வித நிலைமையை அடைவாள்; ஆகையினால் நீர் என் பிரயாணத்தைத் தடை செய்யலாகாது; உடனே நான் செல்வதற்கு விடைதர வேண்டும்; பின்னால் நான் அடிக்கடி

இங்கே வந்து போய்க்கொண்டிருக்கிறேன்; நாம் எப்பொழுது சம்பந்தஞ் செய்து கொண்டோமோ அப்பொழுதே நம் தொடர்பு நிலையானதாக ஏற்பட்டு விட்டதல்லவா? அத்தொடர்பு எக்காலத்திலும் நீங்கமாட்டாது." என்று கூறினன்.

இவற்றை யெல்லாங் கேட்டதும் தனபால மகாராஜன் யாதொரு தடையுஞ் சொல்லாமல் ஸ்ரீபாலனுக்கு விடை கொடுத்தான். அதன்மேல் ஸ்ரீபாலன் தன்மனைவியருடனும் சகல சைனியங்களுடனும் நல்ல தினத்தில் புறப்பட்டுச் சில நாடு நகரங்களை யெல்லாங் கடந்து மஹா புண்ணியஸ்தல மாகிய ஊர் ஜயந்தகிரியை யடைந்து 'இது அநேக மகான்களெல்லாம் முத்தி பெற்ற விடமாதலின் நாம் இங்கே சென்று இங்குள்ள சுவாமியைத் தரிசித்து வணங்கிப் போக வேண்டும்' என்று கருதி அங்குள்ள நேமிஸ்வாமியின் சந்நிதியை யடைந்து அந்த பகவானுக்கு பூசை அர்ச்சனை அபிஷேகம் முதலியனவைகளை யெல்லாம் செய்து முடித்து, ஆலயத்தைச் சுற்றி வலமாகவந்து பகவான் முன்னிலையில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, அதன்மேல் அவ்விடத்தை விட்டு நீங்கி சௌராஷ்டிர தேசம், அஹிசத்ரபுரம், மஹாராஷ்டிர தேசம், கூர்ஜர தேசம் முதலிய இடங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள பல அரசர்களை ஜெயித்துத் தனக்குள்ளடக்கி அவர்களிடம் பகுதி வாங்கியும், சிலரைச் சிநேகங் கொண்டு, அவர்கள் சிநேக பாவத்தால் கொடுத்த பல ஐசுவரியங்களைப் பெற்றும், அப்பால் சிலதினங்கள் பிரயாணஞ் செய்து பனிரண்டாவது வருடம் முடிவானதினத்தில் தன் மனைவியிருக்கும் உஜ்ஜயினி புரத்தை யடைந்து அங்குள்ள ஒரு சோலை

யில் தன் சைனியங்களுடனே தங்கி அன்றுசூரியன் அஸ்தமித்தவுடன் முன்னிரவு நேரத்தில் தன்னுடைய மந்திரி யொருவனிடத்தில் பரிவாரங்களை யெல்லாம் ஒப்பித்துவிட்டுத் தான் மாத்திரம் தனியே வெளியே றிப்போய்த் தன் மனைவி யிருக்கும் மாளிகையிற் சேர்ந்து வாயில்காப்போரறியாதபடி உட்புகுந்து தன் மனைவியும், தாயும் இருக்கும் அறையின் கதவின் ஓரமாகப் போய் நின்று அவர்கள் என்ன நிலைமையிலிருக்கிறார்களென்பதையும், என்ன பேசிக் கொள்ளுகிறார்களென்பதையும் அறியும் பொருட்டுக் கதவின் சந்தில் செவி சாய்த்து அவர்களின் வாய்ச்சொல்லை ஆராய்ந்தான்.

அப்பொழுது மதன சுந்தரி கமலாவதியை நோக்கி "மாமியே! நான் என்ன செய்வேன்; பனிரண்டு வருஷத்திற்குள் வருவதாகச் சொல்லிப்போன உம் புத்திரர் இன்னும் வரவில்லையே; இன்றோடு பனிரண்டாவது வருஷமும் முடிவாகி விட்டதே; அவர் வாராமற் போனதற்குக் காரணம் தெரியவில்லையே; எங்கேனும் ஆபத்துக் குள்ளாகியிருப்பாரோ? அப்படி யானால் நான் உயிர் வைத்துக் கொண்டிருப்பதில் என்ன பிரயோசனம்? நான் நெருப்பிடை வீழ்ந்து இறப்பதே தகுதி; இனி ஒரு போதும் என்னுயிர் தரியாது." என்று சொல்லி ஆறாத் துயரத்தை யடைந்து கண்ணீர் ஆறாய்ப் பெருக அழுதாள். அவள் அவ்வாறு கண் கலங்கி அழுவதைப் பார்த்து வருந்திக் கமலாவதியும் கண்ணீர் விட்டழுதுகொண்டு அவளுடையகண்ணீரைத் துடைத்துஅவளைநோக்கி "மதன சுந்தரியே! உன்னிலும்பதின்மடங்கதிகமான துக்கம் எனக்கும் ஏற்ப

ட்டிருக்கிறது; ஆயினும் என் செய்யலாம்; நீ அவசரப் பட்டு ஒன்றையுஞ் செய்யத் துணியாதே; என் மகனோ மகா வீரபுருஷன்; அவன் எவ்வித ஆபத்திற்குள்ளும் சிக்கிக் கொள்ளமாட்டான்; இன்று தவறினும் நாளையாவது இன்னுஞ் சில தினங்கள் சென்றாவது இங்கே வந்து சேருவான்; ஒருவர் ஒரு தவணை நாளைக் குறிப்பிட்டுப் போனால் அந்த நாளையே உறுதியாக வைத்துக் கொள்ளலாகாது; மனிதர் எதையும் சொன்னபடி நிறைவேற்றுதல் முடியாது; சில முக்கியமான காரியங்களை உத்தேசித்து அந்தத் தவணைநாள் தவறி மேலுஞ் சில தினங்களோ, சில மாதங்களோ, சில வருஷங்களோ கழிந்து விடவுங் கூடும்; ஆதலால் நீ சில தினங்கள் வரையிலுமாவது பொறுத்துக் கொண்டிருத்தல் வேண்டும்" என்று சமாதானங் கூறினாள். அவள் எவ்வளவோ சமாதானங்கூறியும் மதனசுந்தரி மனந் தேறாமல் "மாமி! நீர் என்ன சொன்னாலும் என் மனம் திருப்தியடைய மாட்டாது; நான் இன்று இரவு விடியும் வரையிலுந்தான் சகித்திருப்பேன்; அதன்மேல் என் நாயகர் பிரிவைச் சகிக்க என்னாலியலாது; நான் உயிர் விடவே துணிவேன்; இது சத்தியம்" என்று சொன்னாள்.

இவற்றை யெல்லாங் கேட்டவுடன் ஸ்ரீபாலன் "நாம் நல்ல வேளையாக இன்று வந்து சேர்ந்து விட்டோம்; இல்லாவிடில் அவசியம் அபாயம் நேரும்" என்று உடனே "மதனசுந்தரி! என்சண்பணி! மனங் கலங்காதே! வந்துவிட்டேன்!" என்று கதவைப் பலமாகத் தட்டினான். ஸ்ரீபாலனுடைய குரலோசையைக் கேட்டவுடனே மதனசுந்தரியும் கமலாவதியும்

வியப்பும் களிப்புமுடையவர்களாய்த் தேகம் பூரித்து உரோமஞ்சிலிர்த்துக் கண்களில் ஆனந்தக் கண்ணீர்பெருக அவசரமாக ஓடிவந்து கதவைத்திறந்தார்கள். ஸ்ரீபாலன் ஓரிளஞ் சிங்கத்தைப் போல் உள்ளே பிரவேசித்துத் தாயாருக்கு நமஸ்காரஞ் செய்து, மதன சுந்தரியின் கண்ணீரைத் துடைத்தான். மதன சுந்தரி அவன் பாதங்களில் வீழ்ந்து வணங்கி "நாதா! ஏன் இவ்வளவு தாமதம்? இன்று இரவு கழிவதற்குள் நீர் வாராவிடில் ஆபத்து நேரக் கூடியதாயிருந்தது." என்று அவனை ஓர் ஆசனத்திலுட்கார வைத்தாள். ஸ்ரீபாலன் அவளை நோக்கி 'ஆனாலும் உனக்கு இவ்வளவு அவசர புத்திகூடாது'என்று கூறிவிட்டுத் தான் சென்றது முதல் அன்றைய வரையில் அங்கு நடந்த விஷயங்களையெல்லாம் அவளிடம் விசாரித்தான். அவளும் ஒன்றொழியாமல் எல்லாவற்றையும் கூறி, ஸ்ரீபாலன் போனநாள்தொடுத்து அன்றுவரையில் நடந்த அவனுடையவிருத்தாந்தங்களையும் கூறும்படி அவனிடம் வேண்டினாள். அவன் அவ்வாறே எல்லாவற்றையுங் கூறினான். கமலாவதியும் மதன சுந்தரியும் அவன் அடைந்த ஆபத்துக்களைக் கேட்டுத் துக்கத்தையும், சிறப்புக்களைக் கேட்டு ஆனந்தத்தையும் அடைந்தார்கள். பின்னர் இருவரும் சேர்ந்து ஸ்ரீபாலனுக்குப் பிரயாண இளைப்புத் தீர்வதற்கான பரிகாரங்களை யெல்லாம் செய்தார்கள்.

அதன்மேல் ஸ்ரீபாலன் வெளியேறிப் போய்த் தன்னுடைய பரிவாரங்களை யெல்லாம் அழைத்துக் கொண்டு வந்து மாளிகையில் சேர்த்தான். மதன மஞ்சுஷையும் குணமாலையும், தங்கள் மாமியாகிய கம

லாவதியையும் தமக்கையாகிய மதனசுந்தரியையும் கண்டு வணங்கினார்கள். அவ் விருவரும் இவர்களைத் தழுவி உபசரித்தார்கள். மறுநாள் ஸ்ரீபாலன் மதன சுந்தரியிடம் "நானே இப்பொழுது சகல ஐசுவரியங்களையும் அடைந்தவனாயிருக்கின்றேன்; இனிமேல் உன் தந்தை என்னைக் கௌரவமாக மதிப்பார்; ஆதலால் நான் போய் அவரைப் பார்த்து வருகிறேன்." என்று கூறினான். அதைக் கேட்டு மதன சுந்தரி "என் பிரிய நாயகரே! என் தந்தை பல விதத்திலும் நல்லவரே; ஆயினும் ஆதியில் நான் நீதியை அனுசரித்து அவர் வார்த்தையை மறுத்துப் பேசினதற்காக அவர் வெறுத்து என்னை அகங்காரங் கொண்டவளென்றும் அந்த அகங்காரத்தை யடக்க வேண்டுமென்றும் கருதிக் குஷ்டரோகியாயிருந்த உமக்கு மணம் முடித்துக் கொடுத்தார்; நான் என்னுடைய விரதமகிமையால் உம்முடைய ரோகத்தைப் போக்கி, நல்ல இல் வாழ்க்கையை அடைந்தேன்; பின்னர், நீர் நோய் நீங்கி யிருந்த காலத்தில், அவர் நம்முடைய வீட்டுக்கு வந்து என்னைக் கொண்டாடி எனக்கும் உமக்கும் பல செல்வங்களைக் கொடுத்தும் உம்மைப்பற்றி விசேஷமாக விசாரியாமல் அவமதித்தார்; அந்த அவமதிப்பை நீக்கும் பொருட்டாகவே நீர் பல தேசங்களுக்குச் சென்று மிகுந்த பிரயாசைப்பட்டு அளவற்ற ஐசுவரியங்களைத் தேடிக் கொண்டு வந்தீர்; ஆதலால் அப்படி அவமதித்த அவரை நீரே போய்ப் பார்ப்பது கௌரவமாகாது; நீர் உம்முடைய பிரதாபங்களை அவருக் கறிவித்து அவர் இங்குவந்து உம்மைப் பார்க்கும்படி செய்ய வேண்டும்; அவர் மாமனும் நீர் மருகரு

மாயிருப்பதால் நீரே சென்று அவரைப் பார்க்க வேண்டியது முறைமையா யிருந்தாலும் அவர் சிறிது அகங்காரங் கொண்டிருப்பதால் அந்த மமதையைத் தணிக்கும் பொருட்டே இவ்வாறு செய்யும்படி நான் உம்மிடம் தெரிவிக்கிறேன்" என்று கூறினாள்.

பெரியோரிடத்தில் சிறியோர் இவ்வாறு செய்வது தகுதியற்ற காரியமாதலால் ஸ்ரீபாலனுக்கு இது சம்மதப் படவில்லை. என்றாலும் தன் மாமனுடைய குமாரத்தியே இவ்வாறு கூறியதால் அதைத் தடுக்கக் கூடா தென்று நினைத்து உடனே ஒரு தூதுவனை யழைத்துத் தான் சகல ஐசுவரியங்களுடனும் தேச சஞ்சாரஞ் செய்து திரும்பி வந்திருப்பதைத் தன் மாமனிடம் தெரிவித்து வரும்படி அவனுக்குக் கட்டளை யிட்டான். அவன் உடனே போய்ப் பிரஜாபால மகாராஜனிடத்தில் ஸ்ரீபாலனுடைய விருத்தாந்தங்களை யெல்லாம் கூறினான். பிரஜாபாலன் தன்னை மதிக்காதது குறித்தே ஸ்ரீபாலன் திரவியந் தேடி வருதற்கு வெளியேறிச் சென்றானென்பது, இவன் போன பின்னர் அந்த பிரஜாபாலனுக்குத் தெரிந்து, அவன் அதற்காக மனம் வருந்தி யிருந்தவனாதலால் உடனே சென்று தன் மருமகனுக்கு இனிய வசனங்கள் கூறிச் சந்தோஷத்தை யுண்டாக்க வேண்டுமென்று நினைத்துத் தன் மந்திரிகளுடன் புறப்பட்டு ஸ்ரீபாலன் மாளிகைக்குப் போனான். அவன் வருவது தெரிந்த வுடனே ஸ்ரீபாலனும் மதனசுந்தரி முதலியோர்களும் அவனை எதிர்கொண்டு வணங்கி அழைத்துப்போய் ஆசனத் திருத்தி உபசரித்தார்கள். அப்போது பிரஜாபாலன் தன் மருமகனையும் மகளையும் நோக்கி "நான் உங்களுக்கு ஏதோ சிற்சில

தீங்குகள் செய்திருப்பதாக நீங்கள் கருதி யிருக்கிறீர்க ளென்பதை நான் கொஞ்சக் காலத்திற்கு முன் உணர்ந் தேன்; ஏதோ மனித சுபாவத் தவறுதலால் என்னி டத்தில் சில தப்பிதங்களிருந்திருக்கலாம்; நானும் அவற்றை ஏதோ ஒரு காரியத்தை யுத்தேசித்தே செய்திருப்பேன்; அவற்றிற்காக நீங்கள் மனம் வருந் தலாகாது; நான் செய்த சில அற்பக் காரியங்களால் உங்களுக் கேற்பட்ட மனக் குறைகளை, நான் வெட்கத் தை யடையும்படி நீங்களே உங்கள் சாமர்த்தியத்தைக் கொண்டு நீக்கி அளவற்ற ஐசுவரியங்களையும் அடைந் து விட்டீர்கள்; இதுவே நான் செய்த தப்பிதங்களுக் குப் போதுமான பிராயச் சித்தமாகும்; எஃது எப் படி யிருந்தாலும் நீங்கள் இந் நிலைமையை அடைந்த தற்காக நான் அளவற்ற ஆனந்த மடைகின்றேன்; இதுவே எனக்குப் பெரும் பாக்கியமாம்; இத்தகைய மருமகனையும் மகளையும் பெற்றஎனக்குஇனி வேறு கு றையாதுளது." என்று பல உபசார வார்த்தைகள் கூறி அவர்களை மகிழ்வித்தான். அவர்களும் சந்தோஷித்து "எங்கள் காலகதியால் நாங்கள் ஏதோ சிறிது மனசஞ் சலத்தை யடைந்தோம்; இதற்குக் காரணம் நீரன்று; ஆனால் நீர் செய்த காரியங்களும் எங்களுக்கு நன்மை யாகவே முடிந்தன. நீர் அவ்வாறு செய்யாவிடில் நாங் கள் இந் நிலைமைக்கு வந்திருக்க மாட்டோம்; ஆத லின், இந்த நன்றிக்காக நாங்கள் உமக்குப் பன்முறை வந்தனம் புரிகின்றோம்." என்று விநயமான வார்த் தைகளைப் பேசி பிரஜாபால மகா ராஜனுடைய மனவே தனையைப் போக்கினார்கள். பின்னர் புவன் அவர்கள் மன மகிழுமாறு வேண்டிய பொருள்களை யெல்லாம்

அவர்களுக்குக் கொடுத்து 'எப்பொழுதும் சுகமாக வாழ்வீர்களாக' என்று ஆசி கூறிவிட்டுத் தன் அரண் மனைக்குச் சென்றான். ஸ்ரீபாலன் தன் மனைவியரோ டு மகிழ்ச்சியாகச் சில தினங்கள் வரை அங்கே தங்கி யிருந்தான்.

அத்தியாயம்-9.

ஸ்ரீபாலன் தன் சொந்த இராஜ்ஜியத்தை அடைதல்.

அதன்மேல் ஸ்ரீபாலன் ஒருநாள் "நாம் உத்தே சித்த எல்லாக் காரியங்களும் நிறைவேறின; இனிநம் முடைய பிதாவின் இராஜ்ஜியத்தைக் கைப் பற்றிக் கொள்ள வேண்டியதொன்றுதான் பாக்கி யிருக்கிறது; ஆதலால் இப்பொழுதே படை யெடுத்துப் போய்நம்ப கைவணுகிய பங்காளியை ஜெயித்து அதனைக் கைப்பற் ற வேண்டும்" என்று துணிந்து, உடனே தன் மனைவி யரிடத்தும், தாயாரிடத்தும் தன் கருத்தை வெளியிட் டு விடை பெற்றுக் கொண்டு தன் பங்காளியாகிய பகை வன் மீது படை யெடுக்கும்படி தன்னுடைய மந்திரி களுக்கும் சேனாதிபதிகளுக்கும் கட்டளை யிட்டு அவ் வாறே அவர்கள் சகல சைனியங்களையும் ஆயத்தப் படு த்த, இரத கஜ துரக பதாதி யென்னும்சதுரங்க சேனைக ளுடன் யுத்த கோலங் கொண்டு புறப்பட்டு, நடுவழியி லிருந்த பற்பல தேசத்து அரசர்களுடனெதிர்த்து அவர்களைத் தோல்வி யடையச் செய்து தன்னடிக்குட் படுத்தி அவர்களிடம் கப்பம் வாங்கிக் கொண்டு, வரு டந் தோறும் தவறாமல் பகுதி செலுத்தி வரும்படி

அவர்களுக் கெல்லாம் ஆக்ஞாபித்து விட்டுத் தன் பிதா வினுடைய பட்டணமாகிய சம்பா புரத்தின் சமீபத்திற் போய்த் தங்கி இரண பேரிகையை முழக்கித் தான் யுத்தஞ் செய்ய வந்திருப்பதாகத் தன் சிறிய தந்தையாகிய வீரமதன மகாராஜனுக்குத் தெரிவித்து வரும்படி ஒரு தூதுவனை யனுப்பினான்.

அவன் அவ்வாறே சென்று அந்த வீரமதன மகாராஜனிடத்தில் "எங்கள் ஸ்ரீபால மகாராஜர் உம்மோடு யுத்தஞ் செய்ய வந்து நகர்ப் புறத்தே சைனியங்களோடு தங்கி யிருக்கின்றார்; அவர் யாரெனில், அவர்தாம் உம்முடைய தமையன் புத்திரர்; ஆதியில் நீர் அவருக்குச் சதியாலோசனை செய்ததை அவருணர்ந்து வெளியேறிப் போய், கம்சனைக் கொல்ல மறைந்து வளர்ந்த கண்ணனைப் போல் இரகசியமாக வளர்ந்து வீர புருஷராக வெளியேறிப் படைத்துணை சேர்த்துப் பற்பல தேசங்களையும் ஜெயித்து, திக்கு விஜயஞ் செய்து முடிவாக உம்மிடம் அவருடைய வீரப் பிரதாபத்தைக் காட்ட வந்திருக்கின்றார்; நீர் சிறிய தந்தையா யிருப்பதை யுத்தேசித்து உம்மைக் கொல்லாமலே தம்முடைய இராஜ்ஜியத்தைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டு மென்ற எண்ணம் அவருக்கிருக்கிறது; ஆதலால் நீர் உடனே வந்து முன் செய்த தப்பிதத்திற்காக அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு இராஜ்ஜியத்தை ஒப்புவித்து விடும்; இல்லையேல் உம்முடைய உயிர் தரிப்பது அருமை யாகும்." என்று தூதுவன் சொல்லும் முறைப்படியே தன்னுடைய இராஜாவின் வீரச் செய்கையை விளங்கக் கூறினான், இவ

ற்றைக்கேட்டவுடனே வீரமதன மகாராஜன் கடுஞ் சினமடைந்து நெருப்பைப்போலக் கண்சிவந்து, தூது வனை நோக்கி "அடா தூதுவா! உனக்கென்ன தைரியம்! உன்னுடைய நிலைமைக்குத் தகாத வார்த்தைகளை நீ எனக்கு முன்னே பேசிவிட்டாய்; இதற்காக இப்பொழுதே உன்னைச் சிரச்சேதம் செய்ய வேண்டும்; ஆயினும் தூதுவனைக் கொல்லல் நீதியாகாதாதலால் உனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தேன்; உன்னுடைய அரசனும் அவனைச் சேர்ந்த சேனை வீரர்களும் என்முன்னெதிர்ப்படின் காற்றிடைப் பட்ட பஞ்சுபோலப் பறந்து போய் விடுவார்கள்; உங்கள் அரசன் சிறுபிள்ளை; இந்த இராஜ்ஜியத்தை ஆளும் பாத்தியம் எனக்கு மிருக்கிறது; அதனால் நான் இதை விட மாட்டேன்; அவன் சிறுவனாயும் எனக்குத் தமையன் புத்திரனாயு மிருப்பதை யுத்தேசித்து அவனைக் கொல்லாமல் விட்டுவிடுகிறேன்; அவனை, தான்வந்த வழியேயோடிப் பிழைக்கச்சொல்; அவன்சொல்லியனுப்பிய வார்த்தைகளை யுத்தேசிக்க அவனைக் கொல்ல வேண்டுமென்றே எனக்குக் கோப மதிகரிக்கின்றது; ஆயினும் அவன் எனக்குப் பிள்ளை முறையா யிருப்பதை யுத்தேசித்து நான் மனம் பொறுத்தேன்; இனிமேல் நீ அரை நிமிஷமும் இங்கே நில்லாதே; விரைவிற் சென்று நான் கூறியவற்றை யெல்லாம் அவனுக்குச் சொல்" என்று இடிபோல் முழங்கிக் கூறினான். அதன்மேல் தூதன் திரும்பி வந்து ஸ்ரீபால மகாராஜனிடம் அவனுடைய சிற்றப்பன் கூறிய கடினமொழிகளை யெல்லாங் கூறினான்.

உடனே ஸ்ரீபாலன் "அவன் சிற்றப்ப னென்று நாம் அவன் மீது சிறிது பக்ஷம் பாராட்டி அவனிடம்

தூது அனுப்பினோம்; ஏதோ அவனுக்கு முடிவு காலங் கிட்டி விட்டது; அதனாலேயே அவன் விரோதமான வார்த்தைகளைத் தூதுவனிடம் கூறினான்; இனி நாம் தாட்சண்ணியம் பார்ப்பதில் பிரயோசன மில்லை.” என்று சைனியங்களுடன் புறப்பட்டு யுத்தகளம் போய்ச் சேர்ந்து, தான் யுத்தஞ் செய்வதற்கு ஆயத்தமாகி விட்டதற் கறிகுறியாகப் போர்ப் பறையை முழக்குவித்தான். அது கேட்டு வீரமூதனனும் ‘ஒரு அறியாத சிறுவனுக்கு எவ்வளவு அகங்காரம் ஏற்பட்டிருக்கின்றது! இவனுடைய அகங்காரத்தை நாம் நிமிஷ நேரத்திலொழித்து விடுவோம்’ என்று போர்க் கோலங் கொண்டு ஆயுதங்களைக் கையிலேந்திச் சகல சேனைகளுடனும் புறப்பட்டு வந்து யுத்த களத்தில் ஸ்ரீபாலன் சேனைகளோடு எதிர்த்தான்; வீரமான போர் தொடங்கிற்று. இருவகைப் படைகளிலும் இரண பேரிகையின் முழக்கமும், சங்கத் தொனிகளும், வீரப்பிரதாபமான வார்த்தைகளின் ஒலியும், ஆயுதங்களொன்றோடொன்று தாக்குவதாலுண்டாகும் சப்தமும், குதிரைகளின் கனைப்பும், யானைகளின் முழக்கமும், தேர்கள் விரைந்து செல்லு மதிர்ச்சியும், காலாட் படைகள் முன்னேறிப் போகும் ஆர்ப்பரிப்பும் அதிகரித்தன; பூமியிலிருந்து செந்தூளெழும்பி ஆகாயத்தை மறைத்தது; இருதிறப் படைகளும் கை கலந்தன; வாள்களும் வேல்களும் எங்கும் மின்னலைப் போல் பிரகாசித்தன; இரண்டு பக்கத்து வீரர்களாலும் ஏவப்பட்ட அஸ்திரங்கள் ஆகாயத்தில் மாரிபோல் நிறைந்தன; பல குதிரைகள் சிரமற்று வீழ்ந்தன; தேர்கள் சிதைந்தன; யானைகள் தும்பிக்கை யறுபட்டு வீறிட்டலறின; வேறு சில யானைகள் தலை

யறுபட்டு மலைகளைப் போற் சாய்ந்தன; பல வீரர்கள் நெஞ்சம் பிளந்து மண்மேற் சாய்ந்தார்கள்; பனங் காய்கள் வீழ்வது போல் பலர் தலைகள் அறுபட்டு வீழ்ந்தன; சிலர் குடல் சரிந்தார்கள்; சிலர் கால் கை முதலிய அவயவங்களெல்லா மறுபட்டு உடற் குறைவாக வீழ்ந்து புரண்டார்கள்; பல ஜீவன்களுடைய உயிர் போவதாலுண்டாகும் பயங்கரத் தொனி அதிகரித்திருந்தது; இரத்தம் பெருக்கெடுத் தோடியது; பருந்து கழுகு முதலிய பறவைகளும், நரி நாய் முதலிய மிருகங்களும் அங்குக் கூடி மாமிசங்களைத் தின்று இரத்தத்தைப் பருகிக் களித்திருந்தன.

இவ்வாறு பயங்கரமான யுத்தம் நடக்கும் போது ஸ்ரீபாலன், வீணாகப் பல ஜனங்களும் பல மிருகங்களும் இறப்பதைப் பார்த்துத் தன்னுடைய ஜீவகாருண்ணிய குணத்தினால் மனதிரங்கி "நாம் தாம் பாத்தியாபாத்திய சம்பந்தமாக யுத்தம் புரிகின்றோம்; நாமாவது நம்முடைய சிற்றப்பனாவது இந்த யுத்தத்தில் மடிய வேண்டியது கிரமம்; இந்த ஜீவராசிகளெல்லாம் ஒரு காரணமு மில்லாமல் வீணுக்கு ஏன் மடிய வேண்டும்; ஆதலா லிவற்றை விலக்கி நாமும் அவனும் தனித்து யுத்தஞ் செய்வதே நலம்" என்று கருதி இந்த அபிப்பிராயத்தை ஒரு தூதுவன் மூலம் எதிரி படைகளுக்குத்தெரிவித்தான். அங்கிருந்த மந்திரி முதலானவர்கள் 'இது சரியானதே' என்று வீரமதனனுக்குச் சொன்னார்கள். அவன் அதற் கிசைந்து தன்னுடைய அபிப்பிராயத்தையும் அத்தூதுவனிடஞ் சொல்லி அவனையனுப்பினான். தூதுவன் திரும்பிவந்து அதைச் சொ

ல்லவே ஸ்ரீபாலன் சகல ஆயுதங்களையும் நீக்கி விட்டுத் தனித்து மல்யுத்தஞ் செய்யப் புறப்பட்டான்; வீர மதனனும் அவ்வாறே வந்து எதிர்த்தான்; இருவரும் கைகலந்தார்கள்; ஒருவர் கையை ஒருவர் தட்டியும் பிடித்திழுத்தும், ஒருவர் முகத்தை யொருவர் கையா லெற்றியும், ஒருவர் கழுத்தை யொருவர் வளைத்தும், ஒருவர் தேகத்தை யொருவர் தழுவிப் பிடித்து நெருக்கியும், இருவரும் கால்களோடுகால்கள் சேர்த்துப் பின்னியும், ஒருவரை யொருவர் கீழே தள்ளியும், ஒருவரை யொருவர் கீழே வீழ்த்தி மேலேறிப் புரட்டியும், கைகளால் குத்தியும், அறைந்தும், தட்டியும் பலவிதமான அஸ்தலாகவங்களைச் செய்து அவர்களின் போர்த் திறத்தைக் காட்டினார்கள். அவர்களுடைய மல்யுத்த மானது பீமசேனனுடைய மல்யுத்தமும் பின்னிடக் கூடியதாயிருந்தது. அவர்களுடைய வீர மான வார்த்தைகள் இடியைப் போல் முழங்கிக் கொண்டிருந்தன. அவர்களுடைய இந்தக் கோர மான யுத்தத்தைப் பார்த்த வுடனே அங்கு நின்ற வீர்க ளெல்லோரும் அதிசயித்தார்கள். இப்படி இரண்டு மல்லகள் ஒன்றோடொன்று மோதுவதுபோல் அவ்விருவரும் எதிர்த்து யுத்தஞ் செய்து வரும்போது ஸ்ரீபாலன், வீர மதனனுடைய பலத்தை யடக்கி, அவனுடைய இரண்டு கைகளையும் முதுகின் புறமாகச் சேர்த்துக் கட்டி அவனைக் கீழே வீழ்த்தி அவன் மார்பின் மீதேறிக் கொண்டுவலக்கையை முஷ்டியாகப்பிடித்து அவனுடைய கழுத்துக்கு நேரே மேலோங்கி 'இதோ உன்னைக் கொல்லப் போகின்றேன்' என்று சொல்லிக் கொண்டே அவனுடைய அடிக்கழுத்தில் குத்தப் போனான்.

அச்சமயத்தில் ஸ்ரீபாலனுடைய சேனு வீரர்கள், வீர மதனனெழிந்தானென்று உறுதி கொண்டு ஜயபேரிகையை முழக்கினர்கள்; எங்கும் ஜெயத்திற் கறிகுறியாகப் பல சங்கங்கள்முழங்கின; அச் சமயத்தில்வீரமதனனை ஒரே குத்தாகக் குத்திக் கொல்லப் போனஸ்ரீபாலனுக்கு ஜீவகாருண்ணியம் வந்து விட்டது. அதனல் அவன் உயர்த்தின கையைக்கீழே தாழ்த்தி "அற்பவாழ்வுக்காக நம் சிற்றப்பனைக் கொல்கிறது தகுதியன்று; நாம் அப்படியே இவனைக் கொன்று இராஜ்ஜியத்தையடைந்தாலும் எவ்வளவு காலம் உலகத்திலிருந்து வாழப் போகின்றோம்; சீ சீ! இக்கொடுஞ் செய்கை நம்மைப் போன்ற விவேகிகட்கு அடாது" என்று உடனே அவனுடைய கட்டை அவிழ்த்து விட்டு மிகுந்த பக்ஷத்தோடு அவனை நோக்கி, "சிறிய தந்தையே! நீ ஆதியில் உனக் கேற்பட்ட அபகார சிந்தையால் என்னைக் கொல்லத் துணிந்தாய்; அதன் பொருட்டே நானும் இப்பொழுது உன்னைக்கொலை செய்யத் துணிந்தேன்; உன்னுடைய உயிர் என்கைக்குள்ளாய் விட்டது; அப்படியானலும் உன்னைப் போன்ற கடின சித்தம் எனக்கு ஏற்பட வில்லை; நான் உன்னைப் போல இவ்வுலக வாழ்வைப் பெரிதாக நினைக்கின்றவனல்லன்; உனக் கறிவுறுத்தும் பொருட்டாகவே உன்னை இந்நிலைமையில்கொண்டுவந்து வைத்துப் பார்த்தேன்; இனிமேலாவதுநீ உலக வாழ்வு இத் தன்மையான தென்பதைத் தெரிந்துகொள்; என் கைக்குள் சிக்கியிருக்கும் உன்னுடையஉயிரை நான்உனக்குத்தானமாகக் கொடுத்து விட்டேன்; எனக்கோ அளவற்ற ஐசுவரியங்களிருக்கின்றன. ஆதலால் இந்த இராஜ்ஜியமும் எனக்கு வேண்டியதில்லை; நீ பே

ராசைக் காரணைகையால் உயிர் பிழைத்துப் போய் இந்த இராஜ்ஜியத்தை ஆண்டு கொண்டிரு." என்றுகூறினன்.

இந்த வார்த்தைகளெல்லாம் அந்த வீரமதனனுக்குப் பழம் புண்ணில் வேல் பாய்ந்ததுபோ லிருந்தது. ஸ்ரீபாலனுடைய பெருந் தன்மையான குணங்களையும், தன்னுடைய அற்பக் குணங்களையும் நினைக்க நினைக்க அவனுடைய நெஞ்சம் இரம்பத்தா லறுக்கப்படுவது போல் அவனுக்கு மிகுந்த வேதனை யுண்டாயிற்று. உடனே நல்ல புத்தியும் ஏற்பட்டது. அவ்வாறு நல்லறிவுண்டாகவே அவன் "சீசீ! இந்த அற்பமான உலக வாழ்க்கையை நம்பி நாம் எவ்வளவு பாபகாரியங்களைச் செய்து விட்டோம்! இனி எத்தனை ஜென்மங்களெடுத்தாலும் நமக்கு இந்தப் பாபம் தொலையமாட்டாது; ஒரு சிறுபிள்ளைக் கிருந்த பெருந்தன்மையான குணம் நமக் கேற்படாமல் போய் விட்டதே; இவனை நாம் ஆதியில் பாதுகாத்து இவனுக்கே இராஜ்ஜிய பட்டாபிஷேகம் செய்திருப்போமானல் நமக்கு உலகத்தில் எவ்வளவு சிறப்பு ஏற்பட்டிருக்கும்; நாம் இப்பொழுது அபகார சிந்தனையால் தேடிக் கொண்டது பழிப்பேயன்றி வேறொன்றுமில்லை; ஆதலால் நாம் உலகைத் துறந்து நம்முடைய பாபந் தீரும்படி தவஞ் செய்யப் போதலேதகுதி." என்று உறுதி கொண்டு ஸ்ரீபாலனை நோக்கி "என்னருமைப் புதல்வ! நான் பேராசைக் குணத்தால் உனக்குத் தீங்கு செய்தேன்; அதனாலுண்டாகும் பயன் இன்ன தென்பதை இப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன்; எனக்குப் புத்திவந்தது; நான் என்ன செய்திருந்தாலும் அதை மனத்தில் வைக்காமல் நீ எனக்கு மன்னிப்புக்கொடு; இனி நான் அரை நிமிஷமும்

இல் வாழ்க்கையை விரும்பேன்; இந்த் நிலையற்ற இராஜ்ஜியமும் எனக்குத் தேவை யில்லை; நீயே இதனைப் பெற்று அரசு புரிவாயாக” என்று கூறிவிட்டு உடனே துறவை நாடினன். அப்பொழுது ஸ்ரீபாலன் தன்னோடு அவன் நகரத்திலிருக்கும்படி எவ்வளவோ சமாதானமானவார்த்தைகளைக்கூறி அவனைவேண்டினன். அவன் நக்ரத்தி லிருக்கச் சிறிதுஞ் சம்மதியாமல் ஒரே பிடிவாதமாக ஸ்ரீபாலனிடம் விடைபெற்றுக் கொண்டு ஞானசாகர முனீஸ்வரரிடஞ் சென்று தீக்ஷை பெற்றுத் தவத்தைக் கைக் கொண்டிருந்தான்.

அத்தியாயம்-10.

ஸ்ரீபாலனுக்குச் சொந்த ராஜ்ஜிய பட்டாபிஷேகம்.

ஸ்ரீபால மகாராஜன், யுத்தம் முடிந்தபின் தன் சிற்றப்பன் துறவுக்குச் சென்ற வுடனே, தன்னுடையதேவியரோடும் நால்வகைச் சேனைகளோடும், பலவிதவாத்தியங்களுடனும் யுத்தகளத்தை விட்டுப் புறப்பட்டுப் போய்க் கடவுளாலயமடைந்து, தான் செய்த யுத்தத்தால் பல உயிர்கள் மடிந்ததனுலுண்டாகிய பாவம் நீங்கும் பொருட்டுச் சுவாமிக்கு அர்ச்சனைமுதலியவைகளைச்செய்து அப் பாவத்தைப் போக்கி நகரைச் சுற்றி வலமாக வந்து அரண்மனையிற் புகுந்து, பொக்கிஷசாலை, ஆயுதச்சாலைமுதலிய வற்றை யெல்லாம் ஆராய்ந்து பார்த்துக்கணக்கிட்டுத் தன் வசம செய்து கொண்டு, நன்முகூர்த்தத்தில்குடியேறினன். பின்னர் ஒரு சுபதினத்தில் பெரியோர்களும் மந்திரிகளும் கூடி நகரை யலங்கரித்து

ஸ்ரீபாலனை இரத்தின சிம்மாசனத்தேற்றிப் பல வாத்தியங்கள் முழங்கவும், அறவோர் ஆசீர் வதிக்கவும் அவனுக்கு மகுடாபிஷேகம் செய்தார்கள். அப்போது பல வித்வான்கள் ஸ்ரீபாலனைப் புகழ்ந்து பாடினார்கள். அந்த மகுடாபிஷேகமகோற்சவத்தின் பொருட்டாக பரத நாட்டியங்களும், நாடகங்களும், கீதவாத்தியங்களும், சங்கீதப் பாடல்களும் இன்னும் பலவிதமான வேடிக்கைகளும் நடை பெற்றன. ஒவ்வொரு தொழிற்காரர்களுக்கும் ஸ்ரீபாலனால் தக்க சன்மானங்கள் வழங்கப்பட்டன. பல தான தர்மங்கள் செய்யப்பட்டன. இவ்வாறு மகுடாபிஷேகம் செய்து கொண்டபின் ஸ்ரீபாலன், யுத்தத்தில் தனக்காகப்பாடுபட்ட சுத்த வீரர்களுக்கு ஜீவிதமாகப் பல கிராமங்களைக் கொடுத்தும், தன் சிநேகிதர்களுக்கும் சுற்றத்தார்களுக்கும் சௌக்கியமாக ஜீவிக்கும்படி மிக்க ஐசுவரியங்களை நல்கியும், பசுக்களை விருத்தி செய்தும், பல ஆலயங்களைக் கட்டியும், எவரும் எப்பொழுதும் தடையின்றிப் போசனமுண்ணும் பொருட்டு அன்ன சத்திரங்களை ஏற்படுத்தியும், கல்விச்சாலைகளை ஸ்தாபித்தும், ஏழைகள் ஜீவிக்கும்படி தொழிற்சாலைகளை யுண்டாக்கியும், தன்னுடைய நாட்டில் பனிரண்டு வருஷம்வரை பகுதி வாங்குவதில்லையென்று விளம்பரப்படுத்திக் குடி ஜனங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்தும் மனுநீதி தவறாமல் அரசுசெலுத்தி வந்தான். இவனுடைய ஆளுகையில் தர்மம் தலை யெடுத்தோங்கிற்று; கல்வி விருத்தி யடைந்து கலைமகள் செழிப்புற்று வளர்ந்தாள்; மலர்மகள் மகிழ்ந்து இனிது உறைந்தாள்; நிலமகள் நெஞ்சம் மகிழ்ந்தாள்; கள் காமம் கொலை களவு சூதுஎன்னும்பஞ்ச

மகா பாதகங்களும் அஞ்சி மறைந்தன; மூதம் மும்மாரி வழுவாமற் பெய்தது; நிலங்களில் வளம் மிகுந்தோங்கியது; அதனால் குடிகள் மிகச் செழிப்படைந்தார்கள்; 'குடி செழிக்கக் கோன் செழிக்கும்' என்றபடி ஸ்ரீபாலனுடைய ஐசுவரியமும் நாளுக்கு நாள் விருத்தியடைந்து கொண்டு வந்தது. ஸ்ரீபாலன் செங்கோன் முறையை உலகத்தா ரெல்லோருங்கொண்டாடினார்கள்.

ஸ்ரீபாலன் இவ்வாறு நீதியுடனே அரசாட்சி செய்து வருங்காலத்தில், அந் நகரத்திற்குச் சமீபத்தேயுள்ள வனத்தில் ஸ்ருத சாகர முனிவர் வந்து தங்கினார். அவர் வரவையுணர்ந்த அவ்வன பாலகன் உடனே ஓடி வந்து ஸ்ரீபாலனிடத்தில் தெரிவித்தான். அதைக்கேட்டதும் ஸ்ரீபாலன் எழுந்து அம்முனிவரிருக்குந் திசையை நோக்கிஏழடி தூரம் நடந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அவர் வரவையுணர்த்திய வனபாலகனுக்குத் தானணிந்திருந்த ஆபரணங்களையெல்லாங் கழற்றி நற்பரிசாகக் கொடுத்து விட்டுத் தன் பரிவாரஜனங்களோடும் நகரமாந்தர்களோடும் புறப்பட்டுப் போய் அம்முனிவரைக் கண்டு அவருடைய பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து நாத்தழும்ப அவரைப் பலவாறு துதித்து எழுந்து அவர் முன்னே நின்று ஆதியில் தனக்கு குஷ்டரோகம் ஏற்பட்டிருந்ததற்கும், மற்ற துன்பங்கள் நேர்ந்ததற்கும், மதனசுந்தரி தனக்கு மனைவி யானதற்கும் காரணத்தை அவரிடம் விசாரித்துணரக் கருதி அவரை நோக்கி "சுவாமி! ஆதியில் எனக்கும் என்னுடைய சிநேகிதர்களாகிய எழுநூறு பேர்களுக்கும் குஷ்டநோய் உண்டானதற்குக் காரணம் யாது? நாங்கள் முற்பவத்

தில் என்ன பாவத்தைச் செய்தோம்? பின்னர் மதன சுந்தரி எனக்கு மனைவியாகி என்னுடைய குஷ்டரோகத்தையும் என் சிநேகிதர்களுடைய பெரு வியாதியையும் எந்தப்புண்ணிய வசத்தினால் நீக்கினாள்; அதன்மேல் என்னைத் தவளசெட்டி சமுத்திரத்தில் வீழ்த்தும்படி நான் என்ன பாவத்தைச் செய்தேன்; அதற்கப்பால் நீசர்கள் கூடி என்னை ஒரு நீசனென்று ஸ்தாபிக்கும்படி நான் எந்தப் பெரியோரை நிந்தித்தேன்? இவை யெல்லாம் பழவினை சம்பந்தமாகவே நேர்ந்திருக்கக் கூடு மென்று நான் நினைக்கின்றேன்; ஆதலால் இவற்றை யெல்லாம் நீங்கள் ஆராய்ந்து எனக்குத் தெரிவித்தல் வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

முனிவர் அவனுடைய வேண்டுதற் கிணங்கி அவதிக் ஞான மென்னும் திரிகால வுணர்ச்சியால் அவனுடைய முற்பிறப்பின் செய்கைகளை யெல்லாம் ஆராய்ந்துணர்ந்து அவனை நோக்கி "ஸ்ரீபாலனே! எல்லாம் உன்னுடைய பூர்வ கர்மப் பலனாகவே நடந்திருக்கின்றன; நீ இதற்கு முன் மூன்றாவது சென்மத்தில் இந்த பாரத க்ஷேத்திரத்தின் ஆரிய கண்டத்தில் உள்ள விஜயார்த்த பர்வதத்தில் உத்தரஸ்ரேணியி லிருக்கும் இரத்னகரம் என்னும் நகரத்தில் ஸ்ரீகாந்த னென்னும் அரசனாகத் தோன்றி அரசு புரிந்து வந்தாய்; அப்பொழுது உனக்கு மஹிஷி, ஸ்ரீமதி யென்னும் இரண்டு மனைவியர் ஏற்பட்டிருந்தார்கள்; எழு நூறு சிநேகிதர்களும் இருந்தார்கள்; நீ வசந்த காலத்தில் ஒரு சமயம் சோலைக்குச் சென்று சுகுப்தாசாரியார் என்னும் முனிவரைக் கண்டு அவரிடம் நமஸ்கரித்து நிற்க, நீ அப்போது ஜிநதருமத்தைக் கைக்கொள்ளாதிருந்ததை

அவருணர்ந்து உன்னை நன்மார்க்கத்திற்றிருப்ப நினைந்து உனக்கு ஜிந தருமங்களை உபதேசித்து அவற்றைக் கைக் கொள்ளுமாறு கட்டளை யிட்டார்; நீ அவ்வாறே திரும்பி வந்து சீலாசாரங்களையும் விரதங்களையும் அநுஷ்டித்து வந்தாய்; உன் மனைவியரும் அவற்றைக் கைக் கொண்டிருந்தார்கள்; இப்படியிருக்கும்பொழுது ஒரு தினம் உன்னுடைய சிநேகிதர்களாகிய எழுநூறு பேரும் உன்னை நோக்கி 'அரசனே! நீ யாருடைய உபதேசத்தையோ கேட்டுக் கொண்டு வீணே உடம்பைக் கஷ்டப்படுத்தி விரதங்களை அநுஷ்டித்து வருகிறாய்; இதனால் ஏதோ மறுமையில் சுவர்க்க இன்பத்தையோ மோக்ஷ இன்பத்தையோ அடைந்துவிடலாமென்று நினைத்துக் கொண்டிருக்கின்றாய்; இப்பொழுது பிரத்தியக்ஷமாக உலக சுகங்களை அநுபவிப்பதை விடுத்து இனி அப்பிரத்தியக்ஷமாக அநுபவிக்கப் போகும் ஒரு இன்பத்தை எதிர் பார்ப்பது மதியீனம்' என்று துர்ப் போதனை செய்தார்கள்; நீ அவர்களுடைய துர்ப்போதனையால் விரதங்களை விட்டு விட்டாய்; பின் அவர்களுடனே ஒரு நாள் நீ சோலையிற் சென்று அங்குத் தவம் செய்துகொண்டிருந்த ஞானசாகரமுனிவரை நோக்கி 'இவர் மிகுந்த குஷ்டரோகி' என்று ஏளனம் செய்தாய்; உன்னுடைய துணைவரும் அவ்வாறே பரிகசித்தார்கள்; அதன் மேல் ஒரு தினம் நீ காலையில் வெளியேறி ஒரு வனத்திலுள்ள தடாகக் கரையை யடைந்து அங்கே வைராக்கிய சித்தத்துடனே நிஷ்டைகூடி நின்ற ஒரு முனிவரைப் பார்த்துப் பரிகசித்து அத்தடாகத்தில் தள்ளினாய்; அவர் நீரில் முழுகி அவஸ்தைப் பட்டுப் பிறகு வெளியேறிப் போனார்; பின்னை

ரு நாள் நீ வன சஞ்சாரஞ் செய்யுங் காலத்தில் அவ்வனத்தில் உபவாச மிருந்து தவத்திற் சிறந்த ஒரு முனீஸ்வரரைக் கண்டு 'நீ நீசன்' என்று நிந்தித்தாய்; நீ இவ்வாறு துஷ்ட காரியங்களைச் செய்து வரும் போது உன்னுடைய மனைவியரின் தாதிகளி லொருத்தியாகிய குணவதி யென்பாள் உன் செய்கைகளுக்கு மனம் பொருளாகி உடனே உன் மனைவியாகிய ஸ்ரீமதிக்கு உன்னிடமுள்ள துர்க்குணங்களைத் தெரிவித்தாள்; இதைக் கேட்டவுடனே ஸ்ரீமதி மன வருத்த மடைந்திருந்தாள்; அவள் அவ்வாறு கொண்ட வருத்தத்துடனே ஒரு தினம் உன் சமீபத்தி லிருக்கும்போது ஒரு மனிதன் அவளை நோக்கி 'ஏனம்மா! முகம் வாடியிருக்கின்றாய்?' என்று வினவினான்; அதற்கவள் 'என்னுடைய நாயகர் துன்மார்க்கருடைய துர்ப் போதனையால் விரத சீலங்களை விட்டு முனிவர்களுக்குப் பல விதமான தீங்குகளைச் செய்து வருகின்றார்; இவருடைய நடக்கையைப் பற்றித்தான் நான் முகம்வாடியிருக்கின்றேன்; இவருடனிருந்து இல் வாழ்க்கையை நடத்துவதைப் பார்க்கிலும் துறவடைதல் நலமாகும்; ஆதலால் நான் இப்பொழுதே தீக்ஷைக் கொள்ளத் துணிந்துவிட்டேன்' என்று கூறினாள். இவ் வசனங்களைக் கேட்ட நீ அது முதல் விரதங்களை அனுஷ்டிப்பதாக அவளிடம் சொல்லி உன்னுடைய குற்றங்களை மன்னிக்கும்படி வேண்டினாய்; அவள் அவ்வாறே மன்னித்து வெளியேறிப் போகாமல் உன்னிடமிருந்தாள்; அதன் பிறகு நீ அவளுடனே ஒரு தினம் உத்தியான வனத்திற்குச் சென்று அங்கிருந்த வரதத்தமுனீஸ்வரரைக் கண்டு அவரிடம் உன்னுடைய முன் விருத்

தாந்தங்களைக் கூறி உனக்கு நன் மார்க்கங்களை உபதே சிக்கும்படி வேண்டினாய்; அவர் அவ்வாறே அவற்றை உபதேசித்தருளினார்; அதன் பிறகு நீ வீட்டுக்கு வந்து அதுமுதல் உன் மனைவியரோடு சித்த சக்கர நோன்பை யனுஷ்டித்து அந்திய காலமடைந்து தேகத்தை விட்டு நீங்கி அந் நோன்பின் பயனால் சதார கல்பத்தில் சதேந் திரனாகத் தோன்றி அவதிக் ஞானத்தால் உன்னுடைய பூர்வ விருத்தாந்தத்தை யறிந்து ஜிநாலய பூஜை செய்து மகிழ்ச்சியோடு தங்கி யிருந்தாய்; அப்பொழுது ஸ்ரீமதியும் தன் விரத பலத்தால் தேகம் நீத்து அங்கே வந்து இந்திராணியாகத் தோன்றி உன்னுடன் சேர்ந் திருந்தாள்; பின்னர் நீ மத்திம லோகத்திற்கு வந்து அநேக ஜிநாலய தரிசனஞ் செய்து மீண்டு போய் அவ்விந்திர பதவியின் ஆயுஷ்யம் முடிந்தபின் இவ் வுலகத்திற்கு வந்து சம்பா புரத்துக்கு அதிபதியாகிய சிம்மசேன மகாராஜனுக்குப் புத்திரனாகத் தோன்றி னாய்; இந்திராணியாகி யிருந்த உன் மனைவியும் அந்த ஆயுஷ்யம் முடிந்த பின் உஜ்ஜயினி நகரத்துக்கு இ றைவனாகிய பிரஜாபாலனுக்கு மதனசுந்தரி யென் னும் புத்திரியாகத் தோன்றிப் பூர்வ சம்பந்தத்தால் உனக்கே மனைவியானாள்; நீ மூன்றும் பவத்தில் ஞான சாகர முனிவரை குஷ்டரோகி யென்று நிந்தித்த படியால் இப் பிறப்பில் உனக்குக் குஷ்டரோகம் தொ டர்ந்தது; இப்பொழுது உன்னோடிருக்கும் எழுநூறு சிநேகிதர்களும் அந்தப் பிறப்பில் உன்னுடன் கூடி அ ம் முனிவரை நிந்தித்தவர்களாதலால் அவர்களும் இப் பிறப்பில் உன்னுடன் குஷ்டரோகிகளானார்கள்; மதன சுந்தரி பூர்வ பவங்களில் மகா புண்ணியவதியாயிருந்த

படியால் இப்பிறப்பில் சித்த சக்கர நோன்பை யனுஷ்டித்து உங்களுடைய குஷ்ட ரோகங்களைப் போக்கினாள்; இன்னும் நீ அந்த மூன்றும் பவத்தில் ஒருமகாமுனிவரைத் தடாகத்தில் வீழ்த்தியபடியால் உன்னை இப் பிறப்பில் தவள செட்டி சமுத்திரத்தில் வீழ்த்தினான்; நீ அக்காலத்தில் ஒரு முனிவரைப் பார்த்து நீசனென்று நிந்தித்தபடியால் உன்னைப் பல நீசர்கள் கூடி இப் பிறப்பில் நீசனென்று சொன்னார்கள்." என்று கூறினார்.

இவற்றை யெல்லாங் கேட்ட வுடனே ஸ்ரீபாலன் 'மனிதர் செய்த பாவம் ஒவ்வொரு ஜன்மங்களிலும் அவருடன் தொடர்ந்து சென்று அவர்களை வருத்துகின்றது நிச்சயமாயிருக்கின்றது.; ஆதலால் இனி நாம் தீயகாரியங்களைச் செய்து பாவத்தைத் தேடி மூட்டை கட்டிக் கொள்ளாமல் வெகு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்' என்று துணிந்து அம்முனிவர் பாதங்களில், மீண்டும் வீழ்ந்து நமஸ்கரித்து அவரிடம் ஞானோபதேசம் பெற்றுக் கொண்டு திரும்பிப் போய் மாளிகை சேர்ந்து தன் மனைவியருடனே இனிதாக வாழ்ந்திருந்தான். அவனுடைய வாழ்க்கையானது இந்திரனுடைய வாழ்க்கையைப் போல மிகவுஞ் சிறப்புற்று விளங்கிற்று. அவனுக்குப் பல நற்புத்திரர்கள் தோன்றினார்கள். கல்வி, செல்வம், சந்ததி, ஆகிய முப்பொருள்களிலும் சிறந்தவன் ஸ்ரீபாலன் ஒருவனே என்று உலகத்தாரெல்லோரும் அவனைக் கொண்டாடினார்கள்.

இவ்வாறே ஸ்ரீபாலன் பல ஆண்டுகள்வரை அரசாட்சி புரிந்து ஒரு தினம் வனக்கிரீடை செய்யச் செ

ல்லுங் காலத்தில் அங்கே ஒரு யானையானது சேறு நிறைந்த தடாகத்திலிறங்கி நான்கு கால்களும் சேற்றி லழுந்திப் போகத் தான் வெளியேற முடியாமல் அதி லேயே கிடந்து உழன்று உயிர் விட, அதனைப் பார்த்து 'உலக பந்தத்தில் சிக்கிய மானிடர்க்கும் நேருவது இக் கதிதான்; ஆதலால் உலக வாழ்வை இன்ப முடை யதாக நினைப்பது கூடாது; நாம் இப்பொழுதே துறவு பூண்டு முத்தி யின்பமாகிய உறுதிவாழ்வைத் தேட மு யற்சிசெய்ய வேண்டும்' என்று சமுசாரத்தில் வெறுப் படைந்து, உடனே வந்து தன் மனைவியர் மந்திரிகள் மு தலியவர்களிடத்தில் தன்னுடைய கருத்தை வெளிப் படுத்தி, இராஜ்ஜியத்தைப்புத்திரர்கள் வசம் ஒப்புவித்து விட்டு சுவிரதாசாரியரிடஞ் சென்று தீக்ஷை பெற்றுத் தவஞ் செய்து முடிவில் நித்திய வாழ்வாகிய மோக்ஷத் தை யடைந்தான். அவனுடைய மனைவியரும் ஆரியா ங்கனைகளிடம் தீக்ஷை பெற்று தபஸினிகளாகி நோன் புகளை யனுஷ்டித்து நற்பதவிகளை யடைந்தனர். மந்தி ரிகளும் தவஞ் செய்து மேற்கதிக்குச் சென்றார்கள். மதனசுந்தரியோ தானனுஷ்டித்து வந்த சித்தசக்கர நோன்பின் பயனாக மேலும் ஆரியாங்கனைகளை யடுத்து அவர்களிடம் தீக்ஷை பெற்று விரதங்களைக் கைக் கொ ண்டு முடிவில் மஹா சுக்ர கல்பத்தில் இந்திரனாகப் பிற ந்து சுகமனுபவித்து அதன்மேல் பூமியில் ஜைனோத்த மனாய்த் தோன்றி நல்ல தவங்களைச் செய்து மோக்ஷத் தை யடைந்தாள். சுபம்! சுபம்!! சுபம்!!!

சம்பூரணம்.

பொருள் அடக்கம்.

அத்தியாயம்.		பக்கம்
1	மதன சுந்தரியின் திருமணம்.	1
2	மதன சுந்தரியின் கற்புயர்வு.	15
3	ஸ்ரீபாலன் தேசாந்தரம் போகுதல்	19
4	ஸ்ரீபாலன் தவள செட்டியோடு சிநேகங் கொள்ளல்	29
5	மதன மஞ்சுஷை திருமணம்	36
6	ஸ்ரீபாலனை தவள செட்டி சமுத்திரத்தில் தள்ளுதல்	40
7	குணமாலை திருமணம்-தவள செட்டி ஸ்ரீபாலன் மேல் நீசத்துவம் கற்பித்தல்.	49
8	ஸ்ரீபாலன் மதன சுந்தரியிடம் போய்ச் சேர்தல்.	87
9	ஸ்ரீபாலன் தன் சொந்த இராஜ்ஜியத்தை அடைதல்.	98
10	ஸ்ரீபாலனுக்குச் சொந்த இராஜ்ஜிய பட்டாபிஷேகம்.	106

உதயணன்.

இது சிறு பஞ்ச காவியங்களிலொன்ருய்ச் செய்யுள் ரூபமாக இருந்த உதயண காவியத்தைத்தழுவி வசன நடையில் எழுதி வெளியிடப் பட்டிருக்கிறது. இதில் பல நீதிகள் அடங் கியுள்ளன. இந்நூல் வாசிப்போர்க்கு மிக்கஇன்பத்தை யளிக்கும். வித்தியார்த்திகளும் செந்தமிழ்பயிலும்மாணவர்களும்விரும்பிவாசிக்கத் தக்கது. இதில் சொற்ப பிரதிகளே அச்சிட்டமையால் முன்னதாக எழுதுகிறவர்களுக்குத்தான் புத்தகம் கிடைக்கும்.

இதன் விலை. அணு 8.

"தருமசீலன்"

இது ஒவ்வொரு தமிழ் மாதந் தோறும் வெளி வரும் செந்தமிழ்ப் பத்திரிகை. இதில் கல்வி, வியாபாரம், ஜைன பெரியோர்கள் சரித்திரம், சங்க மருவிய நூற்கள் முதலிய விஷயங்கள் வெளி வரும்.

வருட சந்தா	ரூ.	1 0 0
வெளி நாடுகளுக்கு	,,	1 4 0

தருமசீலன் ஆபீஸ்,
26. ஆச்சாரப்பன் தெரு,
சென்னை, ஜி. டி.

59517

Dharmaseelan Press Madras.

6A
7-55

ஸ்ரீ

சரஸ்வதி விலாஸ புத்தக சாலை.

21. பாரிஷ் வெங்கடாசல அய்யர் தெரு,

சென்னை, ஜி. டி.

ஸ்ரீபாலன்.	0	10	0
உதயணன்.	0	8	0
சீவக சிந்தாமணி வசனம்	1	4	0
மேருமந்திர புராணம் முதல் சருக்கம்.	0	6	0
ஷ 2-வது சருக்கம்.	0	5	0
ஷ 3-வது சருக்கம்.	0	8	0
திருவெம்பாவை.	0	1	6
ஜினேந்திர ஞானத் திருப்புகழ்	0	8	0
சூளாமணி காவியம்.	2	8	0
சூளாமணி வசனம்.	1	0	0
ஜீவகன் (நாவல்.)	1	0	0
ஜீவகசிந்தாமணி உரையுடன்.	7	8	0
சிலப்பதிகாரம் ,,	8	12	0
உலோகதிசய விளக்கம்.	0	8	0
கண்ணகி	0	14	0